தஞ்சை சரசுவதிமகால் வெளியீடு எண். 128

# சித்தாந்த நிச்சயம்

(மூலமும் உரையும்)

வெளியிடுபவர் :
இயக்குநர்,
**சரசுவதிமகால் நூலகச் சங்கம்,**
தஞ்சாவூர்.

1991] விலை ரூ. 22/-

தஞ்சை சரசுவதிமகால் வெளியீடு எண். 128

# சித்தாந்த நிச்சயம்

(மூலமும் உரையும்)

பதிப்பாசிரியர் :

இராம. கோவிந்தசாமி பிள்ளை

தஞ்சை சரசுவதிமகால் வெளியீடு எண்—128.

திருநாவுக்கரசு தேசிகர் அருளிய

# சித்தாந்த நிச்சயம்

(மூலமும் உரையும்)

பதிப்பாசிரியர் :

பண்டித வித்துவான்,

**திரு. இராம. கோவிந்தசாமி பிள்ளை**

ஒய்வுபெற்ற சரசுவதிமகால் நூல்நிலையத் தமிழ் ஆராய்ச்சியாளர்

வெளியிடுபவர் :

இயக்குநர்,

**சரசுவதிமகால் நூலகச் சங்கம்,**

தஞ்சாவூர்.

1991] விலை ரூ. 22/-

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ஆங்கில முன்னுரை | 1—ii |
| 2. | முகவுரை | 1—x |
| 3. | பதிப்புரை | xi—xiv |
| 4. | நூலாசிரியர் வரலாற்றுச் சுருக்கம் | xv—xxxvii |
| 5. | சைவ சித்தாந்த சாத்திர நூல்கள் | xxxvii—Lxii |
| 6. | சித்தாந்த நிச்சய மூலம் | 1—48 |
| 7. | சித்தாந்த நிச்சய வுரை | 49—96 |
| 8. | செய்யுள் முதற்குறிப்பு அகராதி | 97—104 |
| 9. | அருஞ்சொற் பொருள் விளக்கம் | 105—128 |

## நூல் விளக்கக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | சித்தாந்த நிச்சயம் |
| பதிப்பாசிரியர் | : | திரு. இராமகோவிந்தசாமிபிள்ளை |
| வெளியிடுபவர் | : | மு. சதாசிவம் |
| | : | இயக்குநர், சரசுவதி மகால். |
| வெளியீடு எண் | : | 128 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | ஜூன் 1991 |
| தாள் | : | 14.2 கிலோ சேஷசாயி |
| நூல் அளவு | : | 21 x 14 செ.மீ. |
| பக்கங்கள் | : | 178 |
| படிகள் | ; | 1200 |
| எழுத்து | : | 12 பாயின்ட் |
| அச்சிட்டோர் | : | நாதன் அச்சகம் |
| | : | கீழவீதி, தஞ்சை. |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | சைவசித்தாந்தம் |
| விலை | : | ரூ. 22—00 |

# PREFACE

*Saiva Siddhanta philosophy, Which is considered to be the choicest product of South Indian intellect, has taken deep root in the life of a large section of Tamilians and has flowered into many monastic institutions since the fourteenth century A. D. The monks and heads of those monasteries were men of Light and religious experience, who have gathered sincere disciples around them. As teachers and guides in religion, they have compiled easy treatises for the benefit of their diciples. Siddhanta Nischaya is one such treatise compiled by one of the pontiffs of the Dharmapuram Mutt. Siddhanta Nischaya Urai, is not a regular commentary, as its title makes one expect. It is only a collection of authoritative passages from religious classics just meant to strengthen the ideas expressed in the text. Before the advent of printing, most of the teaching was personal and confined to a limited circle of disciples. The disciples, understanding the exposition communicated by the preceptor, noted down the important and authoritative passages for their future meditation. We can reasonably expect this Urai to be one belonging to this category.*

*The editor has followed the traditions of the institution which produced this text and commentary by adopting the monastic language and narrating episodes prevalent in those circles which may look improbable and out of tune with the times. However, those things also deserve to be preserved for future information.*

*This publication is mainly based on the following two palm leaf manuscripts preserved in our Library :*

*M. 734 (u) Siddhanta Nischayam*

*M. 735 (v) Siddhanta Nischaya Urai*

*We are thankful to Panditha Vidvan, Thiru Erama Govindaswami Pillai for his having taken pains to edit this work for our Library. As the retired Pandit of the Library and as the experienced editor of many of our Tamil publications, we are deeply indebted to him for all his services,*

*We wish to record here our sincere gratitude to the Government of Tamil Nadu for their generous grant which has made such publications possible.*

*THANJAVUR*
18—12—69

**N. KANDASWAMI,**
Honorary Secretary,
T. M. S S. M. LIBRARY.

# வேண்டுகோள்

கருணையுள்ளம் கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் முடங்கி உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் சரசுவதி மகாலுக்கு அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

மகாலுக்குக் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, பெருமைசால் சரசுவதிமகால் உள்ளளவும் பெறுவர், அவை பதிப்பாகி வருமாயின் சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் ஐந்து பிரதிகளும் பெறுவர்.

எனவே, ''நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்'' என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளைச் சரசுவதி மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறேன்.

தஞ்சாவூர்,
9—12—89.

**மு. சதாசிவம்,** எம் ஏ.,எம்.லிட்.,
*இயக்குநர், சரசுவதிமகால் நூலகம்.*

உ

குருபாதம்

# சித்தாந்த நிச்சயம்

(உரைநூல்)

## முகவுரை

விநாயகர் வணக்கம்

"திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்"

எல்லா வுலகமும் ஆனாய் நீயே
ஏகம்பம் மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதீ.

நாற்புறமுங் கடலாற் சூழுண்ட நானிலவளாகமாகிய இந்நிலவுலகினிற் காணப்படும் உயிர்த்தொகுதிகள். இயங்கியற் பொருளும் நிலையியற் பொருளும் என இருவகைப்படும். நிலையியற் பொருள் தாவரங்களாம் இவை ஓரறிவு உயிர்வகை இருபது நூறுயிர யோனி

பேதங்களாகும். நால்வகைத் தோற்றமும் எழுவகைப் பிறப்பும், எண்பத்து நான்கு இலக்கம் யோனிபேதங் களும் ஆயவற்றுள் தாவரமாகிய ஓரறிவுயிர் போக ஏனைய அறுவகைப் பிறப்புக்களும் ஈரறிவு முதல் ஆறறிவு அந்தமாக உள்ள உயிர்கள் அறுபத்து நான்கிலக்கம் யோனி பேதங்களாகும். இவற்றுள் மானுடர், ஒன்பது இலக்கம் யோனிபேதங்களாகும். நரர்பயில் தேயம் தன்னுள் நான்மறை பயிலாநாட்டில். விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்க புண்ணியந்தான் ஆகும். என்ற சாத்திரப்படி தக்கவின்ன, தகாதன இன்ன வென்று ஒக்கவுன்னும் உயர்வுறும் மக்கட்பிறப்புற்றவர்களுள் வேதம் ஆகமம் ஆதிய நூல்கள் வழியொழுகுங் கடப்பாட்டினர் எவரோ அவர் வைதிக மார்க்கத்தினர் எனப்படுவர். அவருள் மூலாகம உபாகமங்களும் சரியையாதி நாற்பாதங்களைப் பற்றியொழுகுஞ் சீலர்களே வைதிக சைவ சமயிகள் எனப்படுவர்.

இந்நெறியின்கணின்றொழுகுபவர் பத்தர் எனவும் சித்தர் எனவும் படுவர். பத்தி நெறியினிற்பவர் முத்திறத் தொண்டரெனப்படுவர். அவர்கள் குருலிங்க சங்கம பத்தியின்கண் நின்று சித்தாந்த முத்தியினை யெய்துவர். இவர்கள் வேதநெறிக்கும் சைவநெறிக்கும் அப்பாற்பட்டவர் சைவநெறியாகிய ஆகம மார்க்கத்தினின்றொழுகுபவர் தவமார்க்க சன்மார்க்கமாகிய சரியை கிரியை, யோகம், ஞானம் ஆகிய நாற்பாதங்களினின்றொழுகி சாலோக சாமீப சாரூப சாயுச்சியமாகிய பதமும் பரமும் ஆய சித்தாந்த முத்தியினை யெய்துவர், பண்டை நற்றவத்தாற்றோன்றிப் பரமனைப்பத்திபண்ணும் தொண்டரைத் தானே தூயகதியினிற் றொகுப்பன் மார்க்கர் கண்டநூலோதி வீடு காதலிப்பவர்கட் கீசன் புண்டரீகத்தாள் சேரும் பரிசினைப்புகலலுற்றும், சிவஞானசித்தியார் வாக்கும் இதனை வலியுறுத்தா நிற்கும்.

இவ்விரு நெறியினருக்கும் முத்தியொன்றெனல் சைவ சாத்திரங்களின்றுணிபு. ஆறறிவுற்றுத் திகழும் மக்கள் மலப்பிணிப்பால் விஞ்ஞான கலர் பிரளயாகலர் சகலர் எனப்பெறுவர். இங்ஙனம் கூறுவது சைவசித்தாந் தம். உலகினில் தோன்றின மறைதலும். மீண்டுந் தோன்றிவரலும் கண்கூடு. பிறத்தலும் இறத்தலும் ஆகவருவதை யாவருமறிவர். பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம். பிறவாருறுவதுபெரும் பேரின்பம், எனவரும் வாக்கியங்களையும் நோக்கல் வேண்டும். இறைவனால் உயிர்கட்கு வினைகளுக்கேற்பத் தனுகரண புவன போகங்கள் கொடுக்கப்பட்டவையாம். வினைப் போகமுற்றியவழி தனுவழிந்துவிடும். உடலார் அழிவர், உயிரார் அழியார் என்பது திருமந்திர நூல்.

உயிர்களின் தன்மை ஒருபொருளினை வேண்டுதலும் வேண்டாமையு முடைமையாம். இதனால் உயிர்கட்கு வினையருவப்பட்டு, பிராரத்த ஆகாமிய சஞ்சிதங்களாகி வருகின்றன. இறைவன் இவ்விரண்டுமற்றவன்,

> ''வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
> கியாண்டு மிடும்பை யில''. —என்பது பொதுமறை.

இதனானும் அவைபெறப்படும்.

வினையினீங்கி விளங்கிய அறிவினையுடைய பரமனாகிய இறைவனை வினையினீக்கி விளக்கப்படும் அறிவினையுடைய உயிர்கள் வழிபட்டேயுய்தியினை யெய்துதல் வேண்டும்.

இத்தனுவாகிய உடலின் இயல்பிதுவென்று மணிமேகலை பின்வருமாறு அறிவியா நிற்கும்,

அஃதாவது;—

> வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
> புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
> மூத்து விளிவுடையது தீப்பிணி யிருக்கை

பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங்கு அரவின் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை இது.

என்பதாகும்.

இத்தன்மைத்தான உடலினை மேற்கொண்ட மக்களுயிர் வந்தவாறு ஏது. போமாறு ஏது என ஆயமுற்படல் வேண்டும்.

உயிர்க்குக் கூத்தன் எனவும் ஒருபெயருண்டு இக் கூத்தன் உடலினை விட்டுப் புறப்பட்டால் உடல்நிலை எவ்வாறுளதென்பதனைப் பின்வரும் நாலடியார் செய்யுள் நன்கறிவியா நிற்கும்.

அது வருமாறு:—

வெண்பா

"நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்ருய்ந் தடக்கிலென்
பார்த்துழிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டக் கால்".

என்பதாம்.

தெய்வம் என்பதோர் சித்தமுண்டாகி "பல்லூழி காலம் பயின்றரனை யர்ச்சித்தால் நல்லறிவு சற்றே நகும்' என்னும். நல்லறிவு புலப்பட்டபோது தெய்வ முண்டெனுஞ் சமயங்களைச்சார உயிர்கள் முயல்வது இயற்கை. அங்ஙனம் உயிர்கள் முயல்கையில், தத்துவக் கூறுபாட்டினையும் பதி பசு, பாசங்களினியல்பையும் உணர்தல் கூடும். பாசநீக்கமும் பதியருள் பதிதலும் உற்ற பாசவலி தொலைத்த பசுக்கள் பதியினோடு இரண்டறக் கலத்தலே சித்தாந்த முத்தியென்பது ஆம் எனலைத் தெளிவியா

நிற்கும் சித்தாந்தம் என்பதியாதெனத்துருவின். ''சிவா கமங்கள் சித்தாந்தமாகும். மதம் முடிந்த முடிபென்ப தாம். வேதாந்தம், வேதங்களின் முடிபு. பொது. சிவாகமம் சித்தாந்தம். சித்தம்—முடிபு, அந்தம்-முடிபு வேதாந்தத்தின் முடிபே முடிபாக்கொண்டது என்பது போதரும். இதுபற்றி, சித்தாந்தசாத்திரம் சித்தாந்த சாராவளி, சித்தாந்த சிகாமணி. சித்தாந்த சிரோமணி, சித்தாந்த சைவம் சித்தாந்த தீபிகை, சித்தாந்தார்த்த சமுச்சயம், என்பவை கூறும் சத்திநிபாதமுடைய உத்த மர் பொருட்டுச் சிவபெருமானு லருளப்பட்ட மூலாகமம் சித்தாந்தக்கலை, அது ஞானபாதம், யோகபாதம், கிரியா பாதம், சரியாபாதம் என்று நான்கு பாதங்களுடையது.

ஞானபாதத்தில் பரமசிவனுடைய சொரூபமும் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்னும் ஆன்மாக் களின் வடிவமும், ஆணவம், காமியம், மாயேயம், வைந் தவம் திரோதான சத்தியென்னும் பாசங்களின் வடிவ மும், சத்தியின் வடிவமும், சிவதத்துவமுதல் பிருதுவிதத் துவம் வரை முப்பத்தாறு தத்துவங்களுடைய தோற்ற மும், இவை ஆன்மாக்கள் போகம் புசிக்கைக்குக் கரு வியா முறைமையும், புவனங்கள், புவனேசர் வடிவங்க ளும், புவனங்களின் யோசனைப் பிரமாணங்களும், அதமப் பிரளயம், மத்தியமப் பிரளயம், மகாப்பிரளயங்களின் உருவமும். அந்தப் பிரளயங்களின் பின்னர்ச் சிருட்டியா முறைமையும் பாசுபதம் மகாவிரதம், காபாலம் முதலிய மதங்களின் உருவமும் கூறப்படும்.

யோகபாதத்தில் இந்த முப்பத்தாறு தத்துவங்களும் தத்துவேசரும் ஆன்மாவும் பரமசிவனும் சத்தியும் உலகிற்குக் காரணமான மாயை மாமாயைகளைக் காணும் வன்மையும், அணிமாதி சித்திகளுண்டா முறைமையும், பிராணயாமம், பிரத்தியாகாரம், இயமம், நியமம், ஆசனம், தியானம், தாரணை, சமாதியென்னும் அட்டமா

யோகங்களின் முறைமையும், மூலாதாரம் சுவாதிட்டானம் முதலிய ஆருதாரங்களின் முறைமையும் கூறப்படும்.

கிரியாபாதத்தில் மந்திரங்களின் உத்தாரணம், சந்தியாவந்தனம், பூசை செபம்வேள்விகளும், சமய விசேடநிருவாண ஆசாரியாபிடேகங்களும், புத்திமுத்திக்குபாயமான தீக்கையும் கூறப்படும்.

சரியாபாதத்தில் பிராயச்சித்த விதியும், பவித்திர விதியும் சிவலிங்க இலக்கணமும் உமாமகேசுர முதலிய வியத்தா வியத்த இலிங்கங்களினிலக்கணமும், நந்தி முதலிய கணநாத ரிலக்கணமும், செபமாலை, யோகபட்டயம், தண்டம், கமண்டலம் முதலியவற்றின் இலக்கணமும் அந்தியேட்டி விதியும் சிரார்த்த விதியும் கூறப்படும். இங்ஙனமுறை வகுத்துரைப்பது சித்தாந்தமாகும்.

பண்டார மும்மணிக்கோவை யெனுநூல் கூறுவது கொண்டு அது துணியப்படும்.

"ஞானசம்பந்த ஞானதேசிக
நல்லருட்டிறத்தால் நம்பி நீயே
பல்லுயிர்த் தொகுதியும் பயங்கொண்டுய்கெனக்
குடிலை யென்னுந் தடவயல் நாப்பண்
அருள்வித் திட்டுக் கருணைநீர் பாய்ச்சி
வேதமென்னும் பாதவம் வளர்த்தனை
பாதவ மதனிற் படுபயன்பலவே

அவற்றுள்,

இலைகொண்டு உவந்தனர் பலரே இலையோரீஇத்
தளிர்கொண்டு உவந்தனர் பலரே தளிரோரீஇ
அரும்பொடு மலர்பிஞ் சருங்கா யென்றிவை
விரும்பினர் கொண்டுகொண்டு உவந்தனர்பலரே
அவ்வா றுறுப்பு மிவ்வாறு பயப்ப

ஓரும் வேதாந்தமென்று உச்சியிற் பழுத்த
ஆராவின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்ட சைவசித் தாந்தத்
தேன் அமுது அருந்தினர் சிலரே''

இதனற் சித்தாந்தத்தின் உயரிய கொள்கையும் பயனும் ஏனைப் புறச்சமயங்களோடு ஒப்புநோக்கி ஆராய்ந்துபார்த்தால் நன்கு புலனுகும்.

ஒப்பும் உவமையுமில்லாத் தனிமுதற் பொருளாகிய பரமசிவன் தன்னேடு பிரிவின்றியுள்ளதாகிய சத்தியோடு சாலரை உய்வித்தற்கு இலயபோக ஆணைக் கேற்பச் சத்தன். உத்தியுத்தன். பிரவிருத்தன் என மூன்று கருத்தாவாகி,மறையாகம மூலமாகத்தருமார்த்த காம மோட்சமாகிய நாற் பொருள்களையும் உணர்த்தி. உயிர்கட்கு ஐந்தவத்தையுண்டாக்கியும் பஞ்சமலஉபாதி தனக்கற்றவனுய், உயிர்கள் கருமபோகம் அநுபவித்து மலபரிபாகம் எய்துதற்பொருட்டு ஆறு அத்துவாக்களை யும் நித்தபரிக்கிரக சத்தியால் விரித்து முத்தொழில்களை அதிநுட்பமாயும். தூலமாயும் நிகழ்த்துதற்கு அத்துவாக் களினிடம் நிட்களம், நிட்களசகளம், சகளம் என்னும் முக்கூற்றுச்சிவன் முதலிய எழுவகைத் திருமேனிகளை யுங்கொண்டு முற்றறிவு முதலிய எண்குண வடிவினுய் உணரப்பட்டுச் சோகம் பாவனையால் உள்ளத்தில் துவித மற்று ஏகனுய் நிலைபெற்று நிற்க அவனது திருவருளால் உலகம் உண்மைச் சிவாநுபவத்தை யுள்ளவாறுணர்ந்து உய்தற் பொருட்டுச் சைவ சித்தாந்தப் பெருநெறியினை எடுத்துக் கூறும் நூல்கள் வடமொழியில் அட்டா தச வித்தையும், தமிழ்மொழியில் தேவாரத் திருமுறைகளும் பிறவுமாம். இக்கொள்கைபற்றியே திருஞானசம்பந்தப் பெருமானும், ''ஆகமத்தொடு மந்திரங்களமைத்த சங்க தம், வேதம், அங்கம், பதினெட்டு சூதன் ஒலிமாலை யென்றே கலிக்கோவைச் சொல்லே தமிழ்ச்சொலும், வடசொலும், ஊறுமின்றமிழ், எனப் பலவிடத்தும்

பலபடப் புகழ்ந்து பாராட்டியுள்ளார். இவ்விருமொழியிலும் சித்தாந்த முத்திநிலையைக் கூறும் வசனங்களே. பிரபல சுருதி வாக்கியங்களாகும்.

அம் முத்திநிலையாவது :—

ஓதிய முத்தி யடைவே யுயிர்பர
பேதமி லச்சிவ மெய்துந் துரியமோ (டு)
ஆதி சொரூபஞ் சொரூபத்த தாகவே
யேதமி லாநிரு வாணம் பிறந்ததே''.

என்று திருமந்திரமாலையிற் கூறியபடி நிர்வாணமேயாம்.

இந்நிலையைப் பெற்றுற்றவர், வைதிக சுத்தாத்துவித சைவத்தின் மாறுபட்டனவற்றையும் சிவாநுபவத்திற்கு விரோதப்பட்டனவற்றையும் பேசுதல் ஒழிந்தார். ஆதலின் அன்னுரைக்கற்றற்றவர் சுற்றற்றவர் என்று திவ்வியசூக்திகள் கூறும் இத்தகைய முத்திநிலையையும் சிவானந்தத்தையும் மலைவுதீர்த்துக் கூறும் இந்நூல் தருமபுரஆதீனம் ஒன்பதாவது குருமூர்த்திகளாய் எழுந்தருளிய திருநாவுக்கரசு தேசிகர் தம் ஞானாசாரியராகிய அழகிய திருச்சிற்றம்பல தேசிகரது அநுக்கிரகத்தின்படி அருளிச் செய்தது.

இந்நூல் ஏகான்மவாதிகள் கூறும் நிர்உபசரித ஐக்கியத்தையும் அகச்சமயிகளுட் சிலர் கூறும் சிவசமவாதத்தையும், ஈசுவர அவிகாரவாதத்தையும், பரிணாமவாதத்தையும், சிவாத்துவிதத்தையும் மறுத்து

''உற்றசரியை யொழியாத நற்கிரியை
குற்றமிலா யோகக் குறிநெறியும்—முற்றிப்
பிறந்தார் பதிபசுபா சந்தெரிந்து'' சிவனடிசேர்தல்

என்னும் உபசரித சுத்தாத்துவித சைவ சித்தாந்தப் பரஞானத்தை உணரப் போதித்தலின்:

அஃதாவது சைவாகமங்களின் பொருள் நிச்சயத்தை யுணர்த்தலின் ''சித்தாந்த நிச்சயம்'' எனப் பெயர் பெற்றது. இந்நூலை யுற்றுநோக்குவார்க்கு இவ்வுண்மை தானேபுலனாகும்.

இந்நூலினை யாத்த குரு மகாசந்நிதானமவர்கள், மறையாகமங்களின்வழியே சுத்தாத்துவித நிலையைப் பொருந்துமாற்றான் தருக்கமாகிய நியாயவாயிலாகச் சத்தியசோதி வாகீசமுனிவர் முதலிய ஞானநெறிச் செல்வருடைய கருத்துக்களைத் தழுவி, ஆணவமலத்தின் இருவகை இயல்பையும்; அஃதுஉயிரைப் பந்தித்திருக்கும் கேவலநிலையையும், கலாதிகள் வேறுபடுத்த சகல நிலையையும் ஏதுக்களானும் எடுத்துக்காட்டுக்களானும் காட்டி, ஆணவமலமானது உள்பொருள் அன்று. திரவியம் அன்று என்பாரையும் மாயாகாரியமாகிய அவைராக்கிய மான இராகமே ஆன்மஞானாவராக மென்பரையும், மாயையே தனு புவன காரணமாய் வேறுநின்று ஆன்மாவின் இச்சை ஞானக் கிரியைகளை மறைக்கு மென்பாரையும், ஆன்மாவின் இயற்கையும் குணமாகிய அஞ்ஞானமுமே ஞானத்தைத் தடுக்கும் என்பாரையும் மறுத்து, ஆணவமலத்தின் மோகமுதலிய குணங்களையும், அவை ஆன்மாவை யிடர்ப்படுத்தும் ஆற்றையும் பூத இருள் போலன்றி அம்மலம் தன்னையும் தன்னுட் செறித்து அணுத்தன்மைப் படுத்த உயிரையும் காட்டாத தன்மையையும் அம்மலத்தைத் தரிசிக்கும் வழியையும், அம்மலம் இல்லை யெனிற்படும் இழுக்கையும் விவரித்து, இம்முகத்தானே குறிப்பாக ஆணவமலமானது பதி ஞானத்தின் மேற்படராமலும் சிற்சத்திக்குக் காரியத்திற் பிரவிருத்தி வாராமலும் விடயசிற்சத்தி காரியமாகிய இச்சா ஞானக்கிரியைகளையே தடுக்குமெனவும், பராசக்தி யோகத்தாலும் கலாதியோகத்தாலும் ஆன்மாவிற்கு இன்னபயன் உண்டாகுமெனவும், பரமசிவனுடைய

பரங்கருணையாகிய சிற்சக்தியொன்றனே ஆணவ மலத்தின் வீக்கம் நீங்குமெனவும், இந்நீக்கத்திற்கு சிவப்பேறு எய்தலே முதல்வனும் உயிரின்கண் கலந்த வழி ஆனந்தசொரூபமாய் நிற்பதுவே. வேத ஆகம சம்மத மாக விளங்குஞ் சுத்தாத்துவித சித்தாந்தவைதிக சைவ முத்தியாம் எனவும் நிலைநாட்டிச் சித்தாந்தநிச்சயஞ் செய்தருளுகின்றனர், என்பதே போந்த பொருளாம்.

இந்நூலும் உரையும் கருத்தான் ஒருவகையால் ஒற்றுமையுடையதாகக் காணப்பெறுகின்றது. இந்நூல் நிலையப் பிரதியும், தருமையாதீனப் பிரதியும் ஒருவாறு ஒப்புநோக்கிச் சிதைவுற்ற பகுதிக்கு ஏற்ற பாடமுங் கண்டு ஒருவகையாகச் செப்பஞ் செய்யப்பட்டுள்ளது. இதற்குத் தனித்தமுறையில் ஓருரைகாணல்வேண்டும். அதுபோது உரையெனும் இம்மேற்கோள் ஒப்புமைப் பகுதியை அடுத்தடுத்து இயைத்தல்வேண்டும். அது போது இந்நூல் பெரிதும்பயன் தருவதாகக் காணப் பெறும்என்பது ஒருதலை, முத்தி நிச்சயப் பேருரைபோல சித்தாந்த நிச்சயப் பேருரையும் வரல்வேண்டும். திருநாவுக்கரசு சுவாமிகள் திருவடி வாழ்க,

இங்ஙனம்,

பண்டித வித்துவான் **இராம. கோவிந்தசாமி பிள்ளை,**

திருவையாறு
14—11—68

முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

—: ❋ :—

உ

# சித்தாந்த நிச்சயவுரை

## பதிப்புரை

களித்துக் கலந்ததொர் காதற்
கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் னின்ற
இப்பத்தரைக் கோதில் செந்தேன்
துளித்துச் சுவையமு தூட்டி
யமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வ மாக்கு
மையாற னடித்தலமே

என்பது (திருநாவுக்கரசர்)

இந்நூல் *M*. 734 (*U*) சித்தாந்தநிச்சயம்
,, *M*. 735 (*V*) சித்தாந்தநிச்சயவுரை

இவை

இச்சரசுவதி நூல்நிலையக் (கேட்லாக்) சுவடி வரிசை நூல் 2-ம் பகுதியில் காணப்பெறுவன.

சித்தாந்த மியாதென்று சிந்திப் பவர்தமக்குச்
சித்தாந்த நிச்சயத்தைச் செப்பவே—முத்தனும்
ஐம்முகத்தான்தந்த அருட்கதி ரோன் போல்விளங்கும்
கைம்முகத்தா னேமிகவுங் காப்பு,

எனக் காப்புக்கூறிப் பின்னர்,

ஒருமைய தாகுஞ் சிவனந்த முத்தி யினைமொழியப்
பெருமைசெய் முத்தி பிரானுக் கிணையெனப் பேசுவது
பருமையொழியுமின் சித்தாந்த மீதெனப் பாரின்வந்து
தருமை யழகிய சிற்றம் பலகுரு சாற்றினனே,

என்ற பாடலால் தனக்குபதேசித்த குரு அருட்டிரு அழகிய சிற்றம்பல தேசிகர் என்பது புலப்படாநிற்கும்,

ஒருமைதரும் சிவன் ஆனந்த முத்தியது ஒன்றொழியப்
பெருமைசெய் முத்திபிரானுக் கிணையென்னும் பித்தர்
[சொல் நீத்து
அருமையுடைய சித்தாந்தமீ தென்ன வருளுருவாந்
தருமையினுவுக் கரசசம் பந்தனுஞ் சாற்றினனே''

என்னுங் கட்டளைக் கலித்துறையால் இந்நூல் யாத்தவர் திருநாவுக்கரசு தேசிகர் என்பதுபுலனாயிற்று இந்நூல் நிலையக் கையெழுத்துப் பிரதியையும் தருமையாதீனப் பிரதியையும் வைத்துக்கொண்டு மூல பாடத்தையொருவாறு செப்பஞ்செய்யலாயிற்று நூல் நிலையப்பிரதியில் இல்லாத காணப்பெறாத சில செய்யுட்களையும் பாடபேதங்களையும். அகர, ஆகார; இகர. ஈகாரக்குறியிட்டும் உடுக்குறிமுதலியன காட்டிச் சுட்டியும் குறிக்கப்பெற்றுள்ளன உரைப்பிரதிக்கொத்த பிரதிகிடைத்திலது. ஆகலின் கையெழுத்துப் பிரதியாகிய உரையினைக்கொண்டு அவ்வப்பாடலுக்குரிய நூல்களிற் கண்ட, தேவாரத் திருமுறைப்பாடல்களையும், சித்தாந்த சாத்திரங்களாகிய சிவஞான போதம் சிவஞானசித்தியார் சிவப்பிரகாசம், இருபாவிருபஃது, திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, துகளறுபோத முதலிய ஞானநூல்களிற்கண்ட சுத்தாத்வைத சித்தாந்தமுறைக் கூம் செய்யுட்களையும் செப்பஞ் செய்து கொள்ளப்பட்டது. ஆயின் இவ்வுரையினை மேற்கொண்டு அவ்வப் பாடலுக்கேற்ப அமைதியினையும், சித்தாந்தத்தையும் கோடல் வேண்டும். உரை யெழுதினவர் ஞானதேசிகர்பால் உப தேசம் பெற்றவரோ, அன்றிப் பாடங் கேட்டவரோ

அறிதற்கியன்றிலது. இந்நூல் தருமையாதீனக் குரு மூர்த்திகளால் பரம்பரையாக உபதேசிக்கப்பட்டு வந்தது போலும். இந்நூற் பொருளை யறிவது மரிதேயாகும். இந்நூலில் பதி பசு பாசங்கட்கிட்ட பரிபாடைச் சொற் கொண்டு பொருள்கோடல் வேண்டுவது மின்றியமை யாதது. பின்வரும் பாடல்கள் சித்தாந்த மீதெனவே நிச்சயிக்கும். அவை வருமாறு,

சொன்னதற் சித்தியின் உண்மையை
நீயுந் துணிந்தறிய
முன்னவ னனந்தம் தன்னமு
தார முயன்றருந்திப்
பின்ன மிலாமல் இருப்பர்
என்று ஆகமம் பேசியதால்
அன்னியம் விட்டுச் சிவானந்த
முத்தியென் றேயறையே

ஆருப் பரம்பார்த் திருப்பர்
பதார்த்தம்பா ரார்களென்றும்
கீரு விருண்மல நீங்க
வரனடிக் கீழிருப்பார்
மாருச் சிவானு பவமாவி
யென்றும் வயிந்தவமோ
தேருக் கலக்கமென் றுஞ்சித்தி
நூலிடைத் தேர்ந்தனமே

இங்ஙனம் இயம்பும்பாடல்கள் கொண்டு தெளிதல் வேண்டும்.

இந்நூலினையும் உரையையும் அச்சிடல்வேண்டு மெனும் அரசியலார் தருமபுரவாதீனத்திற்கும் தஞ்சை யையாண்ட மராத்தியமன்னருக்குந்தொடர்பும் அவ் வாதீனத்திற் தெய்வீகத்தன்மையைக்கண்டு அர்த்த யாமக் கட்டளைக்குரிய நிபந்த முதலியன வைத்திருப்

பதும்கொண்டுபோற்றற்பாலதாகும், இவ்விரிய நூலுரையினை யச்சிற்பதிக்க வேண்டுமெனும் ஆணைபுரிந்திட்ட (சரசுவதிமகால் நூல்நிலையக்கௌரவ காரியதரிசி) பன்மொழிகளும் பல்கலைகளும் ஆய்ந்த பேரறிஞர் கனம் நீ. கந்தசாமி பிள்ளையவர்களுக்கு தமியேனின் உளம் ஆர்ந்த நன்றி யுரித்தாகுக.

வாழ்க சரபோசி மன்னர்
நூல்நிலையம் நின்று நிலவுக.

இங்ஙனம்,

பண்டித வித்துவான் **இராம. கோவிந்தசாமி பிள்ளை,**

திருவையாறு 14—11—68 } ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர்.

[சரசுவதிமகால் நூல் நிலையம்]



# திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீன குரு பரம்பரை வரலாறு

பரங்கருணைத் தடங்கடலா யிலகும் பரம் பொருளாகிய பரசிவம் சகள நிட்களத் திருமேனிகொண்டு சதாசிவமூர்த்தியாய் நின்று காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்களையும் தோற்றுவித்துப் பிரணவர் முதலிய பதின்மரும் மகாருத்திரர் முதலிய பதினெண்மரும் ஆகிய இருபத்தெண்மருக்கும், ஒரு பொருளை வேறுவேறு வகுத்துக் கூறுகின்ற பிரதிசங்கிதை முறையானே ஒரோவொன்று ஒவ்வொருவருக்கு அருளிச்செய்து பின்பு வெவ்வேறு வகைப்பட்ட பலவற்றைத் திரட்டிக் கூறுகின்ற மௌளிக முறையானே அனந்த தேவருக்கு அருளிச் செய்தார்.

அவற்றை அனந்த தேவர் சீகண்டருத்திரருக்கு அருளிச்செய்ய, அவர் நந்தியெம்பெருமானுக் கருளிச் செய்தார். அங்ஙனமாகக் கேட்டருளிய திரு நந்தியெம் பெருமான் சீகண்டரை வணங்கி நின்று, சரியையாதி நாற்பாதங்களும் சிவாகமங்கடோறும் வேறு வேறாகக் கூறப்படுகின்றமையின் உண்மையாவது இதுவென் றருளிச் செய்ய வேண்டுமென விண்ணப்பஞ் செய்ய சீகண்ட முதல்வர் 'கற்பந் தோறும் படைப்பு வேறுபாடும் கேட்போர் கருத்துவேறுபாடும்பற்றி அவற்றிற்கு இயைய சரியை முதல் மூன்று பாதங்களும் பலதிறப் படக் கூறப்பட்டன. ஞானபாதமோ பொருட்டன்மை யுணர்த்துவது. குருவுக்கு உபதேசித்தமையால் இரௌரவமெனப் பெயர்பெற்ற ஆகமத்துள்ள பன்னிரு சூத்திரங்களடங்கிய சிவஞானபோத மென்பதோர்

படலத்தைக் கேட்டார்க்கு எல்லா ஆகமப் பொருளும் மாறுகோளின்றி விளங்கும்'' எனக்கூறிச் சிவஞான போதத்தைத் திரு நந்தியெம்பெருமானுக்கு அருளிச் செய்தார். அவர் சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனாதனர், சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்கிர பாதர், திருமூலர் முதலியோர்களுக்கு அருளிச்செய்தார்.

அவர்களுள் சனற்குமாரரால் உபதேசிக்கப்பட்டு வந்ததே மெய்கண்ட சந்தானத் தருமபுரவாதீனக் குரு பரம்பரை யாகும். அது பின்வருவனகொண்டு துணியப் பெறும். சனற்குமாரர்பால் சத்தியஞான தரிசனிகளும் அவர்பால் பரஞ்சோதி முனிவரும் உபதேசம் பெற்றனர்.

பரஞ்சோதி மாமுனிவர் திருவெண்ணெய் நல்லூரில் அவதரித்து மெய்யுணர்வின் முற்றும் பேறுடையராய்த் திகழ்ந்த சீமெய்கண்ட தேவருக்கு அருளிச்செய்ய, அவர் பால் திருத்துறையூர் சகலாகம பண்டிதராகிய அருணந்தி சிவாசாரியரும் அவர்பால் மறைஞானசம்பந்த சிவா சாரியரும் அவர்பால் உமாபதி சிவாசாரியரும் பரம்பரை யாக ஞானோபதேசம் பெற்றுவந்தார்கள். உமாபதிசிவா சாரியர் பச்சுச்செட்டியார் என்னும் காரணப்பெயருடைய அருள் நமச்சிவாயருக்கு உபதேசித்தருளினர். உமாபதி சிவாசாரியரும் அருணமச்சிவாயரும்மறைஞானசம்பந்தர் பால் உபதேசம் பெற்றவர்கள் என்று வழங்கப்பெறினும் ஆசாரியாபிடேகம் பெற்றும் பீடாதிபதியாக ஒருவர் பின் ஒருவராக எழுந்தருளியிருந்து கயிலாய பரம்பரையை விளக்கவந்த முறையில் உமாபதிசிவம் முன்னரும் அருணமச்சிவாயர் பின்னருமாக வைத்துக் கணக்கிடப் பெறுகின்றனர்.

அருணமச்சிவாயர்பால் உபதேசம் பெற்றார்காழிக் கங்கை மெய்கண்டார், இவர் காழியம்பதியில் அவ தரித்துக் கங்கை கொண்ட சோளேச்சரத்தில் எழுந் தருளியிருந்தமையால் காழிக்கங்கை மெய்கண்டார்

என்னும் திருநாமம் பெற்றார். அவர்பால் உபதேசம் பெற்றார் காழிப்பதியில் தோன்றிய பழுதைகட்டிச் சிற்றம்பல நாடிகள்.

இவரது பெயரிலிருந்து இவர் யாக்கையை வெறுத்துப் பழுதையைக் காலிற் கட்டியிருந்தார். எனத் தெரிகின்றது. இவர் மயிலாடுதுறையென்னும் கவுரிமாயூரம் சேர்ந்து, பக்குவிகளாகிய அறுபான்மூன்று மாணாக்கர்களுக்கு ஞானோபதேசஞ் செய்து கொண்டிருந்தார் இவர் சமாதியடைந்த இடம் சித்தர்காடு என வழங்கப்படுகின்றது இவரும் இவர் மாணவர்களும் இயற்றியுள்ள நூல்கள் சிற்றம்பல நாடிகள் சாத்திரக்கொத்து என்னும் பெயரோடு தொகுக்கப் பெற்றுள்ளன.

அம்மாணவர்களுட் சிறந்தார் கச்சி ஞானப்பிரகாசர், பழுதைகட்டிச் சம்பந்த தேசிகர், சிவபுரம் ஞானப்பிரகாச தேசிகர், தத்துவப்பிரகாச தேசிகர் என்போராவார். இந்நால்வருட் கச்சி ஞானப்பிரகாசர், காஞ்சிபுரம் சென்று ஞானபீடாபதியாக எழுந்தருளியிருந்தார். மற்றைய மூவரும் ஒருவர்பின் ஒருவராக இருந்துவந்தனர். சிவபுரம் தத்துவப் பிரகாச தேசிகரிடத்தில் அருள் பெற்றார் பலராவர். அவருள் ஒருசாரார் திருவாரூர் அபிடேகக் கட்டளை, அன்னதானக் கட்டளைகளைப் புரந்துவந்தனர். மற்றொருசாராருள் சிறப்புடையார் பழுதைக்கட்டிச் செட்டித்தெரு ஞானப்பிரகாச தேசிகர். இவர் திருவாரூர் அரசாங்கக் கட்டளையைப் பரிபாலித்து வந்தார். பழுதைக்கட்டிச் செட்டித் தெரு ஞானப் பிரகாச தேசிகர்பால் அருள்பெற்றார் சிதம்பரநாத மாசிலாமணி கமலை ஞானப்பிரகாச தேசிகர். இப்பெரியார் குரு உபதேசம் பெற்றதோடு திரு ஆரூர் சித்தீச்சுரத்தில் எழுந்தருளியிருக்கும் தென்முகப் பரமாச்சாரியர் திரு முன்னர் அசரீரிவாக்கினால் ஞானப்பிரகாசர்

எனும் திருப்பெயர் அருளப்பெற்றுச் சிவஞான நிட்டை யிலிருந்து சிறப்புடனிலகினார்.

ஞானப்பிரகாசருடைய மாணுக்கர் பலருள் சிறப்புடையார் தருமை குரு ஞானசம்பந்த தேசிகசுவாமிகள் அவர்கள் தம்குரு வாணைப்படி தருமைவந்து ஆதீன முதற் குரவராக எழுந்தருளியிருந்து ஆனந்த பரவச தேசிகர், சச்சிதானந்த தேசிகர், மாசிலாமணி தேசிகர் முதலிய பல மாணவர்கட்குச் சிவஞானோபதேசஞ் செய்து கொண்டிருந்தார். இதனுற்ருன் தருமையாதீனக் குரவர்கள் திருக்கயிலாய பரம்பரை திருநந்திமரபு மெய் கண்டசந்தான குரவர்களெனப் போற்றப்பட்டு வருகின்றனர்.

முதலாவது :

## குரு ஞானசம்பந்த சுவாமிகள் வரலாறு

பாண்டிவள நாட்டில், பல்வளமும் பழுநிய ஸ்ரீ வில்லிபுத்தூரில், சுமார் நானூருண்டுகட்கு முன்னர், சீருற்ற சைவ வேளாளர் குலத்தில், சிவநேசச் செல்வமிகுந்த சுப்பிரமணிய பிள்ளை யென்பவர் செய்த சிவபூசா புண்ணிய பல மேலீட்டினுல், அவர் மனைவியாராகிய கற்பிற் சிறந்த மீனுட்சியம்மையாரிடத்தில் நன்மங்கல முகிழ்த்த நிறைந்த சோமவார தினத்தில் திருவவதாரஞ் செய்தருளினுர். இரு முதுகுரவர் களிப்புற்று ''ஞான சம்பந்தன்'' எனுந் திருப்பெயர் சூட்டினர். இவர், பதினுருண்டிற்குள் வடமொழி தென்மொழிகளாகிய விரு மொழிக் கலைகளினும் மிக வல்லுநராய், ஆகம சாத்திரங் களெல்லாம் ஓதியுணர்ந்து சிவஞானச் செல்வராய் விளங்கினுர்.

இவ்வாறிருந்து வருங்காலத்தில் ஒருநாள் ஞானசம்பந்தருடைய இரு முதுகுரவர்கள் தங்களுடைய ஆன்மார்த்த மூர்த்தியாகிய சோமசுந்தரக் கடவுளைத் தரிசிக்க விழைந்து மதுராபுரிக்குப் புறப்படுங்காலையில்

தம் அருமைப் புதல்வராகிய ஞானசம்பந்தரையும் உடனழைத்துச் சென்று திருவாலவாய்ச் சொக்கலிங்கப் பெருமானையும் மீனாட்சியம்மையாரையும் தரிசித்துக் கொண்டு, சிலநாளங்கேயே வந்திருந்து பின்னர்த் தங்கள் ஊருக்குத் திரும்புகையில் தம் புத்திரராகிய ஞானசம்ப்ந்தரையும் அழைக்க அவர் தம் தாய்தந்தையரைப் பார்த்து, 'என் தாய் தந்தையர்கள் இத்திருக் கோயிலின்கண் இருக்கையில் அவர் தம்மைவிட்டுப் பிரிந்து பொய்யாய் அழிந்தொழியும் உங்களுடன் வாரேன்' என்று பல கலை மூலமாகச் சமாதானஞ்சாற்ற, அவர்களும் ஒருவாறு உளந்தெளிந்து மதுரையிலேயே இருக்குமாறு அவர் தம்மைவிட்டுப் போயினர்.

பின்னர், ஞானசம்பந்தர் பொற்றாமரை வாவியில் நீராடி நித்திய கன்மங்களை முடித்துக்கொண்டு சோம சுந்தரக் கடவுளையும் மீனாட்சியம்மையாரையும் தரிசித்து வணங்கித் துதித்துப் பலநாள் வசித்து வருகையில், ஒரு நாள் பொற்றாமரை வாவிக்கரையில் சில சிவனடியவர் சிவபூசை செய்து ஆனந்தக் கண்ணீர் பெருகத் துதி புரிதலைக் கண்ணுற்றார். தாமும் அவ்வாறு சிவபூசை புரிந்து ஆனந்தமுற விழைந்து சோமசுந்தரக் கடவுள் திருமுன்சென்று நின்று விண்ணப்பித்துத் தம் இருக்கை சென்று அன்றிரவில்த்துயில்கொள்ளச் சோமசுந்தரக் கடவுள் கனவின்கண் எழுந்தருளி ''ஞானசம்பந்தா! நாம் சிவலிங்க வடிவமாகப் பொற்றாமரைத் தடாகத்தின் ஈசான திக்கில் கங்கைக்குள் இருக்கின்றோம். காலையில் அங்குச்சென்று மூழ்கி எடுத்து உன் விருப்பின்படி பூசிப்பாயாக!'' என்று ஆணையிட்டருளி மறைந்தனர்.

ஞானசம்பந்தர் திடுக்கிட்டு எழுந்து அதிசயமுற்று ஆனந்தக் கூத்தாடித் துதிபுரிந்தவண்ணமே அதிகாலையில் பொற்றாமரைத் தீர்த்தத்திற்குச் சென்று நீரில் மூழ்கிப் பார்க்குங்கால் பெட்டகக் கோயிலொடுந் தனது கையில் வந்தெழுந்தருளிய சிவலிங்கத்தை யெடுத்து

ஆனந்தக்கூத் தாடிக்கொண்டு திருமுன்னர்ச் சென்று சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்து வணங்கி,

கண்ணுக்கினிய பொருளாகி யேயென்
கரத்தில் வந்தாய்
விண்ணும் பரவிடு மற்புதமே
யென்ன விஞ்சையிதான்
மண்ணும் புகழ்ந்திட வென்னையும்
பூரண வாரியுள்ளே
நண்ணும் படிசெய் மதுராபுரிச்
சொக்க நாயகனே

என்னும் சொக்கநாதக் கலித்துறையைப் பாடி அடியனேன் விரும்பியவண்ணம் அருள் செய்தீர்; இனி இச்சிவலிங்கத்தைப் பூசித்துய்தற் கேதுவாகிய சிவ ஞானோபதேசஞ் செய்தருளும் ஞானசிரியரையும் அநுக் கிரகம் பண்ணி யருளல் வேண்டும், என்று விண்ணப் பித்து விடைபெற்றுக்கொண்டு தம்மிருக்கையிற் சேர்ந்து நித்திரை புரிந்தனர். சோமசுந்தரக் கடவுள் முன்போல் கனவிற் றோன்றி ''ஞானசம்பந்தா''! திருவாரூரின் கண் சென்று நம் உபதேச பரம்பரையில்வந்த ஞானப்பிரகாச தேசிகனிடத்தில் ஞானோபதேசம் பெற்று நம்மைப் பூசித்து வருவாயாக'' என்று ஆணையிட்டருளி அங் ஙனமே திருவாரூரின்கண். சென்று ஞானப்பிரகாச தேசிகர் தம் கனவிலும் தோன்றி ''ஞானப்பிரகாசனே'' வருகின்ற சோமவாரத்தன்று உன்பால் வருகின்ற நமது ஞானசம்பந்தனுக்கு முறைப்படி சிவஞானோபதேசஞ் செய்து, சிவலிங்க பூசனையும் எழுந்தருளப்பண்ணி வைப் பாயாக என்று கட்டளையிட்டுக் கரந்தருளினர்.

ஞானப்பிரகாச தேசிகர், சோமசுந்தரக்கடவுள் தம் மேற் கருணை கூர்ந்து, கனவில் எழுந்தருளிக் கட்டளை யிட்டருளியவாறு சோமவார தினத்தில் காலையில் எழுந்து, கமலாலயத்தில் நீராடி நித்திய கன்மாநுட்டா

ஙங்களையும் சிவபூசையையும் முற்றுவித்துக்கொண்டு, சிவாலயத்திற்சென்று தியாகராசப் பெருமானைத் தரிசித்துச் சித்தீச்சரத்தின்கணுள்ள தமது உபாசனாமூர்த்தியாகிய தென்முகப் பரமாசாரியர் திருமுன்னர்க் கிழக்கு முகமாய் வீற்றிருந்து ஞானசம்பந்தர் வருகையினை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

இவர் இவ்வாறிருக்க :—

மதுராபுரியில் ஞானசம்பந்தர் தமக்குக் கனவின்கண் சோமசுந்தரக்கடவுள் கட்டளையிட்டருளியதைக் கேட்டுத் திடுக்கென நித்திரைவிட்டு எழுந்து மெய் சிலிர்த்து, ஆனந்தக் கண்ணீர் பொழியத் தோத்திரித்து வணங்கி, அதிகாலையில் எழுந்து திருக்கோயிலுக்குச் சென்று பொற்றாமரை வாவியில் நீராடி நித்திய கர்மாநுட்டானங்களை முடித்துக்கொண்டு சோமசுந்தரக் கடவுளையும் மீனாட்சியம்மையாரையும் கண்டு வணங்கி விடைபெற்று அங்கிருந்து புறப்பட்டு இடையிலுள்ள திருவானைக்கா, திருச்சிராப்பள்ளி திருவையாறு முதலிய திருத்தலங்களித் தரிசித்துக்கொண்டு குறிப்பிட்ட சோமவாரத்தன்று திருவாரூரை யடைந்தனர். கமலாலய தீர்த்தத்தில் மூழ்கி நித்திய கன்மாநுட்டானங்களை முடித்துக் கொண்டு திருக்கோயிலிற் சென்று வணங்கிக் குருநாதன் தரிசனம் எப்போது கிடைக்குமோவென்று கவலையுற்றவராய் வலம் வருகையில் சித்தீச்சரத்தின்கண் தென்முகப் பரமாசாரியர் திருமுன்னர்க் கிழக்கு முகமாய்ப் பேராருளோடும் ஈனமல இருள் நீக்கியருளும் ஞான சூரியனேயென வீற்றிருக்கின்ற குருமூர்த்திகளாகிய ஞானப்பிரகாச தேசிக பரமாசாரியரைக் கண்டவுடன் தனக்குக் கனவில் உணர்த்தியருளப்பட்ட ஞானகுரவரிவரே யெனத் தெளிந்து காந்தங் கண்ட இரும்பே போல் விரைவிற் சென்று திருவடிகளில் வீழ்ந்து வணங்கி நின்றனர்.

அப்போது ஞானப்பிரகாச தேசிகர் மிகுந்த பேரன்போடு ஞானசம்பந்தரை இருகரங்களாலும் எடுத்து "ஞானசம்பந்தா! அஞ்சாதே" என்று அபயமளித்துச் சந்நிதானத்தில் வடக்குமுகமாயுட்கார வைத்துத் திருவருணோக்கத்தால் ஞானதீக்கை செய்து சிரமேற் றிருவடிக் கமலஞ் சூட்டி சிவஞானோபதேசஞ்செய்து சொக்கலிங்க பூசையும் எழுந்தருளப் பண்ணிக்கொடுத் தருளினார். அச்சொக்கலிங்கத்தினை ஞானபூசா விதிப் படிப் பூசித்துச் "சொக்கநாத வெண்பா" என்னும் பிரபந்தம் இயற்றித் துதித்துத் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி நின்றனர்.

இவ்வாறு, திருவாரூரில் ஞானசம்பந்தர், குருகுல வாசஞ்செய்துகொண்டு. குரு பணிவிடையினை இயற்றிக் கொண்டு வருநாளில், ஒருநாள் பல மாணாக்கர்கள் புடை சூழக் குரு மூர்த்தியுடன் திருக்கோயிலுக்குப் போய் அர்த்தயாமதரிசனம் செய்துகொண்டு திரும்புகையிற்கை விளக்குப் பணிவிடைக்காரன் தூங்கிவிட்டமை தெரிந்து ஞானசம்பந்தர் தாமேசென்று கைவிளக்கை யெடுத்துக் கொண்டு, இன்று இப்பணி நமக்குக் கிடைத்ததே யென்று பெருமகிழ்ச்சியுடன் குருநாதனுக்கு முன் சென்றார். மடத்திற்குள் புகுமுன் ஞானப்பிரகாச தேசிகர் ஞானசம்பந்தரை "நிற்க" எனப் பணித்துத் தாம் உள் சென்று நித்திரை செய்தருளினார்.

ஞானசம்பந்தரும் குருமூர்த்தியின் கட்டளையின்படி கை விளக்கைப் பிடித்தபடியே தமக்குபதேசித்தருளிய சிவஞானோபதேச நிலையிலேயே புலரும்வரையும் நின் றருளினார். அன்றிரவு பெருமழை பெய்தும் திருவருளி னால் அவர் திருமேனியில் படாது ஒருகச தூரம் வரையும் சுற்றிலும் கோடு கட்டினதுபோலக் கீழ்ப்பூமியிலும் தண் ணீர்ப் புகாமல் நின்றது அவ்வாறு இருந்ததை விடியற் காலையிற் சாணந் தெளிக்கவந்த குருபத்தினியார் கண்டு மனம் அதிசயித்து உள்ளே திரும்பியோடி ஞானப்பிரகாச

தேசிகருக் கறிவிக்க, அவர் உடனே திடுக்கிட்டெழுந்து ஓடிவந்து பார்த்துத் திருவருளின் மகிமையைச் சிந்தித்து ஆனந்தக் கண்ணீர் சோர, அண்மையிற் சென்று தமது இருகரங்களாலும் ஞானசம்பந்த தேசிகரை யிறுகப் புல்லிக்கொண்டு ''அப்பனே'' நீர், நாமும் வணங்கும் குருநாயராகி விட்டீர் எனத்திருவாய் மலர்ந்து. ''இனி நீர் உமது விருப்பின்படி வேண்டிய விடத்திற் சென்றிருந்துகொண்டு, உம்மை வந்தடைந்த பக்குவர்களுக்குச் சிவஞானோபதேஞ் செய்து சமயபரிபாலனம் நிகழ்த்தி வருவீராக எனக் கட்டளை யிட்டருளினார். அதனைக் கேட்ட குரு ஞானசம்பந்தர் மனம் பதைத்து 'அடியேன் எவ்வாறு தேவரீரைவிட்டுப் பிரிந்திருப்பேன்' என்று பலவாறு விண்ணப்பித்து நின்று அடியேனுக்குச் சுதந்தர முண்டோ? எனும் கருத்தினை உட்கொண்ட

கனக்கும் பொதிக்கும் எருதுக்குந்
தன்னிச்சை கண்டதுண்டோ
எனக்கு முடற்கு மெனதிச்சை
யோவிணங் கார்புரத்தைச்
சினக்குங் கமலையுண் ஞானப்ரகாச
சிதம்பர வின் (று)
உனக்கிச்சை யெப்படி யப்படி
யாக வுரைத்தருளே

எனும் கட்டளைக் கலித்துறையால் தம் கருத்தைத் தெரிவித்துக்கொண்டனர். அதைக் கேட்டருளிய ஞானப்பிரகாச தேசிகர் உளங்கனிந்து ஞானசம்பந்தரே நமதூருக்கு வடக்கே இரு யோசனை தூரத்துக்கப்பாலுள்ள கவுரி மாயூரத்திற்குக் கிழக்குத்திக்கில் ஒருகுரோசத்திற்குள். தென்றிசைக் கோனாகிய தருமனால் பூசிக்கப்பெற்றதும். அகத்தியமுனிவர் முதலிய மகான்கள் பூசித்து வழிபடப்பெற்றதுமான, வில்வாரணியமாகிய தருமபுரத்தைச் சென்றடைந்து பக்குவிகளுக்கு ஞானோபதேசஞ் செய்து சைவசித்தாந்த சமய பரிபாலன பீடாதிபதியாய் வாழ்வீர் என்றாணை தந்தருளினர்.

அங்ஙனமே குரு ஞான சம்பந்தரும் திருவாரூரை அரிதின் நீங்கி, திருவாஞ்சியம் திருவீழிமிழலை முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு தருமபுரத்தை யடைந்து; ஆங்குள்ள திருத்தருமபுரீசுவரரையும் அபயாம்பிகையையும் தரிசித்து வணங்கினர். அத்திருக் கோயிலின் மேல்பாலுள்ள கூவிளந்தோப்பில் ஓராச் சிரமம் அமைத்து அதில் வசித்துவந்தனர். அங்குச் சொக்கநாதப்பெருமானை எழுந்தருளுவித்துப் பூசித்தும் தம்மையடைந்த பக்குவர்களுக்கு ஞானதீக்கை புரிந்து ஞானோபதேசஞ் செய்தும், பற்பல அற்புதங்களால் திருவருளை விளக்கிக்கொண்டும் எழுந்தருளியிருந் தனர். சிவபோக சாரம், முத்திநிச்சயம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய யகவல் சோடசகலாப் பிராசாதசட்கம் முதலிய அநுபவநூல்களாகிய ஞானசாத்திரங்களையும், அநேக தோத்திர நூல்களையுஞ் செய்தருளினர்.

செந்தமிழ்த் தேசிகரெனப்பெறும் அகத்தியர் தம் மாணாக்கர்களாகிய முனிபுங்கவர்கள் ஆங்குள்ள திருத் தருமபுரீச்சுரருக்கு நித்திய நைமித்திய முதலியவை களை நடாத்திக் கொண்டிருந்தனர். ஞானசம்பந்த ருடைய அருட் குணங்களைக்கண்டு பேரானந்தமுற்ற வர்களாய்த் தங்களுடைய ஆசிரமங்களையும், சிவால யத்தினையும் அவரிடம் ஒப்புவித்தனர். அவற்றினை நன்கு புரந்துவர இரசவாத முதலிய பல சித்திகளையும் உபதேசித்து; எம்மைப் போலவே இவற்றினை நீரும் உமக்குப் பின்னர் வரும் சந்ததியாரும் பரம்பரையாய் இலகிப் பரிபாலனம் புரிந்து வருவீர்களாக'' என்று ஆசிபுரிந்து தம்முடைய இருப்பிடஞ் சார்ந்தனர்.

அங்ஙனமே ஞானசம்பந்த தேசிகர் சிவாலயத்தை யும் சிவனடியவர்களாகிய திருக்கூட்டங்களையும் தம் பெருங்கருணையினாற் பாதுகாத்துச் சிவாலயத் திருப்பணி திருவிழா முதலியவற்றினை நடத்திக் கொண்டு வந்தார்கள். ஓர்சமயம் சிதம்பர தரிசனத்திற்கு

எழுந்தருளி ஆயிரக்கால் மண்டபத்தில் இரவு பகலாய் ஆனந்த நிட்டையுற்றிருந்தனர். ஒருநாள் நடராசப் பெருமான் அருளால் சிவகாமியம்மையார் நடுயாமத்தில் தம் பள்ளியறையில் வைத்துள்ள வெள்ளிக் கிண்ணத்துள்ள பாயசத்தையும், பொற்கிண்ணத்துள்ள திருவமுதத்தையும், கங்கை நீரையும் எடுத்துவந்து கொடுத்தருளினர். இக்குருமூர்த்திகள் தம் ஞான நோக்கால், புலியும் பசுவும் தம்முள் பகைமை நீங்கி ஒரே குளத்தில் நீர் பருகி, ஒரே பொழிலில் மகிழ்ந்து விளையாடும்படி செய்தருளினர்.

"புலியுமோ ராவும் நட்பொடுவாவி
புகுந்துநீ ருண்டுட னடந்து
நலிவிலா வகையி லோர்பொழிலிற்
சேக்கை நயந்துவாழ்ந் திருந்தனகண்டு
வலியவரன்று முதலுபசார வகையினி
னிற்கவே செய்தாய்"

இவ்வாறு ஞானவரசு நடாத்திய குருமூர்த்திகள் திருத்தருமபுரீசுவரர் திருக்கோயிலுக்கு மேற்கே திருக்கோயில்கட்டிச் சிவலிங்கப் பிரதிட்டை செய்தனர். தமக்குச் சமீபத்தில் பரிபூரண தசை வருதலைத் திருவருளுணர்த்த உணர்ந்து அச்சிவலிங்கப்பெருமான் திருவடி நிழலிற் சமாதிகூடத் திருவுளங்கொண்டு, தமதடியார்களுள் "ஆனந்த பரவச"ருக்கு ஞானோபதேசஞ் செய்து தமது பீடாதி பத்தியத்தையும் சொக்கலிங்கப் பெருமான் பூசையையும், கொடுத்தருளி, நீர் நமது பீடத்திலிருந்து கொண்டு ஞானோபதேசஞ் செய்து, சொக்கநாதரைப் பூசித்து, சிவாலயத்தையும், சைவ சமயத்தையும் நன்கு புரந்து வருவீராக! என ஆணையிட்டருளிச் சிவசமாதி யெய்தினர்.

இரண்டாவது அருட்டிரு ஆனந்த பரவச தேசிகர்:- ஆனந்த பரவசர் அதிதீவிர பக்குவ ரானபடியால், குருவருள ஒன்றையே நாடி நின்றார். அது கிடைத்ததும் சிவஞான பேலீட்டினால் ஆனந்தக்கண்ணீர் பொழியத் தம் குருவின் சமாதி முன்னிலையில் வீழ்ந்து வணங்கினர். அதன் மேற்புரத்திற்சென்று தம் குருமூர்த்தியின் திருக்கோயிலிற் சிகரத்தைத் தரிசித்த வண்ணம் கிழக்கு முகமாயிருந்து, சமாதி கூடி, சிவானந்தாத்வைத முத்தி நிலையெய்தினர்.

மூன்றாவது அருட்டிரு சச்சிதானந்த தேசிகர்:- ஆனந்த பரவச தேசிகர் முத்திநிலை யெய்தியதை உணர்ந்த திருக்கூட்டத்து அடியார்கள் யாவரும் ‘பிறவித் தாபம் போக்கும் குருமூர்த்தியின் திருவடி நீழலை யிழந்தோமே'' என்று கவலையுற்றார்கள் சமாதி கூடியிருந்த குருஞானசம்பந்த சுவாமிகளின் திருமுன்பினை யடைந்தனர். அங்கு நின்று சுவாமிகளே மீளவும் எழுந்தருளி வந்து, பரம்பரைச் சம்பிரதாயத்தையும். அடியேங்களையும் காத்தருள வேண்டும் என்று விண்ணப்பித்தனர். ஞான தேசிகர் திருவருளால் உணர்ந்து. மீளவுஞ் சமாதியினின்றும் எழுந்தருளித் தம் அடியார்களில ஒருவராகிய ''சச்சிதானந்த'' ருக்குத் திருவடி சூட்டி ஞானாபிடேகஞ் செய்து, சொக்கநாதர் பூசையையும் கொடுத்தருளினர். அவ்வாறு செய்தும் அவருக்கு ஞானசமாதி கூடிவராமையால் குருஞானசம்பந்தர் திரு அருள் நோக்கஞ் செய்து,

''தானந்த மாதிநடு வில்லாதெங்கும்
சச்சிதா னந்தமயந் தானேயாய
ஆனந்த பரவசனைக் கண்டுங்கண்டு
மந்தந்தோ பரகதியை யறிந்தீரில்லை
மானந்தான் வடிவாகி நிற்றலாலோ
மலமாயை கன்மமிவை மடியாதாலோ
ஞானந்தா னுமதுளத்தி லுதியாதாலோ
நாமறியோ மும்துமய னவிற்றுவீரே''

என்ற திருவருட்பாடலைத் திருவாய் மலர்ந்தருளலும் அந்நிலையினை யெய்தினர். அஃதுணர்ந்து மகிழ்ந்தருளிய அருட்டிரு குருஞானசம்பந்த தேசிகர் இனி, நீர் நமது பீடாதிபதியாய் வீற்றிருந்துகொண்டு, சொக்கலிங்கப் பெருமானைப் பூசித்துப் பக்குவிகளுக்குச் சிவ ஞானோபதேசஞ் செய்து வருவீராக என்றும் கட்டளையிட்டருளி, வைகாசித் திங்கள் அமரபக்க சப்தமி தினத்திலே சிவ சமாதி கூடியருளினர். சச்சிதானந்த தேசிகரும் குருவாணையின்படி சிலநாள் சமயபரிபாலனஞ் செய்திருந்து தமது அடியார்களுள் ஒருவராகிய "மாசிலாமணி தேசிக"ருக்குச் சிவ ஞானோபதேசம் செய்தருளி, முத்திநிலை எய்தினார்கள்.

நான்காவது அருட்டிரு மாசிலாமணி தேசிகர் :— சச்சிதானந்த தேசிகர்பால் அருளுபதேசம் பெற்ற "மாசிலாமணி தேசிகர்" ஞானபீடத்திலெழுந்தருளி அருட்செங்கோல் செலுத்திவருங்கால் ஒருநாள் அடியார்கள் செய்த பாத பூசைமலர்கள் திருமுறையேடுகளின் மீது இருப்பக் காட்டியருளினர். தமது தவ வலிமையினால் தம் தாயாருக்கு அத்துவாசோதித்து முத்தியினை அளித்தருளினார்கள். அரவம் தீண்டி யிறந்த ஒருவனை உயிர்ப்பித்தருளினார்கள்.

இவ்வாறு பற்பல அற்புதங்கள் நிகழ்த்தித் தம் அடியார்களுக்குக் குருபத்தி சிவபத்திகளைப் பெருக்கி வந்தருளினர் செந்திலாண்டவன் அருள் பெற்ற தவத்திரு குமரகுருபர சுவாமிகளுக்கு ஞானதீட்சை செய்து, காசி சென்று சுத்தாத்வைத சித்தாந்த சைவ சமயத் தாபனம் செய்து வருமாறு பணித்து ஆட்கொண்டருளினர். 'முத்தி நிச்சயப்பேருரை' 'ஞானாவரண விளக்கம்' முதலியவற்றினை யருளிச் செய்த வெள்ளியம்பலவாண முனிவருக்குச் சமய விசேட தீக்கைகள் செய்து, சைவ சந்நியாசமும் கொடுத்தருளினார்கள்.

பின்னர் "ஞான சம்பந்த தேசிக" ருக்கு ஞானோபதேசஞ் செய்தருளி ஞானபீடத்திருத்திச் சுத்தாத்வைத சைவசித்தாந்த முத்தியை அடைந்தனர்.

ஐந்தாவது அருட்டிரு ஞானசம்பந்த தேசிகர் :—

"ஞானசம்பந்த தேசிகர்" ஞானபீடத்தில் எழுந்தருளியிருந்து அருளாட்சி நடத்தும் நாளையில் மேற்கூறிய வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளுக்கு ஞானதீக்கை செய்தருளினார்கள். பின் ஒரு நாள் தட்சிண யாத்திரை செய்ய விரும்பி, பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருக்குற்றால மலையில் எழுந்தருளி இருக்குங் காலத்தில் அங்கு ஆற்றில் பெரும் வெள்ளப் பெருக்கெடுத்து அதனால் மக்கட்குத் துன்பமுண்டாயிற்று. மக்கள் யாவரும் ஒருங்குகூடிக் குருநாதரிடம் தமக்குற்ற இடுக்கணை விண்ணப்பித்தனர். அவர்கள் திருவருளால் தண்ணீர்வெள்ளம் குறைந்தது. மக்கள் துன்பம்நீங்கி இன்பக்கடலுள் மூழ்கினர். இங்ஙனம் திருவருட்டன்மையைப் பல்லாற்றானும் விளக்கிக் கொண்டிருந்து "திருஞான சம்பந்த தேசிக" ருக்கு ஞானாபிடேகம் செய்து தமது பீடாதிபத்தியத்தைக் கொடுத்தருளிப்பேரின்ப நிலையெய்தினார்கள்.

ஆறாவது அருட்டிரு திருஞானசம்பந்த தேசிகர் –

இக்குருமூர்த்திகள் காலத்தில் பதினாறு கலைகளையும் அடக்கி இருந்து யோகம் செய்யுமிடம் ஆகிய 'பதினாறொடுக்கம்' என்பது மிகச்சிறப்பாக விளங்கியது. அதில் பல அடியார்களும் இரவு பகல் இன்றி நிட்டை கூடியிருந்ததாகவும், அவர்களுக்குப் பூசைக்கு வேண்டுவனவும், உணவும் அவ்வப்போது அதற்கென ஏற்பட்ட ஒருசிறு வாயில் வழியாக அளிக்கப் பெற்றன என்றும் தெரிகின்றது.

முப்பொருள் தெரிந்த முனிவராகிய சம்பந்த சரணாலயரும் இந்த ஞானதேசிகர் பால் உபதேசம் பெற்று ஒப்புயர்வற்ற புலவர் திலகமாய் விளங்கினர். இவர்கள், அடியார்களுடைய வேண்டுகோட்படி தட்சிணயாத்திரைபுரியப் புறப்பட்டனர். ஆற்றிடைப் பட்ட திருக்கோயில் பலவற்றினையும் கண்டு வணங்கித் திருநெல்வேலிச் சிந்து பூந்துறை மடத்திற் தங்கி னார்கள். அவ்வூரில் அறச்சாலைமடம் என்ற ஒன்று இருந்தது. அதற்குத் தலைவராக ஒருவரிருந்தார். அவர் நிரம்பக் கற்றவர். சிதம்பரம் குகைமடத்து அதிபராக இருந்த ஞானப்பிரகாசர் ஆகிய அவர் ஆன்மானந்தவாதி. அவரிடம் ஒரு புலவர் உபதேசங் கேட்டார். அதனால் மனஅமைதி பெறவில்லை. தருமையாதீன முதற் குரவராகிய ஞானசம்பந்த தேசிக ரருளிய முத்தி நிச்சயத்திற்கு ஒரு மறுப்புரையும் எழுதினார். என்ன எழுதியும் மனவமைதியின்மையால் அலைந்தனர். புண்ணியப்பயனாகச் சிந்து பூந்துறையில் இந்தக் குருமூர்த்திகளைச் சந்தித்தனர் கண்டகாட்சியே மனவமைதி யளித்தது. மகிழ்ந்தார். திருவடிகளில் வணங்கி ஞானோபதேசங் கேட்டார். குருநாதர் அப்புலவருக்குத் 'தமிழாகரர்' எனத் தீட்சா நாமம் சூட்டி ஆட்கொண்டருளினார்கள்.

சின்னாள் தங்கியிருந்து திருக்குற்றால மலைவழி பாட்டிற்கு எழுந்தருளுகின்றவர்கள் வழியில் வேள்வி மலையையடைந்தார்கள். அங்கு முருகன் வழிபாட் டிற்குச் சென்றார்கள். வணங்கும் போது வள்ளி யம்மையின் திருவுரு இலக்காக இல்லை. ஆதலால் 'இங்கு வள்ளித்தாய் இல்லையோ' என்று கூறினார் கள். ''தாய் இதோ இருக்கின்றேன்'' என்று திருமேனி வளைந்து காட்சி வழங்கினார். இந்நிகழ்ச்சியை விளக்கும் சான்றுகள் :

''எழில்வேள்வி மலையிலோ ரம்மை
யெங்கே யென்றியம்பியே திருமுனிற்குஞ்,
சம்பந்தனுக் கருள்செய் என்று
வள்ளிக் கருள்செய் சைவ நாயகன்''

என்ற கேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்ப் பாடத் பகுதி ஒன்று ''வள்ளியம்மை யில்லையோ'' வென்ன வவள் சிரத்தை நீட்டி' ''வையம் அறிந்திட விருக்கின் றேன்'' என்ற மொழி கேட்டு மகிழ்ந்து நின்ற துய்ய வனாந் தருமை வரு திருஞான சம்பந்தன், என்ற தனிப்பாடற் பகுதி மற்றொன்று. இங்ஙனம் வணங்கிப் பரவசமுற்ற குருமூர்த்திகள் திருக்குற்றால மலையை யடைந்தார்கள்.

பின்னர், ' திருவம்பல தேசிக ' ரிடத்தில் தம் ஞானபீடத்தை ஒப்புவித்து நமது பரம்பரையை வளர்த்து வருவாய், எனக் கட்டளை யிட்டருளிப் பேரின்பநிலை யெய்தினர்.

ஏழாவது அருட்டிரு திருவம்பல தேசிகர் :— திரு ஞானசம்பந்தர் பால் அருளுபதேசம் பெற்ற ''திருவம் பல தேசிகர்'' அருட் செங்கோல் நடாத்துநாளில், மூவலூர்ச் சுப்பராயச் செட்டியார் ரென்பார் காலஞ் சென்ற தனது தாயாருக்குச் செய்யவேண்டிய பிற்கடன் களைச் செய்து முடித்து இக்குருமூர்த்திகள் பால் வந்து வணங்கித் ''தாயினை வீடு பெறுவித்தல் புதல்வர் கடனாதலின் அதற்குத் தேவரீர் அருள் பாலித்தல் வேண்டும் என விண்ணப்பித்தனர். குருமூர்த்திகள் ஞான நோக்கினால் அவ்வுயிர் செட்டியார் மனைவியின் கருப்பத்திலுற்றிருப்பதை யறிந்து ''உமக்கு மகவு வேண்டுமோ?'' தாய் வீடு பெறுதல் வேண்டுமோ?'' என்று வினாவ, செட்டியார் அடியேன் முதலில் வேண்டுவது தாய் வீடு பெறுதலே யென்று தெரிவித் தனர் குருமூர்த்திகளும் அவ்வாறே செய்வோமெனத் திருவுளம்பற்றித் திருமஞ்சன முடித்துக் கொண்டு திரு சொக்கலிங்கப் பெருமானைப் பூசித்து அவ்வுயிரைக் கொணர்ந்து தீட்சை செய்து வீடு பேறு அடைவித் தருளினர்.

பின்னர் ஒருநாள் தஞ்சையையாண்ட மராட்டிய மன்னன் கடலாடவிழைந்து சேனைகள் புடை சூழக்

காவிரிப்பூம்பட்டினம் நோக்கிச் சென்றான். செல்பவன் தருமபுரம் அனுகினான். ஞானபுரீசுவர் திருக்கோயிலில் அர்த்தயாமபூசனை நடந்தது. மணியோசையும் காதிற் பட்டது. ஊர்தி விட்டிறங்கி மனத்தினால் வணங்கிப் பின்னர் ஊர்தியேறிப் புறப்படலாயினன் அப்போதுடனிருந்த சிலர் சூத்திரர் சமாதியைத் தாங்கள் வணங்கியதால் பாவத்திற்குள்ளானீர்கள். ஆகையினால் பிராயச்சித்தம் செய்துகோடல் வேண்டும். அஃதேயுமன்றி, மற்றையோரும் இக்குற்றத்திற்காளாகாதவாறு இவ்வாலயத்தை யிடித்துவிடுதலே நலம் எனக் கூறினர்.

அம்மராத்திய மன்னனுக்கும் ஞானதேசிகரின் திருவருள் பெறுங்காலம் அண்ணியபடியால் ஏவலாளரைக் கூய் அவ்வாலயத்தினை யிடிக்குமாறு ஆணையிட்டு அப்பாற் சென்றனன். ஏவலாளர்களும் ஆலயத்தினை இடிக்கத்தொடங்கினர் அதுகண்ட அடியார்குழாங்கள் விரைந்து ஓடிக் குருமூர்த்திகளிடம் தெரிவிக்க குருமூர்த்திகள்.

வெண்பா

'' ஈசன் பலகீனன் என்றக்கால் ஆலயத்தின்
மோசம்வந்த தென்று மொழியலாம் — ஈசனே
யாக்குவது மாக்கி யழிப்பதுவுந் தானானால்
நோக்குவதென் யாம்பிறரை நொந்து ''

என்று அடியார்களுக்கு ஆறுதல் கூறியருளினர். எம்பெருமானும் தமது கூத்தொலியினைக் கேட்பித்து திருவருள் பாலித்தனர் அவ்வொலியினைக் கேட்ட குருமூர்த்திகள் இறைவன் திருவருளை வியந்து சந்நிதானத்தில் நின்று,

வெண்பா

தேசஞ் சிவாலயங்கள் சேர வலையவொரு
மோசம்வந்த தையோ முதல்வனே — தேசத்து
மன்னைவெறுப் பேனோ வருவினையை
யூட்டுவிக்கும்
உன்னைவெறுப் பேனோ வுரை

என விண்ணப்பித்துப் பஞ்சாக்கரத்தைச் செபிக்க, இருப்புக்கோல் படுமிடந்தோறும் உதிரம் பெருக அரசனின் ஏவலாளர்கள் மூர்ச்சையுற்று வீழ்ந்தனர். நகரெல்லையினைக் கடந்துசென்ற அரசனுக்கோ கண்ணொளி மழுங்கிற்று. உடனே அரசன் ஆலயத்தை யிடிக்கும்படிக் கேட்டுக் கொண்டவர்களை நோக்க, அவர்களும் மூங்கையாயினர். ஆகித் திகைத்து நின்றனர். அப்பொழுது அரசன் தன் குற்றத்தினை யுணர்ந்து மீண்டும் தருமபுரம் அடைந்து தன் ஏவலாளர்களின் நிலைமையினைத் தெரிந்துகொண்டு மடாலயத்தினுட்சென்று குருமூர்த்திகளின் திருவடிகளில் விழுந்து, பிழை பொறுத்தருளல் வேண்டுமெனப் பிரார்த்தனை புரிந்தனர்.

குருமூர்த்திகளும் இறைவன் அருள்புரிவான் எனத் திருவுளம்பற்றி அரசனுடன் ஆலயத்திற்கு எழுந்தருளினார்கள். ஆலயத்தை யடைந்த அரசன் இறைவனைத் தரிசித்தற்குக் கண்ணொளி இல்லையே எவ்வாறு காண்பேன்'' என்று வருந்த குரு ஞானசம்பந்தர் அருளால் ஒரு கண் விளக்கமுற்றது. ஏவலாளர்கள் கீழே விழுந்து கிடப்பதையும் கோல்பட்ட இடத்தில் குருதி பெருகுவதையும் கண்டு குருமூர்த்திகளைப் பிரார்த்திக்க குருமூர்த்திகள் திருநீற்றினைத் தெரித்தார்கள் உடனே உதிரம் பெருகுதலும் நின்றது. ஏவலரும் எழுந்து ஞானமூர்த்திகளை வணங்கி நின்றார்கள்.

பின்னர் அவ்வரசன் காவிரிப்பூம்பட்டினம் சென்று கடலாடித் தருமபுரத்தின் தென் கீழத்திசையில் கூடாரம் அமைத்துத் தன் பரிவாரங்களுடன் தங்கிச் சுவாமி தரிசனம் செய்து வருங்கால் ஒருநாள் குருமூர்த்திகளிடம் 'சூத்திரர்களுக்குச் சந்நியாசம் பெற அதிகாரம் இல்லை' என்று சிலர் கூறி அடியேனை மயக்கி விட்டார்கள் அதன் உண்மையினைத் தெரிவித்தருளல் வேண்டுமென விண்ணப்பஞ் செய்து கொண்டனன், குருமூர்த்திகள் பல பிரமாணங்களால் அவன்

ஐயத்தினை நீக்கி, 'வருணாச்சிரம சந்திரிகை' என்ற தோர் அரிய நூலும் இயற்றியருளினார்கள். சந்நியாசத்தில் அதிகாரம் இல்லையென்று கூறியவர்களும் நாணித் தலைகுனிந்தனர். அரசன் அங்குத்தங்கி ஒருமண்டலம் சுவாமி தரிசனம் செய்து முடிந்த உடன், மற்றொரு கண்ணும் விளக்கமுற்றது மூங்கையுற்றவரும் மூங்கை நீங்கப்பெற்றனர். அதனால் அளவு இலா உவகை கொண்ட அரசன் தான் முதலில் தரிசித்தது அர்த்தயாம பூசையாதலால் அது சிறப்புற நடைபெறுதற்கு வேண்டிய சில நிலங்களையளித்து விடை பெற்றுச் சென்றனன்.

அவ்வரசனின் அமைச்சராகிய கோவிந்த தீட்சதர் என்பார் இவ்வற்புதச் செயல்களைக் கேள்வியுற்றுத் தருமபுரம் வந்து குருமூர்த்திகளைக் கண்டு வணங்கித், திருச்சந்திமுத்தத் திருக்கோயில் திருப்பணி செய்யுங் காலத்து அங்கு ஓர் மடம் அமைத்துக் குருமூர்த்திகளை யெழுந்தருளச் செய்தும், திருவையாற்றில் பூசமண்டப மாதி திருப்பணி செய்யுங்காலத்துத் திருவையாற்றில் எழுந்தருளுவித்தும் தொண்டுகள் பலவியற்றிச் சிலநாள் உடனிருந்து பின்னர் விடைபெற்றுச் சென்றார். அப்போது திருக்கூட்டத்தடியார்களுள் ஒருவரைக்கொண்டு 'திருவையாற்றுப் புராணம்' இயற்றுவிக்கப்பட்டது. இக் குருமூர்த்திகள் சிலகாலம் ஞானபாநுவாய் விளங்கி இருந்து தம்மடியார்களுள் ஒருவருக்கு ஞானாபிடேகஞ் செய்து அழகிய திருச்சிற்றம்பல தேசிகர் எனத் திருநாமஞ் சூட்டிப் பீடத்தில் இருக்கச்செய்து பேராவின்புற்றனர்.

எட்டாவது அருட்டிரு அழகிய திருச்சிற்றம்பலதேசிகர்:-

இக்குருமூர்த்திகள் தட்சிணா யாத்திரை செய்ய விரும்பிப் பலதலங்களையுந் தரிசித்துக்கொண்டு கற்குள மாநகரில் எழுந்தருளி யிருக்குங்காலத்தில், அத்தலத்தி

லுள்ள சிவசிதம்பரம்பிள்ளை என்பார் ஞானதேசிகரைத் தரிசித்து வணங்கி மகேசுவர பூசை, பட்டணப் பிரவேசம் முதலியன சிறப்புற நடத்தி வைத்தனர்.

இந்நிகழ்ச்சிகளைக்கண்டு அழுக்காறுற்ற சிலர், மலடியான ஓர் பேரிளம்பெண்ணாகிய வயது முதிர்ந்தவளை ஞானதேசிகரிடம் அனுப்பிப் பிள்ளைப்பேறு வேண்டுமென விண்ணப்பிக்கச் செய்தனர். அவ்விண்ணப்பத்தைத்திருச்செவிசாத்திய குருமூர்த்திகள் அப்பெண் வந்த வரலாற்றினை ஞானத்தால் உணர்ந்து "நீ விரும்பியவாறே யாகுக" என்று ஆசீர்வதித்துப் பரிகலசேடத்தினை அளித்தருளினார்கள். அம்மாதும், அதனையேற்றுண்டு மகிழ்ச்சியுடன் வீடு சென்றனள். தேசிகரும் சிதம்பரம்பிள்ளையின் வேண்டுகோட்கிணங்கிச் சிலநாள் அங்கிருந்து, பின்னர்த் தட்சிணயாத்திரையைப் பூர்த்தி செய்துகொண்டு தருமபுரத்திற்கெழுந்தருளினார்கள்.

பரிகலசேடமுண்ட அம்மாது சிலநாட்களில் கருவுற்று ஓர் ஆண்மகவினைப் பெற்று. அதற்கு அழகிய சிற்றம்பலப் பரிகலம் எனப்பெயரிட்டு, மகனுடன் கணவனையும் அழைத்துக்கொண்டு தருமபுரத்திற்கு வந்து ஞானதேசிகரைப் பணிந்து திருவருள்பெற்றுச் சென்றனள், இவ்வாறு பல அற்புதங்களை நிகழ்த்திக் கொண்டு ஞானசூரியனாய் எழுந்தருளியிருந்த தேசிக சுவாமிகள் சோணாட்டுத் தலங்களை வழிபட்டுக் கோட்டூருக்கு அருகில் வரும்போது பரிபூரணநிலை நேரப் போவதை யுணர்ந்து, தமது பீடாதிபத்தியத்தையும் சொக்கநாத பூசையையும் திருநாவுக்கரசு தேசிகருக்கு அளித்து அத்தலத்திலேயே முத்திநிலை யெய்தினார்கள்.

ஒன்பதாவது அருட்டிரு திருநாவுக்குகரசு தேசிகர் :—

இத்தேசிக சுவாமிகளே 'சித்தாந்த நிச்சயம்' எனும் இவ்வரிய கட்டளைக் கலித்துறையாலாகிய ஞான நூலினைச் செய்தருளினர். இந்தக்குருமகா சந்நிதானம்

அருட்செங்கோல் நடத்துகையில் ஓர்நாள் புள்ளிருக்குவேளூருக்குச் சென்று ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசாமியைத் தரிசித்தார்கள். அச்சமயம் திருமுன்னர்த் தொங்கவிடப்பட்டிருந்த திரை, திருவருளால் சுருண்டு மடங்கியது. குருமூர்த்திகள் பெருமான் தம்மீது காட்டிய கருணையை நினைந்து வியந்து மகிழ்ந்து திருவருள் அநுபவத்தில் திளைத்தார்கள்.

வைணவன் ஒருவன் குருமூர்த்திகளின் முன் நின்று திருமாலே பரம்பொருள் என்றுரையாடி, ஞானதேசிகர் திருக்கண் நோக்கத்தால் ஊமையாயினன். உடனே வைணவன் தான் செய்த தவறுணர்ந்து சுவாமிகளுடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்க சுவாமிகள் மனமிரங்கி அவ்வயிணவனுக்குத் திருவெண்ணீறு அளித்து ஊமை நீக்கித் தமது அடியார்களைக்கொண்டு சைவசமயச் சிறப்பையும் சம்பிரதாயங்களையும் கற்பிக்கச்செய்து தொண்டு கொண்டருளினார்கள்.

பின்னர் அங்கு நின்றும் நீங்கித் தருமபுர மடாலயத்தில் எழுந்தருளி இருக்குங்காலத்தில் பூனைகள் கிளிகளுடனும் குயில்கள், செம்போத்துக்களுடனும், பாம்புகள் கீரிகளுடனும், எலிகளுடனும் அஞ்ஞானத்தினால் போர் புரிந்துகொண்டு துன்பம் விளைத்தலைக் கண்ணுற்றுத் திருக்கடைக்கண் சாத்தி, அஞ்ஞானத்தினை நீக்கி மெய்ஞ்ஞானத்தினையருள, உடனே அவைகள் யாவும் பகைமை நீங்கித் திருவடிகளில் வந்து அடைக்கலம் புகுந்தன. ஞானதேசிகர் திருவடி தீக்கையும் புரிந்து அவைகளைச் சிவகதியிற் சேர்த்தருளினார்கள்.

''கானமருங் கிள்ளையொடு குயில்செம் போத்துக்
கட்டரவம் பூனையெலி கதியிற் சேர
ஞானவருட் பார்வைபுரி நாதா போதா
நாடறியேற் குனதருளை நயப்ப தெந்நாள்

வானமருங் கடம்பவனச் சவுந்த ரேசன்
மலரடியை யலரடியால் வணங்க வெண்ணித்
தானமரும் பூசைபுரி திருநாவுக் கரச
சம்பந்த ஞானகுரு தருமை வாழ்வே''

என்று இக்குருமூர்த்திகள் வணக்கச் செய்யுளிலும் இக்கருத்தமைந்திருத்தல் காண்க.

இக்குருமூர்த்திகளிடத்தில் தென்களந்தைப் படிக்காசுப் புலவர் சைவசந்நியாசம் பெற்றுப் பதினெட்டுக்கத் தம்பிரான்களில் ஒருவராக எழுந்தருளியிருந்து குருவாணைப்படிப் புள்ளிருக்கு வேளூர்க் கோயிற் கட்டளை விசாரணையாக இருந்து வந்தார். இவர் 'திருத்தண்டலை யார் சதகம்' எனும் நூலினையும் இயற்றியுள்ளார். இக் குருமகா சந்நிதானம் அருளிச்செய்த ஞானசாத்திரம் ''சித்தாந்த நிச்சயம்'' என்பது.

இவ்வாறு ஞானபாநுவாய் அருட்செங்கோல் நடத்திய குருமூர்த்திகள், சிவஞான தேசிகருக்குத் தமது திருவடி சூட்டி ஞானபீடத்தையும் சொக்கநாதபூசையையும் கொடுத்தருளி முத்திநிலையெய்தினார்கள். ஆதிகுருமூர்த்திகள் ஆகிய திருஞானசம்பந்தர் ''முத்தி நிச்சயம்'' எனும் சீரிய நூலினை யருளினார்கள். அதுபோல் சைவசித்தாந்தம் பற்றி மாறுபட்ட கருத்துகள் நிலவி வருதல்கண்டு சித்தாந்த நிச்சயம் எனும் சீரிய இந்நூலினைக் கண்டனர். இதற்குரை வகுத்தவர் புள்ளிருக்கு வேளூர் எனும் வைத்தீசுவரன் கோயிற் பதியில் வாழ்ந்தவர்.

இவர் நூலின் பொருளினைத்தொகுப்பாக வுணர்த்த முற்பட்டுச் சித்தாந்தத் தொடர்பாயுள்ள தேவாரத் திருமுறைப் பாடல்களையும், சைவசித்தாந்த சாத்திரங்களாகிய மெய்கண்ட நூல்களின் பாடல்களையும் தொகுத்துள்ளனர். ஆயினும் பாட்டிற்குப் பாட்டுத் தலித்துரை காண்டல் வேண்டும்.

உரைகண்டார் பெயர் முதலியன ஏட்டிற் காணப் படுகின்றது. இச்சுவடியானது மிகப்பழமை யுற்றது. சிற்சில விடங்களிற் சிதைவுற்றும் உள்ளது. இதன் பிரதியினை யொருவாறு வைத்துக்கொண்டு 1928-ல் அச்சிட்டபிரதியையும், ஒப்புநோக்கி (அந்நூலில் தான் திருநாவுக்கரசு திருப்பெயர் காணப்பட்டது.) இந்நூலி லுள்ள பாடலும் நன்கு குறிப்பிடப்பட்டது) ஆய்ந்து கொள்ளத்தக்கது.

தஞ்சையை யாண்ட சரபோசி மன்னர்பெருமான், முன்னருள்ள மராத்திய மன்னரின் சம்பந்தப்பட்டிருப் பதனாலும், அர்த்தயாம பூசைக்கென நில முதலியன விடப்பட்டிருப்பதனாலும், தஞ்சை மன்னரின் அமைச்ச ரான கோவிந்த தீட்சிதர் என்பார் தருமையாதீனக் குரவர்தம்பால் பேரன்பு பூண்டு பட்டீசுரம், திருவையாறு முதலிய இடங்கட்கு அக்குரவர் பெருமானை எழுந்தருளு வித்துச் சிறப்புச் செய்திருப்பதனாலும் திருக்கயிலாய பரம்பரை திருநந்திமரபு மெய்கண்ட சந்தானத்தவருள் தருமையாதீனக் குரு மகாசந்நிதானம் அவர்களுடைய வரலாறு ஒருவாறு சுருக்கி வரையப்பட்டது. சித்தாந்த நிச்சயம் செய்தருளிய ஒன்பதாவது பட்டத்தில் வீற் றிருந்தருளிய திருநாவுக்கரசு தேசிக பரமாசாரிய சுவாமி கள் திருவடிபோற்றி எனத் தமியேன் மனமொழி மெய் களால் சிந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

இங்ஙனம்,
பண்டித வித்துவான்
**இராமகோவிந்தசாமி பிள்ளை**
முன்னாட் தமிழ்ப் பேராசிரியர்.

---

உ

# சைவ சித்தாந்த சாத்திர நூல்கள்

சித்தாந்த சாத்திர நூல்கள் இவையெனல் வருமாறு:—

சிவம் என்பது கடவுள் என்ற பெயருக்கிட்ட பொருளை விளக்குவதாம். ''கண்ணுதற் பெருங் கடவுளும்'' ''நுதல்விழி நாட்டத் திறைவன்'' ''முக்கட் செல்வர்'' பிறவா யாக்கை பெரியோன்'' ''நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்'' முதலாக வருங் காரணக் குறிக்கொண்டு அது துணியப் பெறுகின்றது.

சிவத்தொடர்புற்றது சைவம். சிவநெறிச் சார்பான நுண்ணிய முடிபுகளை யுடையதுவே சித்தாந்த மெனப் பெறும்.

பொதுவும் சிறப்பும் ஆகிய வேத ஆகமப்பொருள் ஒருமை, காண்பார் வேதத்தின் முடிபு வேதாந்தம்; வேதாந்தத்தின் முடிபு சித்தாந்த மாதலின் 'வேதாந்தத் தெளிவாம் சித்தாந்தம்' என்றார். சைவ சித்தாந்தம் என்ற சொற்றொடர் திருமூல மாமுனிவர் செப்பிய திருமந்திர நூலிடைக் காணப்பெறுகின்றது.

''கற்பன கற்றுக் கலைமன்னு மெய்யோக
முற்பத ஞான முறைமுறை நண்ணியே
சொற்பத மேவித் துரிசற்று மேலான
தற்பரம் கண்டுளோர் சைவசித் தாந்தரே''

என்பதாம்.

பட்டினத்தடிகளார்:

சைவ சித்தாந்த தெய்வ ஆகமத்தை என்று கூறுதலும் வற்புறுத்தும். சைவ சித்தாந்தக் கொள்கைகள் தொல்காப்பியம், திருவள்ளுவர், சங்க இலக்கியங்கள்

என்பனவற்றுள் குறிப்பாகவும் பன்னிரு திருமுறைகளில் வெளிப்படையாகவும் அறியக்கிடப்பனவாம். அவற்றினைப் பிற்காலத்தில் நன்முறையில் தொகுத்தும், வகுத்தும், விரித்தும் நூல்முறையாக அறுவுறுத்தும் பனுவல்கள் பலவாயினும் அவற்றுட் சிறந்தவை மெய்கண்ட நூல்கள் பதினான்குமேயாம்.

அவை :-

(திருவுந்தியாராதியன)

உந்திக் களிறு உயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மைப் பிரகாசம் — வந்தவருள்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று

என்பனவாம்.

1–2 திருஉந்தியார், திருக்களிற்றுப்படியார் :—

ஆய இவ்விரு நூல்களையும் யாத்தவர் திருவியலூர் உய்யவந்த தேவ நாயனாரும், திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனாரும் மாவர். இவை செந்தமிழ், திருவருள் நூல்களைப் பற்றுக்கோடாக்கொண்டு சிறந்த சிவாநுபவப்பயனாய் மிளிர்வனவாம்.

3 சிவஞான போதம் :- இதனைக்கண்டார் மெய்கண்ட தேவநாயனா ராவார். இவ் உயர்போதம், தமிழருடைய சிவநெறிக்கும் வடநூல் சார்பால் எழுந்த ஏனைய சமயங்கட்கும் உள்ள வேறுபாட்டினை நன்கு எடுத்துக்காட்டி முன்னையதன் உயர்வினை நிலைநாட்டற் பொருட்டு இயற்றப்பட்ட நூல்களுள் தலைசிறந்ததெனச் சாற்றல் தகும்.

4 சிவஞான சித்தியார் :- இதனை வகுத்து விரித்துணர்த்தியவர்த் திருதுறையூர் சகலாகம பண்டிதர் எனப்பெறும் அருணந்தி சிவாச்சாரியார்

ஆவர், இவர் மெய்கண்ட தேவர் மாணவர் ஆவர். இவர் இயற்றிய நூல்கள் சிவஞான சித்தியார் சுபக்கமும், பரபக்கமும், இருபா இருபஃதும் ஆகும். அச்சிவஞான போதத்தினை விரித்துரைக்கும் வாயிலாற் பிறசமயக் கொள்கைகளைக் கூறி மறுத்தற்குரியவற்றை மறுக்கும் புறப்பகுதியாகிய பரபக்கமும், சித்தாந்த உண்மை தெரிக்கும் அகப்பகுதியாகிய சுபக்கமும் ஆக இருபிரிவினை யுடையது சிவஞான சித்தியாராகும்.

5 இருபா இருபஃது :- இஃது பரமகுரவராகிய மெய்கண்ட தேவநாயனாரை வழிபட்டு வினாவு முகத்தான் சித்தாந்த நுட்பங்களை விரித்துரைப்பது.

6 உண்மை விளக்கம் :- இந்நூலை யியற்றியவர் திருவதிகை மனவாசகங் கடந்தார் ஆவர். இந்நூல் முப்பத்தாறு தத்துவங்களின் இயல்பையும், உயிர் இறை என்பவற்றின் தன்மையையும் திருக்கூத்தின் பொருளினையும், ஐந்தெழுத்துண்மை கூத்தப்பெருமான் திருவடியில் இலங்கு முறையையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் ஒவ்வொரு வாக்கியத்தால் உணர்த்துவதாம்.

7 சிவப்பிரகாசம், முதலிய எட்டு நூல்களையும், இயற்றினவர். தில்லைவாழ் அந்தணருள் ஒருவராகிய கொற்றவன்குடி உமாபதி சிவாசார்யர் ஆவர். இவ்வெட்டு நூல்களும் சித்தாந்த அட்டகம் எனக் கூறுவதுண்டு.

சிவப்பிரகாசமாவது உயிர்களின் பெத்த முத்தி நிலைகளை விளக்கும் வாயிலான் சைவசித்தாந்த உண்மைகளைத் தொகுத்துத் திரட்டித் தெரிவிப்பது.

8 திருவருட்பயன் :- திருவள்ளுவர் திருக்குறள் போலக் குறட்பாவால் அமைந்து மெய்யுணர்ச்சியைப் பத்து அதிகாரத்தால் இனிது விளக்கும். வீட்டின்பால் வடிவு ஆயது ஆம்.

9 வினா வெண்பா :- காட்சி காட்டுவது காண்பான் என்பவற்றின் நுண்ணிய இயல்பை, கேள்வி வாயிலா உணர்த்துவது.

10 போற்றிப் பஃறொடை :- கூத்தப் பெருமானைக் குறையிரக்கு முகத்தான் அநுபவப் பயனைத் தெரிவிக்கும் நூலாகும்.

11 கொடிக்கவி :- இந்நூல் தில்லையிற் கொடியேற்றும் வாயிலால் ஞான தீட்சைச் சிறப்பினைச் செப்புவதாகும். வியப்பினைப் பெரிதும் மிகைப் படுத்துயுரைப்பது. வரலாற்றுப் பகுதியொடு பொருததிப் பார்க்கத்தக்கது.

12 (பாசம் இலா நேசமுறு) நெஞ்சுவிடு தூது :- குரு வடிவாய் இறைவன்பால் நெஞ்சைத் தூதுவிடுக்கும் வாயிலாக அறிவு நெறியின் முறையைத் தெரிவிக்கும் நூலாகும்.

13 உண்மை நெறிவிளக்கம் :- சைவ சித்தாந்தத்துள் சாற்றப்பெறும் தசகாரியமாகிய பத்தும் தெள்ளிதின் தெரிவிக்கும் நூலாகும்.

14 சங்கற்ப நிராகரணம் :- இந்நூல் மாயாவாதக் கொள்கையையும் சிவஞான சித்தியார் பரபக்கத்துள் கூறப்படாதனவாகிய அகப்புறச் சமயங்கள் அகச்சமயங்கள் என்பனவற்றையும் எடுத்து ஓதி

மறுத்து அவைகட்கும் சைவ சித்தாந்தத்திற்கும் உள்ள வேறுபாட்டை நுண்ணிதின் உணர்த்தும் இறுதி நூலாகும்.

இச்சாத்திர நூல்களின் சாரத்தையும் திருமுறையாகிய பெருமுறை நூல்களின் சாரத்தையும் கொண்டு உரைக்கப்பெறுவது. இந்நூல் முத்தி நிச்சயம்போல, சித்தாந்த நிச்சயம் என்ற நூலும் செய்யப்பெற்றது என்றது ஓர்ந்துணர்ந்து கோடல் வேண்டும்.

வாழ்க தமிழகம்.

இங்ஙனம்,
பண்டித வித்வான்,
இராம. கோவிந்தசாமி பிள்ளை,
ஆசிரியர்.

---

உ

# சித்தாந்த நிச்சயவுரைக் குறிப்பு

வெண்பா

நாவலூர் நம்பிக் கருள்புரிந்த நாதனே
ஆரையா வென்னையினி யாதரிப்பார்-கூரைவேல்
தாங்கும ரன்றமையா தாமரையி னீரினைப்போல்
ஏங்குகின்றேன் காத்தருள்க வே

இந்நூல் மூலத்தினை மாத்திரம் தருமபுரவாதீன வித்துவானாகிய ப. முத்துத்தாண்டவராய பிள்ளை யென்பவர் வழக்கம்போல் படித்த சிலமடத்துமுனிபுங்கவருடைய உதவிகொண்டு 1928-ல் அச்சிட்டுள்ளனர். இந்நூற்கும்,நம்சரசுவதிமகால் நூல்நிலையப் பிரதிக்கும் மாறுபாடுகளும், வேறுபாடுகளும் காணப்பட்டன. பின்னர் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் இந்த மடாலயப் பிரதியினைக்கொண்டு நூலாசிரியர் தம் திருப்பெயரினையே மாற்றிச் சில வேறுபாடுகளுடன் அச்சிடலாயினர்.! ஆனால் கழகத்தினரோ; முனிபுங்கவரினையும் முத்துத்தாண்டவராயப் பிள்ளை யவர்களையும் கொண்டு திருத்தியமைத்துப் பதிப்பித்ததாகக் குறிப்பிட்டுள்ளனர்.

அவை யெவ்வாறாயினும் ஆகுக. தருமையாதீனப் பிரதியும், நம் நூல் நிலையப் பிரதியும் பெரிதும் வேறுபாடின்றி காணப்பட்டது. பிரதிபேதங்களும் பலவாயின. இதனோடமையாது வேறு நூல்நிலையங்களில் இச்சுவடி (ஓலையேடு) இருக்கின்றனவா வெனத்துருவி யவற்றினையும் வைத்துக்கொண்டு, சம்பிரதாயப் பயிற்சி முற்றிய சிலருடன் கலந்து ஒருபதிப்பாதல்வரல் வேண்டும். அப்படிவரின் முத்திநிச்சயப்பேர் உரைபோல் இந்நூற்கும் ஓர் பேர்உரை வழங்கல் கூடும்.

நூல் நிலையத்திலே இணைந்த உரையினைப்பற்றி முன்னுரையிலேயே முனைந்து வரையப் பெற்றிருக்கின்றது. ஏதோ இந்நூற்கும் பலமேற்கோள்கொண்டு உரையெழுத வேண்டுமெனப் புகுந்தவர் அந்நெறி படராது இதுவே செந்நெறியாம் என வுன்னியோ பிற கருதியோ திருமுறைகளையும் சித்தாந்த சாத்திரமாதி நூல்களையும் கருவியாகக்கொண்டு உய்த்துணர்வைப் பாகத்தாற் பரியவுரை யெழுதினர் போலும். இந்நூலுரையினை அப்படியே அமைத்து, ஒவ்வொரு செய்யுட்கும் பதவுரையும் இலக்கணக் குறிப்பும் எழுதிடின் கற்பார்க்குப் பெரிதும் பயன் ஆம். உரை யெழுதின வரோ, சிவாநுபூதிச் செல்வர் ஆக இருத்தல்வேண்டும். எத்துணை நூல்களைக்கொண்டு இத்துணை முடிவிற்குரை வகுத்துள்ளனர்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரவாதீன மடாலய ஞானவரசு புரியும் அருட்டிரு குரவர்களும் அம்மடாலயத்தினை யடுத்த சம்பந்தசரணாலயர், குமரகுருபரர், படிக்காசுத்தம்பிரான் முதலிய முனிவர்களும், சாத்திரங்கட்கும் தமிழ்மொழிக்கும் பெருந்தொண்டு புரிந்தருளி யிருக்கின்றனர். வெள்ளியம்பலவாணத்தம்பிரான் அவர்களோ நூலும் உரையும்பலகண்டருளியுள்ளனர். இவரையொத்தார் இந்நூற்குரை கண்டிருப்பாராயின் சாத்திரம் பயில்வார்க்குப் பெரிதும் பயனாம் என்பதொருதலை.

வாழ்க தமிழும் சைவமும்

உ

குருபாதம்

# சித்தாந்த நிச்சயம்

திருநாவுக்கரசு தேசிகர் பரமாசாரியர்
அருளியது

## காப்பு

(வெண்பா)

சித்தாந்தம் யாதென்று சிந்திப் பவர்தமக்குச்
சித்தாந்த நிச்சயத்தைச் செப்பவே — முத்தனாம்
ஐம்முகத்தான் றந்த அருட்கதிரோன் போல்விளங்கும்
கைம்முகத்தா னேமிகவுங் காப்பு.

## நூல்

(கட்டளைக் கலித்துறை)

நல்லார்கள் போற்றிய மெய்கண்ட
நாத னயந்தளித்த
சொல்லா கமப்பொரு டன்னைவிட்
டன்னியஞ் சொல்லுமிந்தக்
கல்லார் மருட்சொற் கழித்துச்சித்
தாந்தக் கருத்திதெனப்
பொல்லாத பிள்ளை யிணையடி
போற்றிப் புகலுதுமே. (1)

மெய்கண்ட தேவ னருளாற்
சிவாகம மெய்ப்பொருடேர்ந்
தையமின் மெய்யடி யாருக்
களித்ததை யாய்ந்தவர்போற்
பையவுள் வந்து பொருண்மாறு
பாடு பகர்ந்தவர்க்கே
செய்ய பொருளவன் செப்பிய
வாறிவண் செப்புதுமே. (2)

சுத்தியைக் கண்டிது வெள்ளியென்
றார்க்கிது சுத்தியென்று
சுத்தியின் றன்மை யறியும்
பரீட்சை தொகுப்பவர்போன்
முத்தி சிவனுக் கிணையன்
றவனின் பின் மூழ்குவதே
முத்தி யுயிர்க்கென்றி யானும்
பரீட்சை மொழிகுவனே (3)

ஆகம வேத புராணாதி
யாய்ந்த வருளுடையோ(ர்)
ஏகனா தானந்த மேமுத்தி
யென்ன விசைத்ததனை
யூகமி லாது சிவசம
முத்தியென் றோதினர்க்குப்
போக மலாது பரமுத்தி
தானும் பொருந்தலின்றே (4)

ஒருமை தருஞ்சிவ னானந்த
முத்திய தொன்றொழியப்
பெருமைசெய் முத்தி பிரானுக்
கிணையெனும் பித்தர் சொன்னீத்(து)
அருமை யுடையசித் தாந்தமீ
தென்ன வருளுருவாம்
தருமையில் நாவுக் கரசசம்
பந்தனுஞ் சாற்றினனே (5)

(அ) ஒருமையை தாகுஞ் சிவானந்த
முத்தி யினையொழியப்
பெருமைசெய் முத்தி பிரானுக்
கிணையெனப் பேசுவது
பருமை யொழியுமின் சித்தாந்த
மீதெனப் பாரில் வந்து
தருமை யழகிய சிற்றம்
பலகுரு சாற்றினனே. (6)

ஆணவந் தன்னை யபிபவஞ்
செய்திங் கரனருடான்
பேணிய முத்தர்க் கலாததெந்
நாளும் பெருந்துணையாய்த்
தானுவி னானந்தந் தன்னையு
மீவது சாற்றுமறை
பூனு மரனருள் பெற்றவர்
தாமும் புகன்றனரே. (7)

கண்ணிற் படல முடையார்
வயித்தியன் காட்டும்வழி
யண்ணி நடப்பர் நடவார்
படல வவலமற்றோர்
நண்ணு முயிரும் மலத்தா
லரன்றுணை நச்சியிடு(ம்)
எண்ணு மலந்தவிர்ந் தாலிறை
வன்றுணை யின்றெனிலே. (8)

படல யுவமையைப் பன்னிய
தீங்ஙனப் பண்டிதன்றான்
படலம தோடப் படிமிசைத்
தன்றொழில் பண்ணினதிற்
படல வயித்தியன் றன்றுணை
தன்னையும் பன்னினதேல்
படலம தொப்ப வுருவாய்
மலத்தையும் பாறுமென்னே (9)

உன்னும் பிருதுவி தான்முத
லாய வுலகதலின்
மன்னும் பொருட்பெய ராதி
யறிவின் மதியிலியோர்
சொன்ன பொருட்பெய ராதி
துணிந்திடச் சொல் *குருவால்
பன்னிய சத்த மதனாலெஞ்
ஞானங்கள் பாற்றினரே. (10)

மன்னுமஞ் ஞானமு(ம்) மாறிப்பின்
றாமு மதியுளராய்ச்
சொன்ன குருவின்றித் தாமே
பொருளைத் துணிந்ததுபோன்
முன்னவன் றன்னரு ளான்மல(ம்)
நீங்கிய முத்தர்களு(ம்)
அன்ன சிவனின்றித் தாமறி
வாரென் றறைந்திடலே (11)

நாதன் பரம்பர(ன்) நம்பன்
பரசிவ(ன்) நாரிபங்கன்
பூதம் பலபுடை சூழப்
புயங்கப் புனிதநடம்
பாதம் பணவர் பரவப்
புரிபவன் பண்டறிஞர்க்(கு)
ஓது மறைப்பொரு டேறார்
கருத்தில(ர்) ஊமர்களே. (12)

சுருதி குருபரன் மெய்சே
ரநுபவஞ் சொல்லுமுறைக்
கருதி யுளவணங் கூறுங்
கருத்தனைக் காண்கிலராய்
மிருதி தருமமும் வேத்தி
நிலையும் விரும்பிலராய்ப்

* குருவின்

பருதி யெனத்தமைப் பாவிப்பர்
ஞானம் பருகுவரே. (13)

அளவைப் பொருளு மளத்தற்
கருவியு மான்றநிலை
யுளவைக் கருது மொழுக்கமுஞ்
சீலமு முள்ளவராயக்
களவைக் கடிந்து கருணைக்
*குருபரன் காற்கமலத்(து)
உளவப் பருணித ருண்மைச்
சிவஞான மோங்குறுமே. (14)

மறைதந்த வம்மான் மறைப்பைத்
தவிர்க்கவம் மாமறையி(ன்)
உறைதந்த சத்தியை யுள்ளொளி
யாக்கி யுயரொளியில்
கறைதந்த பாசங் கழற்றிக்
கருணைக் கடலமுதா(ம்)
மறைதந்த ஞானஞ் சிவஞான
(மெ)ன்ப ரறிஞர்களே. (15)

சத்திக்கு நாச மலத்துக்கு
நாசந் தனிமுலா(ம்)
அத்தன் வசன விரோதமு
(மி)ன்றெனி லன்றுரைத்த
சத்திக்கு நாசந் தரவே
மலத்துக்குஞ் சாருமையோ
வத்தரு மஞ்சீர் சிதைந்தாற்
றருமியு (ம)ற்றிடுமே. (16)

---

*குருவினின்

*பன்னு குருவின் வசனந்
தினமுமுன் பார்த்திருந்தே
துன்னுமஞ் ஞான மதனைத்
தினமுந் துணிகின்றதா(ம்)
அன்னவன் சொன்ன வசனத்தை
விட்டிங் கறிவரிதான்
மன்னு குருவின் வசனத்தை
நாளு மறக்கரிதே. (17)

முத்தியி லீசன் றுணைநீ
முனையினின் முன்மொழிந்த
முத்திய தாவது பாசங்க
ளீங்கி முழுதுணர்தல்
*சித்த ரவர்க்கு மலத்தி
னிவிர்த்திசிந் திக்கிலினி
யத்த மிங்கியாரு சொல்வகை
யணவவு மாய்ந்திலமே. (18)

ஆணவ நீங்குவ தான்மா
வினுக்கன் னியதலத்தே
நாணி நடப்பது வோவன்றி
நாசத்தை நண்ணுவதோ
*தாணுவின் சத்தியி னலோ
தடைப்பட் டிருப்பதுவோ
பேணியிம் மூன்றனுட் பெற்றதை
யீதென்று பேசுகவே (19)

அன்னிய தேச மடையுமென்
றான்மல மம்மலமு
மன்னிய புற்கலன் றானும்
வியாபக மாறுமன்றே

---

*இது முதல் சில செய்யுட்கள் இணைப்பாம். நூல் நிலையப் பிரதியில் காணப்பட்டவை.

*முத்தர்க் குறுபொருள் யாஞ் சொல்வதன்றி மொழிய தின்றே

*சொன்ன வகையன்றி நாசத்தை
யேதுமென் றேதுணியின்
மூன்ன வனித்த மலமென்
றுரைத்தது மோசமன்றே. (20)

---

(ஆ) சத்திக்கு நாச மலத்துக்கு
நாசத் தகைமையின்றா
மத்தன் வசன விரோதமு
மின்றெனி லன்றுரைத்த
சத்திக்கு நாசந் தரவே
மலத்துக்குஞ் சாருமையோ
*சித்தரு மஞ்சீர் சிதைந்தாற்
றருமியுஞ் சிந்திடுமே. (21)

குணத்தின் வடிவம தாகி
யிருந்த குணியதற்குக்
குணத்தை யகன்ற விடத்திங்
குருவத்தைக் கூறுகநீ
குணத்தின் வடிவை விடுத்துக்
குணியைக் குறிப்பரிதாற்
குணத்தை விடுத்துக் குணியிங்
கிருப்பது கூறரிதே. (22)

கண்ட கடத்தின் றருமங்
கறுப்புக் கழிந்திடவு
மண்டி யருண மதற்குக்
குணமென வந்திடவும்

---

*இன்ன வகையின்றி நாசத்தை யெய்து மென்றே துணியின்

* அத்தருமஞ்சீர் சிதைந்தாற் றருமியு மற்றிடுமே.

*தாணுவின் சத்தியிடத்தே தடைப்பட்ட தன்மையதோ

விண்டக லாமற் கடமிங்
கிருக்கவு மேதினியிற்
கொண்ட படிமல சத்திக்கு
நாசமுங் கொண்டிடலே. (23)

பன்று கடத்தின் கறுப்பைத்
துணிக்கப் பகையதுவாய்
மன்னிச் சிவப்பொன்று வந்தது
போல மலமதற்குந்
துன்னிய வாவா ரகசத்தி
தன்னைத் துணிந்திடவே
யன்னிய சக்தி பிரகாச
மாய்வந் தணையுமென்னே. (24)

அன்றியு மந்த மலசத்தி
தன்னை யகற்றுவது
துன்றி யிடுஞ்சிவ சத்தியெ
னுஞ்சொற் றொலைந்துவிடு
முன்றன் மொழிப்படி யாகமந்
தானு முரைத்திடுமோ
வென்றும் விசாரித் துரையா
யியம்புவ மின்னமுமே. (25)

சைவத்தி லெல்லாப் பொருளும்
அனாதித் தகைமையென்று
*மெய்வைத்த வாகமஞ் சற்கா
ரியத்தை விளம்புவதும்
பொய்வைத்த சொல்லாய்ப் பொருந்துங்
கடதன்மம் பொன்றுமெனின்
மெய்வைத்த குற்றங்க ளின்னு
மநேகம் விளம்புதுமே. (26)

*மொய்வைத்த குற்றங்க ளின்னு மனேக மொழிகுவமே.
(த. ஆ. பி.)

அந்த மலசத்தி தன்னை
யசத்தென் றறைகுதியோ
*நந்தல் பொருந்த லிலாதசத்
தென்று நவிலுவையோ
தந்த வசத்தெனிற் சத்தி
சசக்கொம்பு தன்னை நிகர்த்(து)
இந்த வுயிர்ச்சத்தி தன்னை
மறைப்பது மில்லையன்றே. (27)

ஒன்றிடுஞ் சத்தென் றுரைக்கின்
மலசத்தி யுண்மையின்று
பொன்றிடு மென்றதென் நித்திய
மாமுயிர் போலவிவண்
அன்றியு மோட்சநற் காரிகை
தன்னி லறைந்ததுவு(ம்)
நன்றல வென்று மொழிவோ
நயந்தமை நண்ணிடிலே (28)

ஒன்றுநற் சத்தென் றுரைக்கின்
பலசத்தி தன்னையின்று
பொன்று மெனுமுரை பொய்யாகுஞ்
சம்பு முதற்பொருள்போல்
அன்றியு மோக்ஷநற் காரிகை
தன்னி லறைந்ததுவு
நன்றல வென்று மொழிவோ(ம்)
நயந்துநீ நண்ணிடிலே. (29)

வெஞ்சக மாகுஞ் சிவசத்தி
சன்னிதி வேண்டி நித்த(ம்)
எஞ்சலி லாவுயிர் எப்போது
மேவி யிருக்கவென்றே

---

*நந்த லொழிந்திடுஞ் சத்தென்று நானா நவிலுவையோ

துஞ்சலி லாவுயிர் வேத்தியு
    முண்டென்று சொல்லியது
வஞ்சக வாணவம் தான்கெடு
    மென்றவர் மாற்றமன்றே (30)

வெஞ்சக மாகுஞ் சிவசத்தி
    சன்னிதி யைவிரும்பி
யெஞ்சலி லாவுயி ரெப்போது
    மேவி யிருக்கையினாற்
றுஞ்சலி லாவுயிர் வேத்தியு
    முண்டென்று சொல்லியது
வஞ்ச மலங்கெடு மென்றுரை
    செய்தலா மாற்றமன்றே (31)

வஞ்ச மலங்கெடு மாகையி
    னான்மலம் வந்துபின்னு(ம்)
எஞ்ச லிலாத வுயிர்க்குத்
    தொடருவ தில்லையென்றே
விஞ்சைநல் லாகமந் தானும்
    விளம்பிட வேண்டுமிதற்(கு)
அஞ்சி மலத்துக் கழிவின்
    றபிபவ மாமெனிலே (32)

வஞ்ச மலங்கெடு மாகையி
    னான்மறித் துமறைப்புத்
துஞ்ச லிலாத வுயிர்க்குத்
    தொடருவ தில்லையென்றே
விஞ்சைநல் லாகமந் தானும்
    விளிம்பிட வேணுமிதற்
கஞ்சி மலத்துக் கழிவின்
    றவிபவ மென்றிடிலே (31)
*ஆதித்தன் றன்கிர ணத்தா
    லிருளை யநுபவித்தே

* ஆதவன் றன்கிர (த. ஆ பி)

*சோதிதன் னேத்திரம் தான்றுணி
யும்பொரு ளைத்துணிய
நீதி யதாகித் துணையா
யிருந்த நிலைமையைப்போ
*லாதியு முத்தியி லான்மா
வறிதற்கு மாந்துணையே (34)

ஆணவம் பாக மடைதற்
பொருட்டிங் கரனருடான்
பூணுங் கலாதிக ளாலே
மலத்தினைப் போக்கியபின்
பேணிச் சுகாதி யளிக்கின்ற
பெற்றியிற் பெத்தத்திலே
தாணுச் சகாயந் தவிராது
வேண்டுதல் சத்தியமே. (35)

ஆணவம் பாக மடைந்த
வதற்பி னரனருடான்
பூணு மலத்தை யயிபவ
மெங்கும் பொருந்திடவே
*பேணி யருளிய பின்னு
மரனிவ் வுயிர் நிமித்தம்
பூணுந் தொழிலின் றதனா
லரன்றுணை போமெனிலே. (36)

கடத்தை வனையுங் குயவன்
வனைந்த கடநிமித்தம்
நடத்துந் தொழிலின் றதுபோ
லபிபவ நண்ணிடுமோ

---

*கோதறு னேத்திரந் தானறியும்பொருள் கூர்ந்தரிய
*சோதியு முத்தியி லான்மா வுணரத் துணையெனுமே
*பேணியருளிய பின்னு முயிர்க்கப் பிரான்றினமும்
தருமையாதீனப் பிரதி

மடக்கினிற் றீப மிருந்த
விடத்துமுன் மன்னுமிருள்
அடர்த்த வகையை விசாரித்து
நீமற் றறைகுதியே (37)

அந்தநன் னேத்திரந் தன்னை
யடக்கின வாரிருளின்
பந்த மதனை யடக்கவென்
றெண்ணிப் பரிந்துகொண்டு
வந்த விளக்கொரு காலிரு
டன்னை மறித்ததற்பின்
றந்த தொழில்விட் டிருந்ததென்
றேமிகச் சாற்றிடிலே. (38)

பன்னும் விளக்கிற் பயனிலை
யாகும் பகர்விளக்கும்
*மன்னிய தேச மடையப்பின்
னந்த விருளடர்ந்தே
துன்னுவ தென்கொலச் சொல்லன்றிக்
காரியத் தோற்றமின்றா
*மன்னிய மேற்சொல்திட் டாந்த
மதற்கு மறையிதுவே (39)

**இந்த விரோதத் திருளை
யிபிபவஞ் செய்நிமித்தம்
வந்த விளக்குக்கு மாறாத்
தொழிலை மதித்துரையா(ய்)
*இந்தநல் லாணவந் தானே
யநாதி யெனும்விருத்தந்
தந்த பொருளையுந் தானறிந்
தாயிலை சாலநன்றே. (40)

---

*மன்னியதேச மடையப்பின் னவ்விரு ளானதுதான்
*மன்னிய மேற்சொல்திட் டாந்த மதற்கும் வழக்கிதுவே ,,
**அந்த விரோதத் திருளையபிபவ மாகச் செய்ய த. ஆ. ஏ.
*இந்த நல்லாணவந் தானே யநாதி யெனுஞ் செயுடான் ,,

அக்கினி வெம்மை யடக்கு
மவுடத்த தாம்பலத்தைப்
*பொக்க மிலாம லபிபவஞ்
செய்தபொல் லாமணிதான்
மிக்கக லாம லிருந்த
வளவும் வியனெருப்புத்
**தொக்குநர் தம்மைச் சுடுமணி
போகிற் சுடாததன்றே. (41)

சொன்ன வவிழ்த பெலத்தை
யடக்குஞ் சுடர்மணிக்கு
மன்னிய வக்கினி வெம்மை
யடக்கு மருந்துக்குந்தான்
றுன்னி பபிபவஞ் செய்தொழி
லென்றுந் தொடர்ச்சி யென்ப
**துன்னி யுரைசெய் யுரைப்போ
மிதன்றியு மோர்ந்து கொள்ளே. (42)

மன்னுங் கலைமுத லாகுங்
கரணங்கள் வந்ததனான்
மின்னி யிருந்த வளவு
மறிவும் விளங்கிடுமான்
***மன்னுங் கலைமுத லாயின
நீங்கின் மதியிலதாற்
சொன்ன கலாதிக் கபிபவ
மென்னுந் தொழினித்தமே. (43)

---

*தக்கமிலாம லபிபவஞ் செய்த தனிமணிதான் ,,
**தொக்குநர் தம்மைச் சுடுமணி போகிற் சுடுவதின்றே ,,
**உன்னி யுரையாயுரைப் போமினமு முணர்ந்து கொள்ளே ,,
***அன்ன கலைமுதலாயின நீங்கி னறிவிலதால் ,,

*அன்றியு மானம் குணத்தை
யபிபவஞ் செய்தமல
மன்றொரு காலத் தபிபவஞ்
செய்திங் ககன்றதுவோ
வின்றள வுஞ்சொல் லபிபவஞ்
செய்திங் கிருக்கின்றதோ
+வொன்றை விசாரித் துரைப்பாய்
உலக முவந்திடவே. (44)

அன்றொரு காலத் தபிபவஞ்
செய்திங் ககன்றதெனி
லின்றிமை யாலம் மலத்துக்
கபிபவம் என்கொலய்யோ
**இன்றுநற் சாத்தனைக் கொற்றன்
புடைத்திட ருற்றபின்னை
++நன்றுடைச் சாத்தனை யென்கொல்
புடைத்தா யெனநவின்றே (45)

ஒன்றுநற் சாத்தற் குரியவர்
வந்திங் குயர்கொற்றனைப்
***பொன்றுவன் னென்னப் புடைத்திங்
கிருப்பது பூவுலகின்
++நன்றுடைச் சாத்தன் பிழைத்தற்கு
நன்மருந் தாயிடுமோ
+வின்றுன் மொழியில் வசனவி
ரோதமு மெய்திடுமோ. (46)

---

*சென்றிவ் வுயிரின் குணத்தை த ஆ ஏ.
+ஒன்றை விசாரித்துரையாய் விடையை யுவந்திடவே ..
**சென்றொரு சாத்தனைக் கொற்றன் புடைத்தவன்
[சேர்ந்தபின்னே ..
++யொன்றிய சாத்தனை யேன்புடைத் தாயென்றுரை
[நவின்றே ..
***பொன்றுவசெய்கோற் கொடுபுடைத் தாலது பூவுலகி
++நன்றயர் சாத்தன் பிழைத்தற்கு ..
+வின்று நின் வாக்கில் வசன விரோதமு மெய்தியதே ..

இன்றள வும்நல் ***லுயிர்க்கு
ளறிவை யிருண் மலமுந்
துன்றி யபிபவஞ் *செய்திங்
கிருக்கு மெனச்சொலினீ
பொன்றுத லற்ற புகழ்முத்தி
யின்கண் புகல்சிவனும்
என்று மலத்துக் கபிபவஞ்
செய்வ னெனவியம்பே (47)

உரைத்த விசேடத் தபிபவஞ்
செய்கின்ற வொண்பொருட்கு
*வரைத்தியம் பாத்தொழி லுண்டென்று
நாளு மகிழ்கின்றநீ
நிரைத்த மலத்தை யபிபவஞ்
செய்கின்ற நின்மலற்கும்
புரைத்த தொழிலென்று நீங்காத
தென்னப் புகழ்ந்துரையே. (48)

அன்றியுஞ் சத்தியச் சோதி
யெனுநல் லருட்குருவு
மின்னுயிர் தங்கட் கனுக்கிர
கத்தா வியம்பினதாய் (இயம்பியதோர்)
*பொன்றுத லற்ற புகழ்மோட்ச
காரிகை யிற்புகன்ற
நன்றுரை தன்னை யறிந்திலை
*நீயு நவிலுதுமே (தியோ) (49)

---

***உயிர்க்குணந் தன்னை ,,
*செய்திருக்கும் மெனச் சொல்லிடினீ ,,
*உண்டென் றுரைத்து மலமறைப்பா த. ஆ. ஏ.
*யொன்றருள் செய்மோட்ச காரிகை தன்னி
(லுரைத்திருக்கும் ,,
*நாமும் நவிலுதுமே ,,

இது த. ஆ. ஏடு

ஆருஞ் சிவசத்தி யான்மாவின்
வேத்தி யருளுமெனத்
தேரும் படிசைவ சித்தாந்தஞ்
செப்ப வதற்கிசையா
தோரும் பரமத வாதியும்
வெஞ்சக முள்ளளவே
சீரிய வெங்கியந் தானும்
விளங்குஞ் சிறந்தென்றுமே (50)

இது சா. நா. நி.

சாருஞ் சிவசத்தி யான்மாவின்
வேத்தி தருவதென
வாரும் புகழ்சைவ சித்தாந்தஞ்
செப்ப வதுதெரியா
.......................................................
.......................................................
சீருறு வெங்கியந் .....................
சிறந் தென்றுமே. (51)

வெஞ்சகம் போனபின் வெங்கியந்
தானும் விளங்கலின்றாம்
வஞ்சமின் முத்தர்க்கு மிவ்வண்ணம்
வந்து மலமறைக்குந்
*துஞ்சலி லாமுத்தி சொல்லுவ
தென்கொ லெனச்சொலவே
விஞ்சைசேர் சத்தியச் சோதி
யுரையை விளம்புதுமே (52)

---

* எஞ்சலி லாமுத்தி சொல்லுவ தென்கொலெனச்
சொல்லவே
*துஞ்சலில் சத்தியச் சோதிசொல் வாக்கியஞ்
(சொல்லுதுமே த. ஆ. ஏ.

தஞ்சம தாய் *வெஞ்ச மாகுஞ்
சிவசத்தி சன்னிதியை
யெஞ்ச லிலாவுயிர் எப்போது
மேவி யிருக்கையினால்
*துஞ்சலி லாவுயிர் வேத்திய
முண்டென்று சொன்னதுவும்
விஞ்சைநற் சைவர் விளம்பிய
தின்றோ விரித்துனக்கே. (53)

1 வெஞ்சக மாகுஞ் சிவசத்தி
சன்னிதி மேவியென்றுந்
2 தஞ்சம தாயுயிர் நீங்காது
கூடித் தரிக்கையினால்
3 ............... ..........................................

............... ..........................................
4 செஞ்சொலி னாற்சைவர் செப்பிய
தின்றோ தெரிந்துனக்கே.

மலபரி பாகம்வந் தாற்சிவ
சத்தி மலமதனை
விலக வபிபவஞ் செய்திடச்
சீவன் விசுத்தமுற்றே
*யிலகிய தன்சத்தி யாலு
மலசத்தி யேற்றிடுமால்
நிலவுஞ் சிவசத்தி யென்றுனை
யென்று நிகழ்த்திடிலே (54)

ஈசனும் புற்கலன் றானு
மிசைந்திங் கிருண்மலத்தை
நாசம தாக வபிபவஞ்
செய்வ ரெனநவின்றாய்

---

*துஞ்சலில் சத்தியச் சோதிசொல் வாக்கியஞ்
சொல்லுதுமே த. ஆ ஏ.
*இலகிய தன்சத்தி யாலு மலத்தினை ,,

பேசிய முத்தியி லீசன்
றுணையைப் பிரிப்பதென்னோ
பாச மகல வரனு
மபிபவம் பண்ணினனே (55)

அந்தச் சிவசத்தி தன்னா
⁺லபிபவ பட்டமல
மிந்த வுயிர்ச்சத்தி யாலு
மபிபவ மென்கொலையோ
⁺யெந்தை யருட்சத்தி யாலே
மலசத்தி யேற்றியபின்
றந்த வுயிர்ச்சத்தி யாது
புரிந்தது சாற்றுகவே. (56)

ஆணவ சத்தியை யெல்லா
மகற்றுழி யாங்கதிலே
தாணுவின் சத்தியிற் றீராத
சத்தியுஞ் சற்றுளதோ
காணு முயிர்மற் றதனை
யபிபவங் கண்டதுவோ
வீணின் மலசத்தி யெல்லா
⁺மகற்றி விடுத்திடலே. (57)

பூணு மவற்றை யுயிருந்தன்
சத்தியிற் போக்கியதோ
தாணுவின் சத்தியிற் றீரா
திருந்ததைத் தள்ளுமெனிற்
பேணும் பிரானிற் பெரிதா
முயிர்பெற்ற சத்தியின்றித்

---

⁺அபிபவமானமல த. ஆ. ஏ
⁺முந்தைச் சிவசத்தி யாலேமலசத்தி மோசித்தபின் ,,
⁺அகற்றிப்பின் வீட்டிடவே ,,

தாணுச் சருவ கிருத்திய
னென்பதுந் தள்ளிடுமே. (58)

ஆணவஞ் சேரி லுயிர்க்குள்ள
சத்தி யகற்றியதோ
பூணுஞ் சிவசத்தி யாலொழி
யாததைப் போக்குமெனிற்
பேணும் பிரானிற் பெரிதா
முயிர்ச்சத்தி பிஞ்ஞகனாற்
காணுஞ் சருவ கிருத்திய
மென்பதுங் கண்டிலமே. (59)

*அந்த மலசத்தி யெல்லா
மரன்முன் னகற்றிவிடத்
தந்த வுயிர்ச்சத்தி தானு
மதனைத் தடுத்ததெனிற்
பந்த மிலாப்பரன் பாசத்தைத்
தள்ளிப் பரையதனால்
அந்தமி லானந்த நல்குவ
னென்பதை யாய்ந்திலையே. (60)

அன்றியு மீச னடக்கி
விடுத்தபி னாருயிரு
மன்ற மலத்தினை நீக்கு
மெனச்சொன்ன வார்த்தைகளே
யொன்று மலபரி பாக
மடைந்தபின் னோங்குயிர்தான்
வென்று மலத்தை யடக்குமென்
றாலென் விளம்புகவே. (61)

(அ) அன்றரன் பாச மகற்றி
விடுத்தபின் னாருயிருந்
துன்று மலந்தனைப் போக்கிடு
மென்றுரை செய்ததென்னோ.

இப்பிரதி பேதம் ஆயற்பாலதாம்.

---

*சிந்த மலசத்தி யெல்லா மரன்முனந் தீர்த்தகல ,,
வந்த மலசத்தி தன்னை யுயிர்ச்சத்தி மாய்த்ததெனிற் ,,

செம்பிற் களிம்பை யிரத
குளிகைச் சிதைத்தொருகால்
இம்ப ரறிய விடுத்தபின்
செம்பு களிம்பதனை
நம்பரன் சத்தியி னாலே
தடுத்ததென் றேபொருளாம்
வம்பது காணும் வசன
விரோதமும் வந்திடுமே (62)

(அ) செம்பிற் களிம்பை யிரத
குளிகைச் சிதைத்ததுபோல்
நம்பரன் சத்தி மலத்துக்கு
நாசத்தை நல்குமென்ற
உம்பர்கள் போற்றும் வசன
விரோதமுண் டாமதனால்
இம்பரி லிவ்வணம் யாங்க
ளிசைத்தன மென்றிடிலே
(இப்பாடல் பொருள் புலனாதற்கேற்ற தாயுளது)

செம்பிற் களிம்பை யிரத
குளிகைமுன் தீர்த்தகலப்
பம்பும் களிப்பு திரும்பிப்
பொருந்தும் பரிசுதன்னை
மொய்ம்புறு செம்புதன் சத்தியிற்
றீர்த்தன் மொழியவரும்
வம்பிது காணிப் படியா
கமத்தில் வசனமின்றே. (63)

மலத்தை யிருளென்றுங் காளித
மென்று மதித்தரனைத்
*துலக்குங் குளிகையு மாதித்த
னென்றும்பின் சொன்னதுபோற்

*துலக்கும் பரிதி குளிகை யென்றாகமஞ்
சொன்னதுபோல்
த. ஆ. எ.

*கலக்க வுயிரையிவ் வண்ணஞ்செய்
பாதவொண் காரணத்தால்
*மலேக்கு மறிவுள வான்மா
மலத்தை மறைப்பதின்றே. (64)

மூன்பு விளக்கொன்று வந்திரு
ணீக்கிமுன் னுள்பொருளைப்
பின்பு விளக்கிய பின்னும்
விளக்கொன்று வந்ததனோ(டு)
இம்பர் பொருள்விளக் கஞ்செய்தல்
போலிறை வன்னுடனே
நம்பர்(கு)முத்த ருரிக்குவர்
நன்மலந் தன்னையுமே. (65)

விளக்கொன்று வந்திரு ணீக்கிப்
பொருளை விளக்கியபின்
விளக்கொன்று வந்தத னோடு
பொருளை விளக்குதல்போற்
றுளக்கொன் றிலாது மலந்தீர்த்
தருளிய சோதியுடன்
றுளக்கொன் றிலாமுத்த ருந்தீர்ப்ப
ராணவத் துன்பத்தையே (66)

இவ்வண்ணஞ் செம்பி லியம்பிய
குற்றமு மின்றிறைவன்
செவ்வணஞ்(ச்)சத்தி துணையுஞ்
சிதைந்தது வென்றிடினீ
யெவ்வண்ண மிந்த விளக்கையுங்
காரண மாயிசைத்தாய்
செவ்வண்ண நாடிற் சிதையு
மிதுவுந் தெளிந்திடுமே. (67)

---

*கலக்க வுயிர்க்கித் திறமா கமத்திற் கழறலின்றால் ,,
அலைக்கு மறிவுள வான்மா மலத்தை யகற்றலின்றே ,,

இவ்வா றிசைத்திடின் முன்சொன்ன
குற்றமு மின்றிறைவன்
செவ்வான சத்தி சகாயமுந்
தீர்ந்த தெனச்செப்பினீ
யெவ்வாறு பின்வந்த தீபமுங்
காரண மென்றிசைத்தாய்
ஒவ்வாது நீசொல்லும் வார்த்தை
தவறென் றுரைக்குவமே. (68)

இருடனை நீக்கி யிருந்த
பொருட்பிர காசமின்று
தெருள வளித்தநற் றீபத்தின்
பின்வந்த தீபத்தையும்
மருளுடை யோரு மறிய
விதற்கிது காரணமென்
றருளியுங் காரண மாமென்று
நீயு மறைந்திடிலே (69)

அ விளக்கை மறைத்த விருளையு
நீக்கும் விளக்குமுண்டோ
விளக்கினைப் போலுயிர் தன்னையுஞ்
சாற்றல் விதியலகாண்
விளக்கினைப் போலச் சிவனை
யுரைப்பது வேவிதியாம்
விளக்கினுக் கின்னம் விளம்புதுங்
குற்ற மிகவறியே (70)

ஆ விளக்கினின் மாய்ந்த விரியிருள்
யாது விளம்புறுங்காற்
களக்கத்து மாயையின் காரிய
ராகமுங் காரெனக்காண்
டுளக்கத்து மாயையு மான்ம
குணமதுஞ் சூததுற்ற
விளக்கமி லஞ்ஞான பேதமு
மல்ல விரித்திடினே. (71)

நன்று பிறந்த கடத்துக்குப்
பின்வந்த நற்குயவன்
துன்று கடத்துக்குக் காரண
மாவது சொல்லுதியேல்
இன்று பிறந்த கடத்துக்குப்
பின்னு மிறையருளாற்
சென்றங் கடைந்த கரியையுங்
காரணஞ் செப்புகவே. (72)

அந்த மறியையுங் காரண
மாமென் றறைகுதியேல்
தந்திடுங் காரணந் தானன
வத்தையைச் சாருமன்றே
வந்தகு லாலனைப் போல
மறிகட காரியத்தைத்
தந்திடும் யோக்கியம் (காருந்)
தருங்குற்றந் தானுமின்றே. (73)

(அ) நன்று வனைந்த கடத்துக்குப்
பின்புற்ற நற்குயவன்
துன்று கடத்துக்குக் காரண
மென்றிது சொல்லுவையேல்
இன்று பிறந்த கடத்துக்குப்
பின்னு மிறையருளாற்
சென்றங் கடைந்த கரியையுங்
காரணஞ் செப்புகவே (74)

(ஆ) வந்தநல் யானை கடகா
ரணமா வழங்குவையேல்
முந்திய காரணந் தானன
வத்தை மொழியவருங்
கந்தடு மாவுங் குலாலனைப்
போற்கட காரியத்தைத்
தந்திடும் யோக்கிய காரண
மின்றெனச் சாதிப்பனே (75)

காரண யோக்கிய முள்ள
குலாலனைப் போலவிவண்
*ஆரிரு ணீக்குத லெல்லாப்
பொருளு மறிந்திடவே
பாரினிற் செய்கின்ற தன்மையு
முண்டு பகர்விளக்கின்
நீருரை செய்தநற் றோடமின்
றென்று நிகழ்த்திடிலே (76)

பன்னும் விளக்கிற் பகர்ந்திடும்
யோக்கியம் போலவின்று
மன்னு விளக்கை மறுக்குந்
தகைமைக்கு மற்றரனை
யன்ன குளிகையு மாத்த
னென்று மறைந்ததுபோற்
றுன்னுயிர் தன்னையுஞ் சொற்றதுண்
டாயிற் றுணிந்தியம்பே. (77)

ஆகம முத்தியி லீசன்சமமுயி
ராமென் கையாற்
றேகமின் முத்தர்க்கு மீசன்
குணங்களைச் செப்பியதாம்
*ஏக வரனைக் குளிகையு
நாயிறு மென்றிசைத்த
பாகநன் முத்தர்க்கு மத்தன்மை
*செப்பிய பண்பெனிலே (78)

சந்திர னுக்கிணை யாமுக
மென்னிலச் சந்திரன்றன்
*சுந்தர வட்டமும் வெண்மை
முகத்திற் றுலங்கிடுமோ

---

*ஆரிருணீத்தங் குறித்த பொருள்விளக் கம்மறிய த ஆ ஏ
*ஏகனுக் கொப்பு குளிகையும்
*சாற்றிய பண்பெனிலே ( த பி.பே. )
சொந்தவொளியாம் வெளுப்பு முகத்திற்
றுலங்கிடுமோ த ஆ ஏ.

1வந்த முகத்தின் குணத்தி
லதற்கொத்த தையறைவார்
இந்த வுயிர்க்கிறை சொன்ன
குணத்தி லியம்புகவே (79)

(அ) ஆணவ மொன்றே யராகத்துப்
போந்திங் கனந்தவித
ஆணவ மோக மதமாதி
செய்வித் தறிவடக்கி
ஆணவந் தன்னைக்கண் காட்டா
தடங்கி யனைத்துயிர்க்கும்
ஆணவ மொன்றே யநாதி
யிருளென வாயிடுமே

(ஆ) அவ்விருள் சீக்க வநாதி
யமல னருள்கருணை
செவ்விது தேர்ந்திடச் சித்தாந்த
முத்தித் திறனறிவர்
அவ்விய நெஞ்ச ரறையும்
பலநெறி யாரகிலா
வெவ்விய தீவணன் பஞ்ச
கிருத்தியம் வேண்டுவனே

(இ) ஐம்மல நீக்குவன் ஐந்தொழில்
வேண்டுவன் ஆண்டகைதான்
ஐம்மல நீக்க வருள்புரி
யானெனின் ஆவதிலை
யைம்மல நீக்கத் தருந்தொழில்
செய்யு மமலனடம்
அம்மல நீக்குமா னந்த
நடமென்பர் ஆன்றவரே

---

1 தந்த முகத்தின் குணத்தில் த. ஆ. ஏ.

(ஈ) படைப்பதுங் காப்பதும் பாரித்
துவனி பரிசரித்துத்
துடைப்பதும் வேண்டுவன் றாயவன்
றாய்மைச் சுகந்தருவா
னடைப்பது மத்தே மறைப்பது
மானபின் னவ்வருளால்
உடைப்பொருள் செய்யு மொருதொழி
லாவ துணர்ந்துகொள்ளே

(உ) விளக்கும் பரன்றொழில் ஐந்தொழில்
என்றே விளம்புமறை
விளக்கு மவனென வாகமங்
கூறும் விளக்குறவே
விளக்கு மொளியும் விரும்பு
மரனென மேற்கருதி
விளக்கு முறையினிற் செய்வர்விண்
ணப்பம் வினையறவே

(இவ்வைந்து செய்யுளும் மிகை)

2அன்றி யரன்செய் தொழில்க
ளனைத்தையு மாய்ந்துயிர்தான்
என்று மியற்றுவ தின்றென்
றியம்பி யிருண்மலத்தைப்
பொன்ற வபிபவஞ் செய்யுமென்
றெண்ணிப் புகன்றதென்னோ
நன்றுன் மொழியு மறந்தாய்
மயங்கினை நன்றிதன்றே (80)

பன்னிய வாகமந் தான்பக
ராத பயனதனாற்
றுன்னு மலத்தைத் துணிக்கின்ற
யோக்கி யமுழுயிர்க்கே

2 அன்றியரன் செய்வன் ஐந்தொழில் தன்னை த.ஆ.ஏ.

மன்னிய தின்றுன் மொழிமயக்
காகும தாமதனால்
அன்னியஞ் சொல்லும் வகையில
தாலிங் கறைகுவமே (81)

உன்னிய வாகம மண்ணலைப்
போல வுரைத்தலினாற்
றன்னியல் பான்மலந் தீர்க்கின்ற
யோக்கியந் தானுயிர்க்கு
மன்னிய தின்றுன் மதிமயக்
காமதை மாற்றுகநீ
யன்னியஞ் சொல்லும் வகையுமின்
றாலிங் கறைகுவமே (82)

மன்னிய பாசந் தவிர்த்த
லபிபவ மாச்சொல்வர்காண்
முன்னவன் சத்தி மலபரி
பாக முதிர்ந்தவர்க்கே
பின்னம தாக வபிபவஞ்
செய்கின்ற பெற்றிமையிற்
சின்மயன் சத்தி சகாயநன்
முத்தியிற் செப்பினமே (83)

ஆதித்தன் தன்கிர ணத்தா
லிருளை யடர்த்திலனேற்
சோதிநன் னேத்திரந் தானும்
பொருளைத் துணிந்தறியா
நீதியி லிவ்வ(ண்)ணம் யாமிங்
கிசைத்தன நித்தியனாம்
3வாதி துணையு மறையுமின்
முத்தியி லாகுமென்னே (84)

---

3 வேதியன் றன்றுணை நித்தமும் முத்தியில்
வேண்டுமென்னே த. ஏ.

(அ) சொன்ன வசனங்க ளாலிங்
கிறைவன் றுணையதனை
மன்னுநன் முத்தர்க்கு மாமென்று
நாமும் மதித்தனங்காண்
அன்னதொன் றன்றி யிறைதன
தானந்த மாகுமென்றிங்
குன்னி யுரைத்தது நன்றல
நீரு முணர்ந்திடுமே.

1பாச நிவர்த்தி யெனுஞ்சுக
மன்றிப் பரனருளால்
2ஈசன தானந்த மான்மாவுக்
கின்றிங் கெனவியம்பிற்
3பேசிய துக்க நிவிர்த்திச்
சுகமும் பெறுவதுவே
காசிலி யோரும் புருடார்த்த
மாகக் கருதுவரே (85)

அன்றியும் பாச மகலச்
சிவத்துவ மாகுதலே
நன்றுசெய் முத்தி யெனநூல்
மொழிந்தது (நாடிலையோ) நன்றலவாம்
என்றுஞ் சிவத்துவந் தன்னைநல்
லோர்கள் இனிதுரைப்பர்
சென்றடை யாத சிவானந்த
மென்று தெளிந்துகொள்ளே (86)

நாத முதற்சொற் பிரபஞ்சந்
தன்னை நயந்தறிதல்
ஓதுஞ் சிவத்துவ மாமுல
காதி யுணர்வதனாற்

---

1பாச நிவிர்த்தி யதுவே சுகமின்றிப் பாசமற் றோர்க்கு
த ஆ. பி.

2ஈசன தானந்த முற்றார் சுகமென்ப
(தின்றென்பையேல்) ,,

3பேசிய துக்க நிவிர்த்தியோ டின்பம் ,,

4கோதில் சுகமுண்டு குற்றமுங்
கூறிய தன்றெனிலே
யேத முறுபிர பஞ்சத்
தறிவின் றிறுமின்பமே (87)

உன்னும் வியாதியின் மாதுக்க
மாரு முயிர்களையும்
மன்னவ னாலும் வருத்த
முறுகின்ற மக்களையும்
பன்னும் பிராகிரு தன்கண்ட
போதுப் பதைத்துழல்வன்
அன்னவர் தம்மை யருளுடை
யோரு மறிந்திடிலே (88)

(அ) மன்னவ னாலும் வியாதியி
னாலும் மறம்புரியத்
துன்னு மனிதர் மிருகாதி
யாலுந் தொகுநிரயத்
தின்னலி னாலு மிளைக்கு
முயிர்கண் டிரங்குமுத்தர்க்
குன்னிய துன்பம்விட் டின்பமெக்
காலு முறுவதின்றே

[ஷை த. ஆ. பி.]

என்னநாம் பாவங்கள் செய்தோ
மிவர்களை யாம்விழியான்
மன்னிடக் கண்டிட வென்றே
துயரின் மயங்குவர்கள
துன்னுவெம் பாதகஞ் செய்தோ
ரதனைத் துலைத்திடவே
யன்னவ ரெய்து நரகத்தின்
றன்மையை யாய்ந்திடிலே (89)

---

4 தீதில் சுகமுண்டு முன்சொன்ன குற்றமுந்
தீருமெனில் த. ஆ. பி.

கேட்ட வருக்கு நடுக்கம்
விடாமற் களைத்(ந்)திடுமால்
வாட்ட மலங்களை வீட்டிக்
கிருபையின் மன்னுகின்ற
கூட்டம தாகுங் குணமுடை
முத்தர்முற் கூடினரால்
நாட்ட முறவென்றுந் தானே
யறிந்திட னன்றலவே (90)

அன்றியு மந்திரங் கள்பிர
வஞ்சத் தவரருந்துந்
துன்றிய துக்க மறிந்திங்
கிருப்பது துக்கமென்றே
யன்றுரை செய்திங் கரன்பதந்
தன்னை யடைத்தனவென்
றின்றுரை செய்திடு மாகமத்
துண்மையு மென்றுனக்கே (91)

ஒழியாத துன்பத் துழல்பிர
பஞ்சங்கண் டுள்ளுருகப்
பழியாந் தொழிலெமக் காகா
தெனப்பரன் பாலுரைத்திங்
கெழுகோடி மந்திரத் திற்படி
பாதியு மீசன்பொற்றாள்
வழுவாது பெற்றது சொல்லா
கமத்தை மறந்தனையே (92)

உன்னுஞ் சிவத்துவ முத்தர்க்கு
வஞ்ச முணர்தலெனப்
பன்னிய தென்னர னின்புரு
வத்தைப் பரித்தலினா
லன்னவன் றன்னைச் சிவசத்தந்
தன்னா லறையுமறை
யுன்னுயிர்க் கின்புரு வின்றாற்
பழுதிங் குனதுரையே (93)

(அ) உன்னுஞ் சிவத்துவ முத்தர்க்
குவகை யுணர்தலென்று
சொன்னது வென்னர னைப்போலு
மின்பச் சொரூபமுண்டோ
சின்மயற் கின்புரு வத்தாற்
சிவனென்று செப்புமறை
மன்னுயிர்க் கின்புரு வின்றப்
பெயரான் வழங்கலின்றே

அன்றியுங் கன்ம முளர்பிர
வஞ்சத் தனுபவத்திற்
றுன்னுவர் நாளுஞ் சுகாதியென்
றேமறை சொல்லுதலால்
இன்றுநின் முத்தரைப் பெத்தரென்
றேசொ லிருவினையின்
நன்றல விந்த மொழிநீ
நவின்றது நன்றறியே. (94)

(அ) அன்றிநற் கன்மமுற் றார்பிர
பஞ்சத் தனுபவத்திற்
றுன்றுவர் நாளுஞ் சுகத்திலென்
றாகமஞ் சொல்லுதலால்
இன்றுநின் முத்தரைப் பெத்தரென்
றேசொல் லிருவினைதீர்ந்
தொன்றுதன் முத்தியென் றாகமஞ்
சொற்றது முற்றிலையே.

அந்தப் பிரவஞ்சத் தின்னறி
வாலிங் கரன்றனையு
முந்து மிருவினைப் பெத்தனு
மாவ னெனமொழியிற்
பந்தமி லாப்பரன் சத்தாய்ப்
பிரவஞ்சம் பார்ப்பதல்லால்
இந்தப் பிரவஞ்சந் தன்னாற்
சுகமின் றிறைவனுக்கே. (95)

(அ) வருபிர பஞ்ச மறிதலி
னானின் மலன்றனையும்
இருவினை யுற்ற உயிரொப்ப
னென்றிங் கிசைத்தனையேற்
கருதரு காரண சத்தாய்ப்
பிரபஞ்சங் காண்டலினாற்
றருபிர பஞ்ச மதனாற்
சுகமின்று தானுவுக்கே (த ஆ.ஏ)

மன்னும் பிரவஞ்ச போக
முயிருக்கு மற்றரற்கின்
றென்ன மொழிந்திடு(ஞ்) ஞானா
வமிர்த மிசைந்திடவே
சொன்னநற் காரியங் காசினி
யென்பதுஞ் சொற்றிலரோ
பன்னிய தோட மதனாற்
பகர்ந்தது பண்பினையே (96)

ஊனார் பிரபஞ்ச போக
மரற்கின் றுயிர்க்குண்டென
ஆனாத காரியங் காசினி
யென்னு மகவறன்னை
ஞானா வமிர்தத்துச் சொல்லி
யிருப்பது நாடிலையோ
மானார் கரனுக்குத் தோடமுண்
டென்பது வார்த்தையின்றே (97)

முத்தருந் தானுணர் வார்பிர
வஞ்சப் பொருண்முழுதும்
அத்தனைப் போல வதனாற்
சுகமின் பரற்கெனிலே
யித்தன்மை செப்பிடி லிட்டப்
பிராத்தியு மின்றிலையாம்
முத்தருக் குஞ்சுக மின்றே
பழுது மொழிந்ததுவே (98)

(அ) உன்னும் பிரவஞ்ச மாதி
சிவன்றனைப் போலுணர்தல்
பன்னுஞ் சிவத்துவ மிட்டப்
பிராத்தியு மானபண்பும்
யன்ன வகையன்றி வேறு
சுகமிங் கியம்புவதென்
சொன்னமுற் குற்றங்கள் யாவு
மிலையெனச் சொற்றிடிலே

(ஆ) சின்மயன் போன்முத்தர் பார்ப்ப
ருலகின்பஞ் சேர்வதில்லைப்
பன்னிய விட்டப் பிராத்தி
பிரபஞ்சம் பார்ப்பதுவே
யின்ன வகையின்றி வேறு
சுகமிங் கியம்புவதென்
சொன்ன வகைகளில் யாவு
மிலையென்று சொல்லிடிலே (தருமை-பி)

முத்தியி லின்பமுண் டென்றே
மொழிந்தனர் மூதறிவோர்
1சித்தி யுடையநல் யோகிக
ளின்பஞ் செறிந்தனரே
2முத்தியிற் றுக்கமி லின்பமின்
றென்ன மொழிவதென்னோ
3வித்தன்மை கேவல மெய்தினர்
தங்க ளியல்பிதுவே (99)

---

1 சித்தியடைந்த வியோகரு மின்பஞ்
செறிந்தனரால் த. ஆ. ஏ.
2 நித்திய மாகிய வின்பமின் றென்ன நிகழ்த்துவதென் ,,
3 இத்தன்மை கேவல மெய்தினர் தங்களியல்பதுவே ,,

ஆகமந் தானு மறுதின
மானந்த மாஞ்சுகத்தைப்
பாக முறப்பின் மலத்தை
விடுத்த பரமுத்தர்தாம் (பரமுத்திதான்)
தாகமுற் றென்றும் பொருந்துவ
ரென்றிவண்சாற்றியதே(சாற்றினிங்கே)
1யூகம தாக வதனைநன்
றாக வுணர்ந்திலையே (100)

ஆனந்த மென்பது ஞானக்
கிரியை யகல்வதென்றா
யூனமுல் ஞானத் துணர்வே
னனைத்தையு மென்றுரைத்தா
யீனமி லாத கிரியை
தொழிலற் றிருக்குமென்றே
மான மிலர்போ லுரைத்தாய்
பொருண்மிக மாறுபட்டே. (101)

(அ)ஆனந்த மென்பது .........
......... தாவதென்று
ஞானங்கொண் டெப்பொரு ளும்முணர்வே
னென்று நன்றிசைத்தாய்
ஊனந் தவிருங் கிரியை
தொழிலற் றுறையுமென்றே
......................லுரைத்தாய்
பொருள் மாறுபட்டே.

அன்றியு மானந்த மென்பதை
யாகமத் தாய்ந்தநல்லோர்
2நன்றுடைத் தாகுஞ் சுகவாசி
யென்று நவின்றனர்காண்

1 யூகமதாக வதனையும் பார்த்திங் குணர்ந்திலையே
(பி. பே.)
2 நன்றுள தாமென்ப வாசக
மென்ப நவின்றனர்காண். (தருமை)

என்றும் வியாகர ணங்க
ளிசைத்த திவணமென்றால்
1உன்றன் மொழியில் விரோதம்
விடமற் றுணர்ந்திலமே. (102)

அன்றியுஞ் சித்தி முதலாய
சாத்திர மாய்ந்துமிக
வின்றுரை செய்யு மிவனுயிர்
தானுஞ் சிவாநுபவ
மொன்றினுக் கும்முரித் தென்ற
வுரையு முணர்ந்திலையோ!
வின்றுன் மொழியில் விரோதங்க
ளேவந் திசைத்தனவே. (103)

சிவத்துவ மென்ற சிவானந்தங்க
தன்னைச் சிறப்புடனே
தவத்துயர் முத்தர்கள் தானணை (தாமணை)
வார்களித் தன்மைசெப்பில்
பவத்தை யகற்றும் பரமுத்தி
யன்றிப் பழுதுமுண்டோ
சிவத்தை யணைபவ ரிவ்வண்ணஞ்
செப்புவர் திண்ணமிதே. (104)

அ சென்றிடுஞ் சித்திநன் னூலுயிர்
தானுஞ் சிவானுபவ
மொன்றினுக் கும்முரித் தென்ற
வுரையு முணர்ந்திலைகாண்
என்றுஞ் சிவத்துவந் தன்னைச்
சிவானந்த மென்றிசைத்தால்
நன்றிசெய் முத்தி பெறலா
மலங்க ணசித்திடவே.

---

1 உன்றனைப் போலத் தவறுரைப்
பார்க ளொருவரின்றே.

(ஆ) கேவல ஞானங் கிளக்குமி
யோகிகள் கேடில்பர
மாவலன் சந்நிதி முன்ன
ரனைத்தும் வயங்குநிலை
தாவல வென்றே யுதித்தவை
யெண்ணிச் சதிருரைத்தார்
ஏவல னெம்மிறை ஞானத்
தியல்தான் இயம்பரிதே

(இ) கரணம் பொறியுடல் யாவுஞ்
செலுத்தக் கலக்கமிலாத்
தருண வுயிரெனத் தாணுவு
மிவ்வுயிர் தம்மையெலா
மருண வுதயத் தமைத்தவை
நோக்கி யருமறைகள்
இரண மொழிசொல விவ்வண
மெண்ணின ரேழைகளே

(ஈ) சிற்றறி வின்றிச் சிறுபோகந்
துய்த்திடல் சீரி தன்றா
முற்றறி வின்றி முனைவன்
கழற்சேர முற்றுவதோ
பெற்றேன் றுயர்த்தான் பிறவிப்
பெருந்துயர் பிற்பட்டிட
முற்றும் பரபோகந் துய்ப்பித்
திடுதலை முன்னுகவே

(உ) அருளுரு வாகிய வன்பன்
கருணைக் கருவுருவன்
மருளினை வாட்டிட வாண்மமு
வேந்தி மலமொழித்துக்
கருளினைத் தேய்த்துக் கழலடி
வைக்குங் கருவதுவாந்
தெருளினை யான்ற சுகானந்த
மென்பராற் சீரிதென்றே

(மேற்பாட்டின் கருத்து)

ஆருயிர்க் குள்ளநல் லானந்தந்
தன்னை யருமறைகள்
சீருடைத் தாகுஞ் சிவத்துவ
மென்றிவண் செப்பியிடும்
பேரு யிருந்தன தானந்தந்
தன்னையே பெற்றிருக்கும்
நீருரை செய்த சிவானந்த
மின்றென நீசொலினே. (105)

(அ) ஆருயிர்க்குள்ள சுகானந்தந் தன்னைநல்
லாகமங்கள்
சீருடைத் தாகுஞ் சிவத்துவ
மென்றிவண் செப்பியதே
பேருயி ருந்தன தாயுறு
மானந்தம் பெற்றிருக்க
நீருரை செய்த சிவானந்த
மன்றென நீசொலினே.
(தருமை பிரதி)

இன்புரு வாகி யிருக்கின்ற
கண்டு தனையிசைந்தோர்க்
கின்பங் கொடுத்துப்பின் றானருந்
தாத வியல்பது போற்
றுன்பறு முத்தரு மன்னியர்க்
கின்ப முதவுவர்கள்
துன்பறு மின்பச் சுகப்பே
றிலரெனச் சொல்லுகவே. (106)

(அ) இன்புரு வான சருக்கரை
நாடி யினிதிசைந்தோர்க்
கின்பது நல்கிப்பின் றானருந்
தாத வியல்பதுபோற்
றுன்பறு முத்தரு மன்னியர்க்
கின்பந் தொகுப்பதல்லாற்
.........................................................
.... ............... ................... (தருமை பிரதி)

அன்னியர் வந்து சருக்கரை
தன்னை யருந்து தல்போ
லுன்னுயி ரானந்தந் தன்னை
யருந்து வருமுளரோ (மொருவருக்குண்டோ)
1முன்ன வனுமுயி ரும்மின்ப
ரூப மெனமொழிந்தாய்
அன்னியர் தானு மிலையிங்
கருந்து வதற்கறியே. (107)

2சருக்கரை தான்சட மாகையி
னாலது தானறியா
முருக்கிதழ் வாயரு மாடவர்
தாமும் முயங்கவந்த
பெருக்கமி லின்ப மவர்தம
தாகின்ற பெற்றியைபோற்
சுருக்கமின் முத்தர்தம் மானந்தந்
துய்ப்ப ரெனச்சொலினே (108)

ஆடவ ரானந்தந் தன்னை
விளக்கிய வாயிழைக்கே
3யாடவ ரேசுக மாக்குவ
ராங்கது போலவரன்
கூடிய முத்தரும் மானந்த
நல்கக் குறித்தவருந்
தேடர னானந்தந் தன்னை
விளக்குவர் நீதியிலே (109)

---

1 மன்ன வனுமுயிர் தானுஞ் சுகவடி வாயுரைத்தாய்
நின்னது வாமின்பந் துய்ப்பா ரெவர்கள்
நிகழ்த்துவையே. (பி. பே.)
2 சருக்கரை தான்சடந் தானருந் துந்தன்மை தானு
மின்றாம் இருக்கிசை முத்தர்தம் மானந்தந் துய்ப்ப
ரெனச்சொலினே பி. பே.
3 கூடிய வாடவ ரேசுக மாக்குங் குறிப்பதுபோல் பி பே
நீடிறை முத்தர் தம் மானந்த தல்க நிகழ்முத்தருந் ,,
தேடர னானந்த நல்குவ ரென்றினிச் செப்புகவே ,,

அன்றியுங் கண்டு தனையடைந்
தாருக் கருளுஞ்சுகந்
துன்றிய வான குணமோ
விடைக்குண மாவதுவோ
சென்ற விடைய குணமெனிற்
சேயிழை யாடவர்கள்
துன்றுஞ் சுகமும் அடைய
குணமெனச் சொல்லுகவே. (110)

(அ) சருக்கரை தன்னை யடைத்தார்
தமக்குத் தருஞ்சுகந்தான்
செருக்கும் விடய குணமோ
வுயிர்தனிற் சேர்குணமோ
வருக்கும் விடய குணமெனில்
மாதரு மாடவரும்
பெருக்குஞ் சுகமும் விடய
குணமெனப் பேசுகவே.

சருக்கரை யற்ற விடத்திற்
சுகமறுந் தன்மையைப்போல்
விருப்புறா தேயில்லி டத்தா
டவருடன் சேயிழையு
முருத்தெழு மின்பமு முளரல
ருற்றவர் தன்மை(ய)தாற்
றருக்குள சிற்றின்பந் தான்விடை
யம்மெனச் சாற்றுவரே. (111)

(அ) சருக்கரை யற்ற பொழுதிற்
சுகமறுந் தன்மையைப்போல்
உருத்தனை யற்ற விடத்தா
டவருடன் ஒண்டொடியுங்
குருத்தெழு மின்பம் பொருந்தா
திருந்திடுங் கொள்கையினான்
அருக்குபுன் போகம் விடய
குணமென் றறைகுவரே.

அன்றிங் குயிர்க்குண மாகுஞ்
சுகத்தைச் சருக்கரைதான்
நன்று விளக்கிய தென்று
நவின்றசிற் றின்பத்தையுந்
துன்று முயிர்க்குணங் காயம்
விளக்க மெனச் சொலினீ
நன்றல விந்த வுரையும்
விசாரிக்கி னாசமிதே (112)

(அ) அணுப்பால் விளங்கின்பம் யாவு
மதன்குண மாமதனால்
மணிற் (மண்ணிற்) சா ருடலுஞ் சருக்கரை
தானும் வருவிக்குமென்
றெணிற்சார் துயர்விட யக்குண
மோவுயி ரின்குணமோ
கணிப்பாம் விடய குணமென
நீயுங் கருதிடிலே

நிம்ப முதற்பொரு ளானிகழ்
துக்கமு நீடுயிரின்
நம்பில் குணமது வோவிடை
யத்தின் குணமதுவோ
இம்பர் விடைய குணமெனில்
இன்ப முயிர்க்குணங்கொல்
நம்பு விடையத் திரண்டுமுண்
டாகையி னன்றிதன்றே (113)

நிம்ப முதற்பொரு டன்னா
னிகழ்கின்ற துக்கமுந்தான்
வம்ப லுயிர்க்குண மாமென்று
நாளு மகிழ்ந்துரைக்கி
னம்பர முத்தி யுயிர்க்குண
வேத்தியென் றேநவின்றா
யுன்பர முத்தர்க்கு முண்டு
சுகதுக்க மோர்ந்துகொள்ளே (114)

(அ) மயக்கரம் விடய மதனாற்
சுகதுக்கம் வாய்த்திருக்க
வுயிர்ப்பாற் சுகத்தை யுயிர்க்குண
மென்ற வுரை தவறாந்
துயர்ப்பாலு மான்ம குணமே
லணுக்குணந் தோன்றன்முத்தி
நயப்பான முத்தர்க்கு முண்டாஞ்
சுகதுக்க நன்றதன்றே

முத்தருக் குஞ்சுக துக்கமுண்
டென்று மொழிந்திடவே
பெத்தனு முத்தனும் பேதமின்
றாம்பிறி தும்மரன்றன்
நித்திய மாகும் வசன
விரோத நிலைமையுமா
மித்தன்மை செப்பினர் 1யாவரு
மில்லை யிதுபழுதே (115)

(ஆ) முத்தரு மின்பதுன் பஞ்சேர்வ
ரென்று மொழிந்திடவே
பெத்தரு முத்தரும் பேதமின்
றாமே பிறைமவுலி
மத்த னிசைத்த வசனத்
திதுவும் வருவதுண்டோ?
..........................................
..........................................

அந்தச் சுகதுக்க மாருயிர்க்
குள்ள குணமுமன்று
முந்தனுக் குள்ள குணமுமன்
றென்று மொழிந்திடுநீ

---

1 இப்பாடலானது முன்னிரு செய்யுட்பொரு ணவில்கின்றது

இந்த வகையினிற் சேடப்
பொருளை யிசைத்திடிலே
வந்த விடைய மதன்குண
மென்று மகிழ்ந்துரையே (116)

விடையத்தை மேவி யிருந்தவர்
.... ..........தாமுகந்த
விடையந் தடையின்றி வந்தமை
யொப்பத் தமதரனை
யிடையின்றிப் புல்க விறையின்ப
மேயுயிர்க் கென்று முண்டாந்
தடைப்படு மாருயிர்க் கின்புறா
வென்பதைத் தன்னுகவே (117)

முத்தியி லீசன் சமமென்று
பின்னர் மொழிதலினால்
அத்தனைப் போல வுயிர்க்கு
வடிவமு மானந்தமே
நித்திய மாகச் சிவாகமந்
தானு நிகழ்த்தியதாஞ்
சித்தனு மானந்த மாயிருப்
பன்னெனச் செப்பிடிலே (118)

(அ) தகுதுக்க மின்ப முயிர்க்குண
மோவிறை தன்குணமோ
மிகையற் றிரண்டும் விடய
குணத்தெண் விடயகுணம்
தகவுற் றவர்க்குப் பொருந்துதல்
போலரன் றாள்பொருந்த
மிகையற் றரனின்ப மேவு
முயிர்க்கின்பம் வேறிலையே

---

விடையவின் பந்தடை தகைமையை யொப்பத் தமதரனே

(ஆ) நித்தனுக் காருயிர் முத்தியி
லொப்பு நிகழ்த்தலினால்
அத்தனைப் போல வுயிர்க்கு
வடிவமும் ஆனந்தமென்(று)
உத்தம மான சிவாகமந்
தானு முரைத்ததுவாம்
முத்தன் சிவனாந்த மெய்தா
னெனவு மொழிந்திடிலே

முத்தன் சிவானந்தந் தன்னை
யருந்தி முதல்வனையு
நித்தம் பிரிவில னென்றா
கமங்கள் நிகழ்த்தலினால்
2சுத்தன் சிவானந்தந் தன்னை
யருந்தில னென்றசொற்றான்
முத்தியின் றன்மை யறியா
தவர்கண் மொழிந்தசொல்லே (119)

அன்றி யரன்சம மென்றா
லுயிருக்கு மானந்தமே
யின்றிங் கியம்புவ தென்கொ
லுயிர்க்குண மின்மையிதால்
என்று மலம்விட் டிருப்பனென்
றேயிங் கிசைத்ததுவாம்
நன்றிங் குவமையை முற்று
மிசைப்பது ஞானமன்றே (120)

(அ) சிவனுக் குயிர்சம மென்றால்
வடிவுஞ் சிவன்றனைப்போல்
இவனுக் குரைப்ப திசையா
மலமறைப் பின்மைமுக்கண்

---

2 அத்தன தானந்த மெய்தா துயிரென் றறைந்த
சொற்றான்
உத்தம முத்தியுணரா தவர்களுரைக்குஞ் சொல்லே
பி. பே.

அவனுக்கொப் பாமன்றி முற்று
முவமை யறையினுயிர்
பவனுக்கு வேறன் றொருபொரு
ளென்று பகர்ந்திடுமே

அன்றியு மாருயிர் ஞானக்
கிரியையை யாவரித்தே
துன்று மலத்தைப் பரிபாகம்
வந்தபின் றாயவரன்
பொன்று தலைச்செய்யு ஞானக்
கிரியை பொருந்துமென்றே
யின்றறை கின்ற மறையின்பந்
தன்னை யியம்பிலதே (121)

அறிவிக்க வறித லானு
மழிவின்றி நித்தலானுங்
குறிபெற்ற சித்துஞ் சத்துங்
கூறிய வுயிருக்கென்றே
நெறியுற்ற சித்தி யாரை
நினைந்துநீ யுயிருக்கென்றும்
பிறிவிலா வினிய ரூப
மின்றென்றே பேசுமின்னே (122)

ஈசனை யின்ப சுரும்பென்றே
யெங்கு மிசைத்ததுபோ
மாசுறா (ள) வாருயிர் தன்னையு
மவ்வண்ண மற்றியம்பா
தேசுடை முத்தர்க்கு மின்பமுண்
டென்றிவண் செப்பியது
நாசமி லாவர னின்பமன்
றென்றே நலறிமன்னே (123)

வேறு

உயிர்காணுஞ் சிவாநுபவம் ஒன்றினுக்கு முரித்தே
யுயர்சீவ னுக்குமுத்தர் சிவமேகண் டிருப்பர்
பயில்பரமே பார்த்திருப் பார்தங்கள் பாரார்
பாவுசிவன் றேற்றமொன்று மேகாண்பரென்றுஞ்
செயமாகுஞ் சிவாநுபவஞ் சுவானுபூ திகமாஞ்
சிவஞானப் பெருமை யுடையோர் சிவனைப்பெறுவர்
மயலெலா நீங்கவரன் மலரடிக்கீ ழிருப்பன்
மாறாத சிவாநுபவ மருவியென்று (மா)மே (124)

வேறு

சொன்ன நற்சித்தியி னுண்மையை
நீயுந் துணித்தறிய
முன்னவ னானந்தந் தன்னமு
தார முயன்றருந்திப்
பின்னமி லாம லிருப்பனென்
றாகமம் பேசுதலால்
அன்னியம் விட்டுச் சிவானந்த
முத்தியென் றேயறையே (125)

(அ) வனையுங் கழலரன் பாதத்தைச்
சீவன் வயங்குமெனிற்
புனையுந் தவஞ்சேர் உயிர்கே
சுதந்தரம் போற்றலுறும்
இனையுந் தருமத் துயிர்கெட்
டிறையடி யேயுமெனில்
நனையு மலர்க்கொன்றை நம்பனைக்
கூடு நயமிலையே

பாருறு நீருமந் நீருங்
கலத்தலைப் பார்ப்பதுபோல்
ஒரு மரன்கழற் கூடு
முயிரென்ப ரோர்விலரால்

ஆருந் தொழுபதத் தீசனுஞ்
சேர்ந்திடு மாருயிருந்
தேரும் பொருளொன்றிற் சார்ந்திடுஞ்
செய்திறல் சித்திக்குமே (126)

இருளறு சீவன்முத் தர்சில
மேகண் டிருப்பரென்றும்
அரனரு ளின்பந் தனதனு
பூதிக மாமதென்றும்
பிரிவின் மெய்ஞ்ஞான முடையோர்
சிவனைப் பெறுவரென்றும்
கரிசறு முத்தர் சிவன்றோற்ற
மொன்றுங் கருதுவரே (127)

ஆறாப் பரம்பார்த் திருப்பர்
பதார்த்தம்பா ரார்களென்றும்
கீறா விருண்மல நீங்க
வரனடிக் கீழிருப்பர்
மாறாச் சிவாநு பவமாவி
யென்றும் வயிந்தவமோ
தேறாக் கலக்கமென் றுஞ்சித்தி
நூலிடைத் தேர்ந்தனமே (128)

(அ) அரனாவி ஞானங் கிரியையை
மூடிய வாணவத்தின்
பரிபாகங் கண்டதை நீக்கிட
ஞானம் பகர்கிரியை
விரிவாகு மென்னப் புகலாக
மத்துயிர் மென்குணமாய்ப்
பிரிவரு மானந்தங் கூட
விளங்குதல் பேசலின்றே

(ஆ) அண்ணலை யின்ப சொரூபியென்
றாரண வாகமங்கள்
நண்ணி யுரைப்பது போலுயிர்
தன்னை நவின்றதின்றால்
புண்ணிய முத்தருக் கின்பமுண்
டென்று புகன்றதுமுக்
கண்ணன தின்பமென் றாய்ந்தாக
மத்துள்ளுங் கண்டுகொள்ளே

பன்னு முயிரின் குணமாக
வின்பம் பகர்தலின்றி
யுன்னுஞ் சிவன்றன தானந்த
முத்த ருவந்தருந்திப்
பின்னமில் லாம லிருப்பரென்
றாகமம் பேசுதலால்
அன்னியம் விட்டுச் சிவானந்த
மேமுத்தி யாமெனுமே (129)

சித்தாந்த நிச்சயம் முற்றிற்று



உ

குருபாதம்

# சித்தாந்த நிச்சய வுரை

---

வெண்பா

''நாடிய வென்போ நரம்புசீழ்க் கோழையோ
தேடி யெனையறியேன் றேர்ந்தவகை—நாடிலரன்
றன்னாலே தன்னையுங் கண்டு தமைக்காணா(ர்)
என்னா மெனவறிவா ரின்று''

காணாரென்றும்

வெண்பா

''சதசத்தா மெய்கண்டான் சத்தருளிற் காணி
னிதமித்தல் பாசத்தி லின்றிக்—கதமிக்
கெரிகதிரின் முன்னிருள்போ லேலா வசத்தி
னருகணைவார் சத்தணைவா ராங்கு''

இதில்,

சத்தருளிற் காணி லென்றுங்
கதிர் முன்னிருள் போல்
ஏலா வசத்தின் அருகணையார்
சத்தினரு கணைவாரென்றும்

7

சிவஞான சித்தியாரில்,

அருளது சத்தி யாகு
மரன்றனக் கருளை யின்றித்
தெருள்சிவ மில்லை யந்தச்
சிவமின்றிச் சத்தி யில்லை
மருளினை யருளால் வாட்டி
மன்னுயிர்க் களிப்பன் கண்கட்
கிருளினை யொளியா லோட்டு
மிரவியைப் போல வீசன்

இதில்,

மருளினை யருளால் வாட்டியென்றும் இரவியைப் போல வென்றும்,

அறிபொருள் அசித்தாய் வேறா
மறிவுறாப் பொருள்சத் தென்னின்
அறிபவ னறியா னாகி
லதுவின்று பயனு மில்லை
யறிபவ னருளி னாலே
யன்னிய மாகக் காண்பன்
அறிபொரு ளறிவாய் வேறா
யறிவரு ளுருவாய் நிற்கும்

இதில்,

அறிபவன் அருளினாலே அந்நியமாகக் காண்பன்

என்றும்,

ஞானத்தால் வீடென்னும் பாட்டில்:-

ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராண
நல்லவா கமஞ்சொல்ல வல்லவா மென்னும்
ஊனத்தா ரென்கடவ ரஞ்ஞா னத்தா
லுறுவதுதான் பந்தமுயர் மெய்ஞ்ஞானந்தான்

ஆனத்தா லதுபோவ தலர்கதிர்முன் னிருள்போ
லஞ்ஞானம் விடப்பந்த மறுமுத்தி யாகும்
ஈனத்தார் ஞானங்க ளல்லா ஞானம்
இறைவனடி ஞானமே ஞான மென்பார்

உயர் மெய்ஞ்ஞானந்தான், ஆனத்தால் அது போவது அலர்கதிர் முன்னிருள்போல் அஞ்ஞானம் விடப்பந்த மறு முத்தியாகும். ஈனத்தார் ஞானங்கள் அல்லா ஞானம் இறைவனடி ஞானமே ஞானம் என்பர்

என்றும்,

எவ்விடத்து மிறையடியை யின்றியமைந் தொன்றை
யறிந்தியற்றி யிடாவுயிர்க ளீசன் றானும்
செவ்விதினில் உளம்புகுந்து செய்தியெலா முணர்ந்து
சேட்டிப்பித் தெங்குமாய்ச் செறிந்து நிற்பன்
இவ்வுயிர்க டோற்றும்போ தவனையின்றித் தோற்றா
விவற்றினுக்கம் முதலெழுத்துக் கெல்லாமாய் நிற்கும்
அவ்வுயிர்போ னின்றிடுவ னாதலானம்
அரனடியை யகன்றுநிற்ப தெங்கே யாமே

இதில்,

எவ்விடத்து மிறையடியை இன்றி அமைந்து ஒன்றை அறிந்தியற்றிடா உயிர்கள் என்றும் அரனடியைக் கண்டு நிற்பது எங்கே

என்றும்

தெரிவரிய மெய்ஞ்ஞானஞ் சேர்ந்த வாறே
சிவம்பிரகா சிக்குமிங்கே சீவன்முத்த னாகு
முரியமல மௌடதத்தாற் றடுப்புண்ட விடமும்
ஒள்ளொளியி னொளிமுன்னர் இருளுந் தேற்றின்
வருபால்சேர் நீர்மருவு கலங்கலும்போ லாகி
மாயாதே தன்சத்தி மாய்ந்து காயந்

தீரியுமள வும்முளதாய்ப் பின்பு காயஞ்
சேராத வகைதானுந் தேயு மன்றே

இதில்,

மலம் விடத்தாற் றடுப்புண்ட விடமும் ஒள்ளெரியின் ஒளிமுன்னர் இருளும் தேற்றின் வருபால் சேர், நீர், மருவு, கலங்கலும்போல்

என்றும்,

ஆணவந்தா னனாதியந்த மடையா தாகு
மடையினந்த வான்மாவு மழியுமெனிற் செம்பிற்
காணலுறுங் களிம்பிரத குளிகைபரி சிக்கக்
கழியுஞ்செம் புருநிற்கக் கண்டோ மன்றே
தாளுவின்றன் கழலணையத் தவிருமலந் தவிர்ந்தாற்
றான்சுத்த னாயிருக்கை முத்தியரன் றாளைப்
பூணவேண் டுவதொன்று மில்லையெனி னருக்கன்
புகுதவிருள் போமடியிற் பொருந்தமலம் போமே

இவ் ஆணவந்தான் அந்த மடையாதென்னும் பாட்டின்

தாளுவின்றன் கழலணையத் தவிரு மலந்தவிர்ந் தாற்றான் சுத்தனாய் இருக்கை முத்தி யரன்றாளைப் பூணவேண்டுவ தொன்றுமில்லை யெனில் அருக்கன் புகுதவிருள்போம் அடியிற்பொருந்த மலம்போமே

என்றும்,

பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரனை பதிஞானத் தாலே
தேசமொடு முள்ளத்தே நாடிப் பாத
நீழற்கீ ணில்லாதே நக்கிப் போதின்

என்றும்

சிவனையவன் திருவடி ஞானத்தாற் சேரச் செப்புவது முதல் அடி காட்டி யான்மாவைக் காட்டலானும் என்றும்,

கண்டிடுங் கண்டனை யென்னும் பாட்டில்:

கண்ட சிவன்றனைக் காட்டி யுயிருங் காட்டிக் கண்ணாகித் கரணங்கள் காணா னிற்பன்

என்றும்,

அன்னிய மிலாமையானும் என்னும் பாட்டில்:

தன்னறி வதனாற் காணுந் தகைமையன் அல்லன் ஈசன்

என்றும்,

சிவப்பிரகாசத்தில்:—

எண்ணரிதாய் நித்தமாய் என்னும் பாட்டில்:

அருளால் உண்ணிலவு மொளிய
 தனால் இருளகற்றிப் பாதம்
உற்றிடு நற் பசுவருக்க
 மெனவு ரைப்பர் உணர்ந்தோர்

என்றும்,

சத்திது வென்ற சத்துத்
 தானறி யாத சத்தைச்
சத்தறிந் தகல வேண்டா
 வசத்திது சத்தி தென்றோர்
சத்திரு ளொளிய லாக்கண்
 டன்மைய தாம சத்தைச்
சத்துட னின்று நீக்குந்
 தன்மையாற் சதசத் தாமே.

இதில்,

சத்தைச் சத்துட னின்று நீக்குமென்றும்,

கண்ணொளி விளக்க ளித்துக்
காட்டிடு மென்னின் முன்னங்
கண்ணொளி யொன்று மின்றாம்
விளக்கொளி கலந்த வற்றைக்
கண்ணொளி யகல நின்றே
கண்டிடும் வேறு காணா
கண்ணொளி விளக்கின் சோதி
கலந்திடுங் கருத்தொன் றன்றே.

இதில்,

விளக்கு ஒளி கலந்தவற்றைக் கண் ஒளி யகல நின்றே கண்டிடும்

என்றும்,

இவ்வகை யவத்தை தன்னி
லெய்திடுங் கரண மெல்லா
மெய்வகை யிடத்தி லுற்று
மேவுமா கண்டு மிக்க
பொய்வகைப் பவம கற்றப்
புரிந்திடில் அருளால் ஆங்கே
யைவகை யவத்தை யுய்க்கும்
அறிவினால் அறிந்து கொள்ளே.

இதில்,

அருளால் ஆங்கே ஐவகை யவத்தை யுய்க்கு

மென்றும்,

தன்னறி வதனா லேதுத்
தனக்கறி வில்லை யேனும்
தன்னறி வாக வெல்லாந்
தனித்தனி பயன ருந்துந்
தன்னறி வறியுந் தன்மை
தன்னாலே தனைய யறிந்தாற்

றன்னையுந் தானே காணும்
தானது வாகி நின்றே.

இதில்,

தன்னறி வறியுந் தன்மை தன்னாலே யறிந்தா லெனச்,

சுத்தமாஞ் சத்தி ஞானஞ்
சுடராகுஞ் சிவமொ ழிந்தச்
சத்திதா னின்றா முன்னை
தகவிலா மலங்கள் வாட்டி
யத்தனை யருளு மெங்கு
மடைந்திடு மிருள கற்றி
வைத்திடு மிரவி காட்டும்
வளரொளி போன்ம கிழ்ந்தே.

இதில்,

தகவிலா மலங்கள் வாட்டி யத்தனை யருளு மிருளகற்றி வைத்திடு மிரவி காட்டு வளர் ஒளிபோல்

என்றும்,

அடைபவர் சிவமே யாகு
மதுவன்றித் தோன்று மென்ற
கடனதெ னென்னின் முன்னங்
கண்டிடார் தம்மைப் பின்னுந்
தொடர்வரு மருளி னாலுந்
தோன்றுமா காணா ராயின்
உடையவ னடிசேர் ஞான
முணர்தலின் றணைத லின்றே.

இதில்,

முன்னங் கண்டார் தம்மைப் பின்னுந் தொடர்வரும் அருளினாலே தோன்றுமா காணார் ஆயின்
என்றும்,

(வெண்பா)

சேணா ரிருள்வடிவுஞ் செங்கதிரோன் பானிற்பக்
காணா தொழியுங் கணக்கேபோல்—ஆணவத்தின்
ஆதி குறையாம லென்பா லணுகாமல்
நீதி நிறுத்துநிலை போற்றி

என்றும்,

(சதமணிக்கோவை)

ஆதித்தன் சந்நிதியி லந்தகா ரம்போல
வோதினதென் மெய்கண்டா யுற்று

என்றும்,

(திருவருட்பயன்)

ஊமன்கண் போல வொளியு மிகவிருளே
யாமன்கண் காணா தவை

என்றும்,

(தேவாரத் திருமுறை)

ஆட்டுவித்தா லாரொருவர் ஆடா தாரே
அடக்குவித்தா லாரொருவ ரடங்கா தாரே
ஓட்டுவித்தா லாரொருவ ரோடா தாரே
யுருகுவித்தா லாரொருவ ருருகா தாரே
பாட்டுவித்தா லாரொருவர் பாடா தாரே
பணிவித்தா லாரொருவர் பணியா தாரே
காட்டுவித்தா லாலொருவர் காணா தாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே

என்றும்,

(திருவாசகம்)

சிவனவனென் சிந்தையு ணின்ற வதனால்
அவனரு ளாலே யவன்றாள் வணங்கி

என்றும்,

நேச வருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே

என்றும்,

(கொச்சகக் கலிப்பா)

இரும்புதரு மனத்தேனை
யீர்த்தீர்த்தென் என்புருக்கிக்
கரும்புதரு சுவையெனக்குக்
காட்டியினையுன் கழலிணைகள்
ஒருங்குதிரை யுலவுசடை
யுடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை யாக்கியவா
றன்றேயுன் பேரருளே

இதில்,

என்புருகக் கரும்புதரு சுவையெனக்குக் காட்டினையின் கழலிணைகள்

என்றும்,

(கட்டளைக் கலித்துறை)

மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்ப
யானுன் மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதிகண்
டாய்வினை யேன்மனத்தே
ஊறுபட் டேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
நீறுபட் டேயொளி காட்டும்பொன்
மேனி நெடுந்தகையே

இதில்,

வினையேன் மனத்தே யூறுபட்டே

என்றும்,

நெடுந்தகை நீயென்னை யாட்கொள்ள
யானைம் புலன்கள்கொண்டு
விடுந்தகை யேனை விடுதிகண்
டாய்விர வார்வெருவ
அடுந்தகை வேல்வல்ல வுத்தர
கோசமங் கைக்கரசே
கடுந்தகை யேனுண்ணுந் தெண்ணீ
ரமுதப் பெருங்கடலே

என்றும்,

(சிவஞான போதம்)

வெண்பா

ஏகமாய் நின்றே யிணையடிக ளொன்றுணரப்
போகமாய்த் தான்விளைந்த பொற்பினான்-ஏகமா
யுள்ளத்தின் கண்ணானா னுள்குவா ருள்கிற்றை
யுள்ளத்தாற் காணானோ வுற்று

இதில்,

போகமாய்த் தான் விளைந்த பொற்பினான்

என்றும்,

(சிவஞான சித்தியார்)

சித்தாந்தத் தேசிவன்றன் றிருக்கடைக்கண் சேர்த்திச்
செனன மொன்றி லேசீவன் முத்த ராக
வைத்தாண்டு மலங்கழுவி ஞான வாரி
மடுத்தானந் தம்பொழிந்து வரும்பிறப்பை யறுத்து
முந்தாந்தப் பாதமலர்க் கீழ்வைப்ப னென்று
மொழிந்திடவு முலகரெல்லா மூர்க்க ராகிப்
பித்தாந்தப் பெரும்பிதற்றுப் பிதற்றிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவ ரிதுவென்ன பிராந்தி.

இதில்,

ஆனந்தம் பொழிந்து மலரடிக் கீழ் வைப்பன்

என்றும்,

''குறித்தடியி னின்றட்ட குணமெட்டுச் சித்தி''

என்னும் பாட்டில்

தன்னை யொருவர்க்கும்
நினைப்பரியான் ஒன்றுமிலா னேர்பட வந்துள்ளே
பொறுப்பரிய பேரன்பை யருளியதன் வழியே
புகுந்திடுவன் எங்குமிலாப்
போகத்தைப் புரிந்தே

என்றும்,

''காய மொழிந்தாற் சுத்தனாகி''

என்னும் பாட்டில் :—

மாயமெலா நீங்கி யரன் மலரடிக் கீழிருப்பன்
மாறாத சிவானுபவம் மருவிக் கொண்டே

என்றும்,

பரஞானத் தாற்பரத்தைத் தரிசித்தோர் பரமே
பார்த்திருப்பர் பதார்த்தங்கள் பாரார் பார்க்க
வருஞானம் பலஞான மஞ்ஞான விகற்பம்
வாச்சியவா சகஞானம் வயிந்தவத்தின் கலக்கந்
தருஞானம் போகஞா திருஞான ஞேயந்
தங்கியஞா னஞ்சங்கற் பனைஞான மாகுந்
திருஞான மிவையெல்லாங் கடந்தசிவ ஞான
மாதலாற் சீவன்முத்தர் சிவமேகண் டிருப்பர்

என்றும்,

'செம்பிரத குளிகையினாற் களிம்பற்றுப் பொன்னாய்'

என்னும் பாட்டில் :—

மலம்போக்கி,
அம்பொனடிக் கீழ்வைப்பன் என்றும்,
உம்பர்பிரான் உற்பத்தி யாதிகளுக்குரியன்
உயிர் தானும் சிவானுபவ மொன்றினுக்கு முரித்தே

என்றும்,

இரும்பைக்காந் தம்வலித்தாற் போலியைந்தங் குயிரை
யெரியிரும்பைச் செய்வதுபோ லிவனைத்தா னாக்கி
யரும்பித்தீயிந்தனத்தை யழிப்பதுபோன் மலத்தை
யறுத்தமலன் அப்பணைந்த உப்பேபோ லணைந்து
விரும்பிப்பொன் னிணக்குளிகையொலிப்பதுபோ லடங்கி
மேளித்துத் தானெல்லாம் வேதிப்பா னாகிக்
கரும்பைத்தே னைப்பாலைக் கனியமுதைக் கண்டைக்
கட்டியையொத் திருப்பனந்த முத்தியினிற் கலந்தே

என்றும்,

''மிக்கதொரு பக்குவத்தின் மிகுசத்தி நிபாதம்''

என்னும் பாட்டில் :—

சங்கரனோடு,
ஒக்கவுறைந் திவரவனை யவனிவரை விடாதே
உடந்தையாய்ச் சிவன் றோற்ற
மொன்றுமே காண்பார்

என்றும்,

''இந்நிலைதா னில்லையேல் எல்லா மீசன்''

என்னும் பாட்டில் :—

மருவுபசு கரணங்கள் சிவகரண மாகத்
துன்னிய சாக்கிர மதனிற்
றுரியா தீதந்
தோன்றமுயல் சிவாநுபவஞ் சுவாநுபூ திகமாம்

என்றும்

(இருபாவிருபஃது)

''கூக்கு மனத்துக் கொடியேன் பரக்கும்
பரப்பைக் குவித்து நிறுத்திப் பிடித்திட்(டு)
இருள்வெளி யாகு மருளினை யறுத்து
வந்து புகுதலுஞ் சென்று நீங்கலும்

இன்றி யொன்றாய் நின்றவந் நிலையில்
ஒன்றா காமல் இரண்டா காமல்
ஒன்று மிரண்டும் இன்றா காமல்
தன்னது பெருமை தாக்கா னாயினும்
என்னது பெருமை யெல்லா மெய்தித்
தன்னை யெனக்குத் தருவதை யன்றியும்
என்னையு மெனக்கே தந்து தன்னது
பேரா னந்தப் பெருங்கட லதனுள்
ஆரா வின்ப மளித்துத் தீரா
உள்ளும் புறம்பு மொழிவின்றி நின்ற
வள்ளன்மை காட்டி மலரடி யருளிய
மன்னன் எங்கோன் வார்புனற் பெண்ணை
வெண்ணை காவலன் மெய்கண்ட தேவ!
காரா கிருகக் கலியாழ் வேனைநின்
பேராவின்பத் திருத்திய பெரும

என்றும்,

(திருவருட்பயன்)

''இன்பதனை யெய்துவார்க் கீயு மவர்க்குருவ
மின்பகன மாதலினா லில்''

என்றும்,

ஓங்குணர்வி னுள்ளடங்கி யுள்ளத்து ளின்பொடுங்கத்
தூங்குவர்மற் றேதுண்டு சொல்

என்றும்,

போற்றி .................. பாவியரோடு
ஏகமாய்ப் போகாமல் எவ்விடத்துஞ்
சிதந்து (சிதைந்து) போகமாம்
பொற்றாளினுட் புணர்த் தியாதியுடன்
நிற்க வழியா நிலையிதுவே
யென்றருளி யோர்க வியாபகந்
தன்னுட் காட்டி மிக்கோங்கு
மானந்த மாக்கட லிலாரா

வமுது வளித்துத் தான்
வந்து செய்யுந் தகுதியினான்

என்றும்,

(வெண்பா)

''பஞ்சசத்தி தன்னிற் பரனருளைப் பண்டிதர்கள்
சிந்திப் பரிய செழுஞ்சுடரை — யெஞ்சா
வலகி லுயிர்க்குணர்வை யானந்த வாழ்வை
மலமென்ப தெவ்வாறு மன்''

இதில்,

அலகில் உயிர்க்கு உணர்வை யானந்த வாழ்வை

யென்றும்,

(திருவுந்தியார்)

இரவுபக லில்லா வின்ப வெளியூடே
விரவி விரவிநின் றுந்தீ பற
விரைய விரையநின் றுந்தீ பற

என்றும்,

பேரின்ப மான பிரமக் கிழத்தியோடு
ஓரின்பத் துளானென் றுந்தீ பற
உன்னையே யாண்டா னென்றுந்தீ பற

என்றும்,

(துகளறு போதம்)

மாற்றரிய வானந்த மாருயிர்க் கந்தன்னைச்
சேர்ப்ப னுயிர்க் கென்றிறைவர் செப்பினையே-மாற்றரிய
வானந்தம ஆருயிர் கண்ணா லருத்துவது
தானெங்குப் பெற்றவர் சாற்று

என்றும்,

பெற்றருந்தி யின்பம் பிறர்க்கு மருத்தினனோ
வுற்றபர மானந்த முள்(ள தோ — மற்றிதுதான்
ஒன்றுதேட கில்லா விறையுருவ மானந்தம்
அன்றிவே றொன்றில்லை யாம்

என்றும்,

சர்க்கரைதா னாசர்க்குந் தருமிரத மவ்விரதஞ்
சர்க்கரைதான் கொள்ளுமோ சாற்றுங்கால்—சர்க்
றின்புருவ மின்றி யெழிலுருவம் வேறுண்டோ(கரைக்கின்
வின்புருவ மேயிறைக்கு மென் (ண்)

என்றும்,

நாவா ரிரத மதுவருந்த லல்லாதிங்
காவா விரத மு) மன்றியுமோ—வோவாப்
பரமசுகம் நின்பாற் பலிப்பதே யன்றிப்
பரமசுகங் கொள்ளாப் பயன்

என்றும்,

உற்றபர மானந்தத் தொன்றா யதிலுறங்கி
முற்றுவதே முத்திமுடி வென்றுரைக்குங்—குற்றமிலா
வைதிக சைவம்வழி நூல்புரா ணம்மற்றுஞ்
செய்வன்நூ லெல்லாந் தெளி

என்றும்,

(தேவாரம்—திருஞானசம்பந்தமூர்த்தி)

தேனு மாயமு தாகிநின் றான்தெளி சிந்தையுள்
வானு மாய்மதி சூடவல் லான்மங் கலக்குடிக்
கோனை நாடொறு மேத்திக் குணங்கொடு கூறுவார்
ஊன மானவை போயறும் உய்யும்வ கையதே

இதில்,

தேனுமா யமுதாகி நின்றான்

என்றும்

நேனினு மினியர் பாலன நீற்றர்
தீங்கரும் பனையர் தந் திருவடி தொழுவார்
ஊன் நயந் துருக உவகைகள் தருவார்
உச்சிமே லுறைபவர் ஒன்றலாதூரார்
வானக மிறந்து வையகம் வணங்க
வயங்கொள நிற்பதோர் வடிவினை யுடையார்
ஆனையின் உரிவை போர்த்த எம்மடிகள்
அச்சிறு பாக்கம தாட்சி கொண்டாரே

இதில்,

தேனினு மினியர் தீங்கரும் பனையர்

என்றும்,

(திருநாவுக்கரசர்)

பொறிப்பு லன்களைப் போக்கறுத் துள்ளத்தை
நெறிப்ப டுத்து நினைந்தவர் சிந்தையுள்
அறிப்பு றும்மமு தாயவ னேகம்பம்
குறிப்பி னாற்சென்று கூடித் தொழுதுமே

இதில்,

அறிப்புறம் அமுதா யவன்

என்றும்,

அருப்புப் போன்முலை யாரல்லல் வாழ்க்கைமேல்
விருப்புச் சேர்நிலை விட்டுநல் லிட்டமாய்த்
திருப்புத் தூரனைச் சிந்தை செயச்செயக்
கருப்புச் சாற்றிலு மண்ணிக்குங் காண்மினே

இதில்,

கருப்புச் சாற்றினு மண்ணிக்குங் காண்மினே

என்றும்,

கனியினுங் கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க்குழல் பாவைநல் லாரினும்
தனிமுடிகவித் தாளு மரசினும்
இனியன் தன்னடைந் தார்க்கிடை மருதனே

இதில்:—

கனி முதலானதிலு மினியன்

என்றும்,

தெள்ளத் தேறித் தெளிந்துதித் திப்பதோர்
உள்ளத் தேற லமுத வொளிவெளி
கள்ளத் தேன்கடி யேன்கவ லைக்கடல்
வெள்ளத் தேனுக் கெவ்வாறு விளைந்ததே

இதில்:—

தெள்ளத் தேறல் தெளிந்து தித்திப்ப தோர்
உள்ளத் தேறலமுத வொளிவெளி

யென்றும்,

கானவன்காண் கானவனாய்ப் பொருதான் றான்காண்
கனலாட வல்லான்காண் கையிலேந்தும்
மானவன்காண் மறைநான்கு மாயி னான்காண்
வல்லேறொன் றதுவேற வல்லான் றான்காண்
ஊனவன்காண் உலகத்துக் குயிரா னான்காண்
உரையவன்காண் உணர்வவன்காண் உணர்ந்தார்க்
தேனவன்காண் திருமுண்டீச் சரத்துமேய (கென்றும்
சிவலோகன்காண் அவனென் சிந்தையானே

இதில்,

உணர்ந்தோர்க் கென்றும் தேனவன் காண்

என்றும்,

கண்ணவன்காண் கண்ணொளிசேர் காட்சி யான்காண்
கந்திருவம் பாட்டிசையிற் காட்டு கின்ற
பண்ணவன்காண் பண்ணவற்றின் திறலா னான்காண்
பழமாகிச் சுவையாகிப் பயக்கின் றான்காண்
மண்ணவன்காண் தீயவன்காண் நீரா னான்காண்
வந்தலைக்கு மாருதன்காண் மழைமே கஞ்சேர்
விண்ணவன்காண் விண்ணவர்க்குமேலா னான்காண்
விண்ணிழிதண் வீழி மிழலை யானே

இதில் :—

பழமாகி அச்சுவையாகிப் பயக்கின்றான் காண்

என்றும்,

குருகாம் வயிரமாங் கூறு நாளாங்
கொள்ளுங் கிழமையாங் கோளே தானாம்
பருகா வமுதமாம் பாலின் நெய்யாம்
பழத்தி னிரதமாம் பாட்டிற் பண்ணாம்
ஒருகா லுமையாளோர் பாக னும்மாம்
உள்நின்ற நாவிற் குரையா டியாம்
கருவா யுலகுக்கு முன்னே தோன்றும்
கண்ணாங் கருகாவூ ரெந்தை தானே

இதில் :—

பருகாவமுதமாம் பாலினெய்யாம், பழத்தினிரதமாம் பாட்டிற் பண்ணாம்

என்றும்,

(திருநேரிசை)

பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தர்க்குப் பத்த ராகி
யரும்பொடு மலர்கள் கொண்டாங்
கார்வத்தை யுள்ளே வைத்து

விரும்பிநல் விளக்குந் தூபம்
விதியினா லிடவல் லார்க்குக்
கரும்பினுட் கட்டி போல்வார்
கடவூர்வீ ரட்டனாரே

இதில்:—

கரும்பினிற் கட்டி போல்வா ரென்றும்

திருத்தாண்டகம்

எத்திக்கு மாய்நின்ற இறைவன் தன்னை
யேகம்பம் மேயானை யில்லாத் தெய்வம்
பொத்தித்தம் மயிர்பறிக்குஞ் சமணர் பொய்யிற்
புக்கழுந்தி வீழாமே போத வாங்கிப்
பத்திக்கே வழிகாட்டிப் பாவந் தீர்த்துப்
பண்டைவினைப் பயமான எல்லாம் போக்கித்
தித்தித்த மனத்துள்ளே யூறுந் தேனைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன்நானே

இதில்:—

தித்தித்தென் மனத்துள்ளே யூறுந்தேனை

யென்றும்,

வானவர்கோன் தோளிறுத்த மைந்தன்றன்னை
வளைகுளமும் மறைக்காடும் மன்னி னானை
ஊனவனை உயிரவனை யொருநாட்பார்த்தன்
உயர்தவத்தின் நிலையறிய லுற்றுச் சென்ற
கானவனைக் கயிலாயம் மேவி னானைக்
கங்கைசேர் சடையானைக் கலந்தார்க்கென்றுந்
தேனவனைத் திருவீழி மிழலையானைச்
சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே

இதில்:—

கலந்தார்க் கென்றும் தேனவனை

என்றும்,

மூவாது யாவர்க்கும் மூத்தான்றன்னைப்
முடியாதே முதல்நடுவு முடிவா னானைத்
தேவாதி தேவர்கட்குந் தேவன்றன்னைத்
திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தான்றன்னை
ஆவாத வடலேறொன் றுடையான் றன்னை
அடியேற்கு நினைதொறு மண்ணிக் கின்ற
நாவானை நாவினில்நல் லுரையா னானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன்நானே

இதில் :—

அடியேற்கு நினைதொறு மண்ணிக்கின்ற நாவானை

என்றும்,

ஆலாலம் மிடற்றணியா வடக்கி னானை
ஆலதன்கீழ் அறநால்வர்க் கருள்செய் தானைப்
பாலாகித் தேனாகிப் பழமு மாகிப்
பைங்கரும்பாய் அங்கருந்துஞ் சுவையா னானை
மேலாய வேதியர்க்கு வேள்வி யாகி
வேள்வியினின் பயனாய விமலன் றன்னை
நாலாய மறைக்கிறைவ னாயி னானை
நாரையூர் நன்னகரிற் கண்டே னானே

இதில் :—

பாலாகித் தேனாகிப் பழமுமாகிப் பைங்கரும்பாய்
அங்கருந்தும் சுவையானானை

யென்றும்,

உருகுமனத் தடியவர்கட் கூறுந் தேனை
உம்பர்மணி முடிக்கணியை யுண்மை நின்ற
பெருகுநிலைக் குறியாளர் அறிவு தன்னைப்
பேணியஅந் தணர்க்குமறைப் பொருளைப்பின்னும்

முருகவிரி நறுமலர்மே லயற்கும் மாற்கும்
முழுமுதலை மெய்த்தவத்தோர் துணையை வாய்த்த
திருக்குழல் உமைநங்கை பங்கன்றன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்டேன் நானே

இதில் :—

உருகுமனத் தடியவர்கட் கூறுந்தேனை.

யென்றும்,

கற்றவர்க ளுண்ணுங் கனியேபோற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய்போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய்போற்றி
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர் தம் புரமெரித்த சிவனேபோற்றி
திருமூலட் டானனே போற்றிபோற்றி

இதில் :—

கற்றவர்கள் உண்ணுங் கனியே

என்றும்,

மற்றவர்கட் காரமுத மானா

யென்றும்,

திருக்குறுந்தொகை

மனிதர் காளிங்கே வம்மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல் ஈச னெனுங்கனி
யினிது சாலவு மேசற் றவர்கட்கே

இதில் :—

ஈசன் எனுங்கனி யினிது சாலவும்

என்றும்,

திருத்தாண்டகம்

பத்திமையாற் பணிந்தடியேன் றன்னைப் பன்னாள்
　　பாமாலை பாடப் பயில்வித் தானை
எத்தேவு மேத்து மிறைவன் றன்னை
　　யெம்மானை யென்னுள்ளத் துள்ளே யூறும்
அத்தேனை யமுதத்தை யாவின் பாலை
　　யண்ணிக்குந் தீங்கரும்பை யரனை யாதிப்
புத்தேளைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
　　போற்றாதே யாற்ற நாட் போக்கி னேனே

இதில்,

என் உள்ளத்துள்ளே யூறுமத்தேனை யமுதத்தை
யாவின் பாலை யண்ணிக்குந் தீங்கரும்பை

என்றும்,

மாசில் வீணையு மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
யீச னெந்தை யிணையடி நீழலே

என்றும்,

திருத்தாண்டகம்

ஆணாகிப் பெண்ணாய வடிவு தோன்றும்
　　அடியவர்கட் காரமுத மாகித் தோன்றும்
ஊணாகி யூர்திரிவா னாகித் தோன்றும்
　　ஒற்றைவெண் பிறைதோன்றும் பற்றார் தம்மேல்
சேணாக வரைவில்லா லெரித்த றோன்றுஞ்
　　செத்தவர்தம் மெலும்பினாற் செறியச்செய்த
பூணாணு மரை ஞாணும் பொலிந்து தோன்றும்
　　பொழிறிகழும் பூவணத்தெம் புனிதனார்க்கே

இதில்,

அடியவர்கட் காரமுத மாகித் தோன்றும்

என்றும்,

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

பொன்னவன் பொன்னவன் பொன்னைத்தந்
தென்னைப் போகவிடா
மின்னவன் மின்னவன் வேதத்தி
னுட்பொரு ளாகிய
அன்னவ னன்னவன் ஆமாத்தூ
ரையனை ஆர்வத்தால்
என்னவன் என்னவன் என்மனத்
தின்புற் றிருப்பனே

இதில்.

என்மனத் தின்புற் றிருப்பன்

என்றும்.

திருவலிவலம்—பண்தக்கேசி

ஊனங்கத் துயிர்ப்பாயுல கெல்லாம்
ஓங்காரத் துருவாகி நின்றானை
வானங்கத் தவர்க்கும் அளப்பரிய
வள்ளலை யடியார்கள் தம்முள்ளத்
தேனங் கத்தமு தாகியுள்ளூறுந்
தேசனைத் திளைத்தற் கினியானை
மானங் கைத்தலத் தேந்தவல்லானை
வலிவலந்தனில் வந்து கண்டேனே

இதில்.

அடியார் கடம்முள்ளத் தேனங்கத் தமுதாகி
யுள்ளூறுந் தேசனைத் திளைத்தற் கினியானை

என்றும்,

மாவை யுரித்ததன் கொண்டங்க மணிந்தவனை
வஞ்சர் மனத்திறையு நெஞ்சணு காதவனை
மூவ ருருத்தனதா மூலமுதற் கருவை
மூசிடு மால்விடையின் பாகனை யாகமுறப்

பாவக மின்றிமெய்யே யற்று மவர்க்கமுதைப்
பானறு நெய்தயிரைந் தாடு பரம்மரனைக்
காவ லெனக்கிறை யென்றெய்துவ தென்றுகொலோ
கார்வயல் சூழ்கானப் பேருறை காளையையே

இதில்,

பாவகமின்றி மெய்யே பற்றுமவர்க் கமுதை

என்றும்,

பூவில் வாசத்தைப் பொன்னினை மணியை
புவியைக் காற்றினைப் புனலனல் வெளியைச்
சேவின் மேல்வருஞ் செல்வனைச் சிவனைத்
தேவ தேவனைத் தித்திக்குந் தேனைக்
காவியங் கண்ணி பங்கனைக் கங்கைச்
சடையனை காமரத் திசைபாட
நாவி லூறுநன் னாறனை யமுதை
நாயி னேன்மறந் தென்னினைக் கேனே

இதில்,

தித்திக்குந் தேனை நாவிலூறு
நன்னாறனை யமுதை

என்றும்,

திருவாசகம்

பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலுங் காண்டற் கரியான் எமக்கெளிய
பேராளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் னுளம்புகுந்த
வாரா வமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்கா ணம்மானாய்

இதில்,

வந்தெ னுளம் புகுந்தவாரா வமுதாய்

என்றும்,

ஊனா யுயிரா யுணர்வாயென் னுட்கலந்து
  தேனா யமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளுந்
  தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார்
                                        சீரொளிசேர்
ஆனா வறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்கும்
  கோனாகி நின்றவா கூறுதுங்காண் அம்மானாய்

இதில்,

என்னுள் கலந்து தேனாயமுதமுமாய்த்
தீங்கரும்பின் கட்டியுமாய்

என்றும்,

ஞானக் கரும்பின் தெளியைப் பாகை
    நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயி னானைச்
    சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டு கொண்ட
    கூத்தனை நாத்தழும் பேற வாழ்த்திப்
பானற் றடங்கண் மடந்தை நல்லீர்
    பாடிப் பொற்சுண்ணம் இடித்து நாமே

இதில்,

ஞானக் கரும்பின் றெளியைப் பாகை நாடற்கரிய
நலத்தை நந்தாத் தேனைப் பழச்சுவையாயி
                                        னானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல கோனை

யென்றும்,

தினைத்தனை யுள்ளதோர்
    பூவினிற்றேன் உண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும்
    பேசுந்தொறும் எப்போதும

அனைத்தெலும் புண்ணொக
ஆனந்தத் தேன்சொரியும்
குளிப்புடை யானுக்கே
சென்றூதாய் கோத்தும்பீ

இதில்,

பேசுந்தொறு மெப்போது மனைத்தெலும் புண்ணொக வானந்தத் தேன் சொரியும்

என்றும்,

முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள்
பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே

இதில்,

சித்த மலமறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட

வென்றும்

சட்டோ நினைக்க
மனத்தமுதாஞ் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனோ
கேடுபடாத் திருவடியை
யொட்டாத பாவித்
தொழும்பரை நாம் உருவறியோம்
சிட்டாய சிட்டற்கே(ர்க்கே)
சென்றூதாய் கோத்தும்பீ

இதில்,

நினைக்க மனத்தமுதாஞ் சங்கரனை

யென்றும்,

அப்ப னேயெனக் கமுத னேயா
னந்த னேயக நெகவள் ளூறுதேன்
ஒப்ப னேயுனக் குரிய வன்பரில்
உரிய னாயுனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேயெனை வைப்ப தேசொலாய்
நைய வையகத் தெங்கள் மன்னனே

இதில்,

எனக்கமுதனே ஆனந்தனே அகநெக வள்ளூறு
தேன் ஒப்பனே யுனக்குரிய வன்பரி னுரியனா
யுனைப்பருகி நின்றதோர் துப்பனே

யென்றும்,

அல்லிக் கமலத் தயனு மாலும்
அல்லா தவரும் அமரர் கோனும்
சொல்லிப் பரவு நாமத் தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையின் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே

இதில்,

நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறையினமுதை
அமுதின் சுவையைப் புல்லிப் புணர்வது

என்றும்,

சீரார் பவழங்கான் முத்தங் கயிறாக
ஏராரும் பொற்பலகை யேறி யினிதமர்ந்து
நாரா யணனறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்
கூராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை

யாரா வமுதின் அருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ

இதில்,

ஆரா வமுதி னருட்டா ளிணை

யென்றும்,

நஞ்சமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி யுத்தர கோசமங்கை
யஞ்சொலாள் தன்னோடுங் கூடி யடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுத மூறிக்கருணை செய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் றூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூச லாடாமோ

இதில்,

அடியவர்கள் நெஞ்சுளே நின்றமுத
மூறிக்கருணை செய்து

என்றும்,

உணர்ந்த மாமுனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி யெல்லா வுயிர்கட்கு முயிரே
யெனைப்பிறப் பறுக்குமெம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கடாம் இல்லா இன்பமே யுன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே

இதில்

குணங்கடா மில்லா வின்பமே யுன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே

என்றும்,

தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா வார்கொலோ சதுரர்(சதிரர்)
அந்தமொன் றில்லா வானந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே யீசா வுடலிடங் கொண்டாய்
யானிதற் கிலனொர் கைம்மாறே

இதில்,

அந்தமொன்றில்லா வானந்தம் பெற்றேன் யாதுநீ
பெற்ற தொன் றென்பால்

என்றும்,

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று

என்றும்,

தென்மன் றுளாடி போற்றி
யென்றனுக்கு ஆரமுதானாய் போற்றி

என்றும்,

திருவிசைப்பா

திருமாளிகைத்தேவர் :

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
யுணர்வுசூழ் கடந்த தோருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துட் டித்திக்குந் தேனே

அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

இதில்,

சித்தத்துள் தித்திக்குந் தேனே
யளிவளருள்ளத் தானந்தக் கனியே

என்றும்,

சேந்தனார்

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலா கருணை மாக்கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ்
சிவனைத் திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண்
டுள்ளங் குளிரவென் கண்குளிர்ந்தனவே

இதில்,

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை

என்றும்,

திருமாளிகைத் தேவர்:

உருக்கி யென்னுள்ளத் துள்ளே
யூறலந் தேறன் மாறாத்
திருக்குறிப் பருளுந்தில்லைச்
செல்வன்பாற் செல்லுஞ் செல்வி

ளருக்கரை யள்ளல் வாய
கள்ளரையவியாப் பாவப்
பெருக்கறைக் காணா கண்வாய்
பேசாதப் பேய்க ளோடே

இதில்,

உருக்கி யென்னுள்ளத் துள்ளே
யூறலந் தேறல்

என்றும்,

கருவூர்த்தேவர் :

புழுங்குதீ வினையேன் வினைகெடப் புகுந்து
புணர்பொரு ளுணர்வுநூல் வகையால்
வழங்குதேன் பொழியும் பவளவாய் முக்கண்
வளரொளி மணிநெடுங் குன்றே
முழங்குதீம் புனல்பாய்ந் திளவரா லுகளும்
முகத்தலை யகத்தமர்ந் தடியேன்
விழுங்கு தீங்கனியா யினிய வானந்த
வெள்ளமா யுள்ளமா யினையே

இதில்,

அடியேன் விழுங்கு தீங்கனியாய்
இனியவானந்த வெள்ளமாய் உள்ளமாயினையே

என்றும்,

என்னையுன் பாத பங்கயம் பணிவித்
தென்பெலா முருகநீ யெளிவந்
துன்னையென் பால்வைத் தெங்கு மெஞ்ஞான்று
மொழிவற நிறைந்த வொண்சுடரே

முன்னையென் பாச முழுவது மகல
முகத்தலை யகத்தமர்ந் தெனக்கே
கன்னலும் பாலுந் தேனுமா ரமுதுங்
கனியுமா யினியை யாயினையே

இதில்,

எனக்கே கன்னலும் பாலுந் தேனுமா
ரமுதுங் கனியுமாயினியை யாயினையே

என்றும்,

செம்பொனே பவளக்குன்றமே நின்ற
திசைமுகன் மால்முதற் கூட்டத்
தன்பரா னவர்கள் பருகுமா ரமுதே
யத்தனே பித்தனே னுடைய
சம்புவே யணுவே தாணுவே சிவனே
சங்கரா சாட்டியக் குடியார்க்
கின்பனே யெங்கு மொழிவற நிறைந்தே
மிருக்கையி லிருந்தவா றியம்பே

இதில்,

அன்பரானவர்கள் பருகுமா ரமுதே

என்றும்,

பூந்துருத்தி நம்பி காடவநம்பி :

(திருவாரூர், பண்—பஞ்சமம்.)

பத்தியா யுணர்வோ ரருளைவாய் மடுத்துப்
பருகுதோ ரமுதமொத் தவர்க்கே
தித்தியா விருக்கும் தேவர்கா ளிவர்தந்
திருவுரு விருந்தவா பாரீர்

சத்தியாய்ச் சிவமா யுலகெலாம் படைத்த
தனிமுழு முதலுமா யதற்கோர்
வித்துமா யாரு ராதியாய் வீதி
விடங்கராய் நடங்குலா வினரே

இதில்,

பத்தியா யுணர்வோ ரருளைவாய்
மடுத்துப்பருகுதோ றமுதமொத் தவர்க்கே
தித்தியா நிற்குந் தேவர்கா ளிவர்தந்
திருவுரு விருந்தவா பாரீர்

என்றும்,

(சேந்தனார் திருப்பல்லாண்டு: கோயில், பண்—பஞ்சமம்)

நிட்டையிலா வுடனீத் தென்னை யாண்ட
நிகரிலா வண்ணங்களுஞ்
சிட்டன் சிவனடியாரைச் சீராட்டுந்
திறங்களுமே சிந்தித் து)
அட்டமூர்த் திக்கென் னகநெக வூறு
மமிர்தினுக் காலநீழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத்
தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

இதில்,

என்னகநெக வூறும மிர்தினுக்கு

என்றும்,

சேலுங் கயலுந் திளைக்குங்கண் ணாரிளங்
கொங்கையிற் செங்குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் கும்மென்று
புண்ணியர் போற்றிசைப்ப

மாலு மயனு மறியா நெறிதந்து
வந்தென் மனத்தகத்தே
பாலு மமுதமு மொத்து நின்றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

இதில்,

என்மனத் தகத்தே பாலும் அமுதமும்
ஒத்து நின்றானுக்கே

என்றும்,

பெரியபுராணம், திருநாவுக்கரசர் புராணம் (427)

மண்முதலாம் உலகேத்த
மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா வுன்னடிக்கே
போதுகின்றேன் எனப்புகன்று
நண்ணரிய சிவானந்த
ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ்
ஆண்டவர சமர்ந்திருந்தார்

இதில்,

சிவானந்த வடிவேயாகி

என்றும்,

பட்டணத்துப் பிள்ளையார்

அடிசார்ந் தவர்க்கு முடியா வின்பம்
நிறையக் கொடுப்பினுங் குறையாச் செல்வம்

என்றும்,

அறுசுவை யதனினு முறுசுவை யுடைத்தாய்க்
காணினுங் கேட்பினுங் கருதினுங் களிதருஞ்
சேறுயர் மருத மாணிக்கத் தீங்கனி

பையப் பையப் பழுத்துக் கைவர
எம்ம னோர்கள் இனிதினி தருந்திச்
செம்மாந் திருப்பர்

என்றும்,

திருக்கழுமல மும்மணிக்கோவை:

(கட்டளைக் கலித்துறை)

ஒளிவந்த வாபொய் மனத்திருள்
நீங்கவெ னுள்ள வெள்ளந்
தெளிவந்த வாவந்து தித்தித்தவா
சிந்தி யாததொரு
களிவந்த வாவன்பு கைவந்த
வாகடை சாரமையத்
தெளிவந்த வாநங் கழுமல
வாணர்தம் இன்னருளே

இதில்,

என் உள்ள வெள்ளந் தெளிவந்த
வாவந்து தித்தித்தவா

என்றும்,

திருமூலர் திருமந்திரம்

மாயனு மாகி மலரோ னிறையுமாய்க்
காயநன் னாட்டுக் கருமுத லானவன்
சேய னணியன் தித்திக்குந் தீங்கரும்
பாயமு தாகிநின் றண்ணிக்கின் றானே

இதில்,

தித்திக்குந் தீங்கரும்பா யமுதாகி
நின்றண்ணிக்கின்றான்

என்றும்,

அறுவும் பரமு மசிபதத் தேய்ந்து
கறுவொன் றிலாத சிவமுங் கலந்தால்
இணையறு பால்தேன் அமுதென வின்பத்
துணையது வாயுரை யற்றிடத் தோன்றுமே

இதில்,

இணையறு பால்தேன் அமுதென வின்பத்
துணையது வாய்

என்றும்,

ஆறந்த முஞ்சென் றடங்குமந் நேயத்தே
ஆறந்த ஞேயம் அடங்கிடு ஞாதுரு
கூறிய ஞானக் குறியுடன் கூடவே
தேறிய மோனஞ் சிவானந்த மாமே

இதில்,

தேறிய மோனஞ் சிவானந்த மாமே

என்றும்,

ஆயு மலரின் அணிமலர் மேலது
வாய விதழும் பதினாறும் அங்குள
தூய வறிவு சிவானந்த மாகிப்போய்
மேய வறிவாய் விளைந்தது தானே

இதில்,

தூய வறிவு சிவானந்த மாகிப்போய்

என்றும்,

நீங்காச் சிவானந்த ஞேயத்தே நின்றிடப்
பாங்கான பாசம் படரா படரினும்
ஆங்கார நீங்கி யதனிலை நிற்கவே
நீங்கா வமுத நிலைபெற லாமே

இதில்,

நீங்காச் சிவானந்த ஞேயத்தே நின்றிடில்

என்றும்,

அருணகிரிநாதர் :

கந்தரனுபூதி.

ஆனா வமுதே யயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானா கியவென் னைவிழுங் கிவெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே

இதில்,

ஆனா வமுதே யென்றும், என்னை விழுங்கி வெறும் தானாய் நின்றது

என்றும்,

கந்தரலங்காரம் :

பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல்
காக்கின்ற பேதைகொங்கை
விரும்புங் குமரனை மெய்யன்பி
னால்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தந்
தித்தித் தறிந்தவன்றே (பின்பு)
கரும்புந் துவர்த்துச் செந்தேனும்
புளித்தறக் கைத்ததுவே

இதில்,

உள்ள வரும்புந் தனிப்பர மானந்தந் தித்தித் தறிந்த வன்றே (பின்பு)

என்றும்,

வரைவில் தெரிவையர் தருசுக
சலதியி லலையு மெனதுயிர்
அனுதின நெறிபெறு மௌன சிவசுக
சலதியில் முழுதுவ தொருநாளே

என்றும்,

கந்தரலங்காரம்

போக்கும் வரவு மிரவும்
பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில்
லாதொன்றும் வந்துவந்து
தாக்கு மனோலயந் தானே
தருமெனைத் தன்வசத்தே
யாக்கு மறுமுக வாசொல்
லொணாதிந்த வானந்தமே

இதில்,

எனைத் தன்வசத்தே யாக்கு மறுமுகவா
சொல் ஒணாது இந்த ஆனந்தமே

என்றும்,

இந்த வசனங்க ளாலு
மிறைசத்தி யின்றுணையான்
முந்தன தானந்தந் தன்னைமுத்
தானம் மூயன்றருந்தி
பந்த மகன்று பரிந்திங்
கிருப்பன் பாசிவனோ(டு)
இந்தநன் முத்தர்க்குச் சம்பந்தங்
கேட்கி லியம்புவமே

உன்னுநற் சம்பந்த மூன்றாம்
முலகி லுபாதி
பன்னிய நற்சம வாயசை
யோகமு மாப்பகர்வர்

துன்னு முபாதிக ளெல்லா
மகன்று துணைவனுடன்
மன்னுநன் முத்தர்க் குபாதிசம்
பந்த மதிப்பரிதே

ஏ(ஓ)ர்சம வாயமுஞ் சொல்லிற்
சிவனோ டொருபொருளா
சேரு முயிரு மதனா
லறிந்திடுஞ் சேடமதால்
சாருஞ் சையோக முயிருக்குஞ்
சிவனுக்குஞ் சத்தியமே
பாரின்முன் னோரும் பகர்ந்தநற்
பண்பிது பார்த்தறியே

உருவிற் சையோக முரைப்பதை
யன்றிநல் லொண்பொருளா
மருவிற் சையோகமிங் காரிகைத்
தாரது வன்றியுமே
மருவு சையோகமுஞ் சம்பந்(தி)தம்
வந்தபின் றான் வரலாற்
பெருகு சையோகமு முயிர்க்குப்பின்
றானும் பிறந்திடுமே

பிறந்த பொருளுக்கு நாசம்
பிறக்கின்ற பெற்றிமையா
லறந்திகழ் முத்தர்க்குஞ் சையோக
நீங்கிடு மப்பொழுதே
சிறந்த பரசிவா னந்தமுந்
துய்ப்பதுஞ் சிந்திடுமா
லறைந்த பொருளது நன்றல
வென்றிங் கறைத்திடிலே

காட்டமும் வன்னியுங் காமுறு
பானெயுங் காவிலுள்ளா
............................வாசனை சொல்கின்ற
வெள்ளுட னெண்ணையும்போல்

வாட்டமிலாச் சிவனொடு ........ .. ........
மதித்திடு நூல்
நாட்டும் வசனத் தருவிற்
சையோகமு நண்ணிடுமே

சொன்ன பொருளுக்குச் சையோகஞ்
சம்பந்தி தோன்றியபின்
மன்னிய தின்றிங் கதுபோ
லுயிருக்கு மற்றறிநீ
முன்னிய ருத்தநற் குற்றங்க
ளின்று முதல்வனுரைக்
கன்னியஞ் சொல்லும் புகையின்
றதனா லநத்தமின்றே

சிவஞானபோதம் :

பண்ணையும் மோசையும் போலப் பழமதுவும்
எண்ணுஞ் சுவையும்போ லெங்குமாம்— [அண்ணறான்
அத்துவித மாத லருமறைக ளொன்றென்னா(து)
அத்துவித மென்றறையு மாங்கு
அண்ணல்தான் அத்துவிதமாதல்

என்றும்,

அருவுருவந் தானறிதல் என்னும் பாட்டில் :

ஆன்மா அருவுருவாய்த் தோன்றியுடனில்லாது
தோன்றாது நில்லாது தோன்றல் மணம்போல்தொக்கு

என்றும்,

சிறைசெய்ய நின்ற செழும்புனலி னுள்ளஞ்
சிறைசெய் புலனுணர்விற் றீர்ந்து- சிறைவிட்(டு)
அலைகடலிற் சென்றடங்கு மாறுபோன் மீளா
துலைவிலான் பாதத்தை யுற்று

என்றும்,

இந்துவிற் பானுவில் ராகுவைக் கண்டாங்குச்
சிந்தையிற் காணிற் சிவன்கண்ணா—முந்தவே
காட்டாக்கிற் றோன்றிக் கனல்சேர் இரும்பென்ன
வாட்டானா மோதஞ் செழுத்து

என்றும்,

சிவஞான சித்தியார் சுபக்கம் :

ஒன்றெனு மதனா லொன்றென்
றுரைப்பதுண் டாகையாலே

என்னும் பாட்டில்,

அறிவினுள்ளே யென்று நின்றிடுதலாலே
யிவன் அவன் என்னலாமே

என்றும்,

சத்தசத் தறிவ தான்மாத் தான்சத்து
மசத்துமன்று நித்தனாய்ச் சதசத்தாகி நின்றிடும்

என்னும் பாட்டில்,

வைத்திடுந் தோற்ற நாற்ற மலரினில்
வருதல்போலும்

என்றும்,

மன்னவன்றன் மகன்வேடர் இடத்தே தங்கி

என்னும் பாட்டில்,

மலமகற்றித் தானாக்கி மலரடிக் கீழ்வைப்பன்

என்றும்,

புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்

என்னும் பாட்டில்,

இதிற் சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின்
ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்

என்றும்,

இம்மையே யிரெட்டாண் டெய்தியெழிலாரு
மேந்திழையார் முத்தி

என்னும் பாட்டில்,

தன் மெய்வடிவாஞ் சிவத்தைச்
செம்மையே பெறுகை முத்தி
யென்றுஞ் செப்புவர்கள் சிவனடியைச்
சேருமுத்தி செப்புவது இங்கியாமே

என்றும்,

பன்னிறங்க ளவைகாட்டும் படிகம் போலுள்ளம்
பலபுலன்கள் நிறங்காட்டும் பரிசுபார்த்திட்டு

எனும் பாட்டில்,

பொய்ந்நிற வைம்புல நிறங்கள்
பொய்யென மெய்கண்டான்
பொருந்திடுவன் சிவத்தினொடும் போதான்
பின்னை முன்னிறைநீர்
சிறைமுறிய முடுகியோடி முந்நீர்சேர்ந்தந்
நீராய்ப் பின்னீங்கா முறைபோல்

என்றும்,

கண்டவிவை யல்லேனா னென்றகன்று காணாக்
கழிபரமு நானல்லேன் எனக்கருதிக் கசிந்த

எனும் பாட்டில்,

கசிந்த தொண்டினொடு முளத்தவன்றோன்
நின்றகலப்
பாலே சோகமெனப் பாவிக்கத்
தோன்றுவன் வேறின்றி

என்றும்,

இந்தனத்தின் எரிபாலின் நெய்பழத்தி னிரதம்
எள்ளின்க ணெண்ணெயும்போல்
எங்குமுள னிறைவன்

எனும் பாட்டில்,

இந்தனத்தின் எரிபாலில் நெய் பழத்தின் இரதம் எள்ளின்கண் எண்ணெயும் போல் எங்குமுளன் இறைவன்

என்றும்,

சிவன் றன்னைப் பந்தனையை யறுத்துத் தானாக்கி

என்றும்,

ஆணவந்தான னாதியந்த மடையா தாகும்
அடையினந்த வான்மாவும் அழியுமெனில் செம்பில்

எனும் பாட்டில்,

தானுவின் றன் கழலணையத்
தவிருமலந் தவிர்ந்தாற்
றான்சத்த னாயிருக்கை முத்தி
யரன்றானைப் பூணவேண்டுவது
ஒன்றுமில்லை யெனின் அருக்கன்
புகுதவிருள் போமடியிற்
பொருத்த மலம் போமே

என்றும்,

கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை

எனும் பாட்டில்,

குருவான் ஞானநிட்டை யடைந்தவர் நாதன்றாளே

என்றும்,

''தானமியாகந் தீர்த்தம் ஆச்சிரமந் தவங்கள்''

எனும் பாட்டில்

உற்பவித்து ஞானநெறி யடைந்தவர்
சிவனையங்கு நாதனே
முன்னிற்கின் நணுநவர் நற்றானே

என்றும்,

சிவஞானச் செயலுடையோர் கையிற்றானந்
திலமளவே செய்திடினு நிலமலைபோற் றிகழ்ந்து

எனும் பாட்டில்

தவமாரும் பிறப்பொன்றிற் சாரப்பண்ணிச்
சரியைகிரி யாயோகந்
தன்னினுஞ் சாராமே! நவமாகுந்
தத்துவ ஞானத்தைநல்கி
நாதனடிக் கமலங்கள் நணுகு
விக்குந் தானே

என்றும்,

சிவன்சீவன் என்றிரண்டுஞ் சித்தொன்றா மென்னில்
சிவனறிட்சித் திவனருளைச் சேருஞ்சித் தவன்றான்
பவங்கேடு புத்திமுத்தி பண்ணுஞ்சித் தவற்றிற்
படியுஞ்சித் தறிவிக்கப் படுஞ்சித்து மிவன்றான்
அவன்றானே யறியுஞ்சித் தாதலினா லிரண்டும்
அணைந்தாலு மொன்றாகா தநந்நியமா யிருக்கும்
இவன்றானும் புத்தியுஞ்சித் திவனாமோ புத்தி
யிதுவசித்தென் றிடிலவனுக் கிவனுமசித் தாமே

என்றும்,

சிவப்பிரகாசம்:

தேசுற மருவு மான்ம தெரிசன மான்மசுத்தி

என்னும் பாட்டில்

பாசமதகல ஞானம் பற்றறான் பணியை நீத்தல்
ஏசினே யத்தழுந்த லெனுமிவற் றடங்கு மன்றே

என்றும்,

அறிவையறின் புறுமுத்தி கந்தம் ஐந்து

என்னும் பாட்டில்

திரிமலமு மகலவுயி ரருள்சேர் முத்தி
திகழ்முத்தி யிதுமுத்தித் திறத்ததாமே

என்றும்,

இருபாவிருபஃது

மன்னிய கன்மச் சமத்திடை மலங்களை
யந்நிய மாக்கிய யருள்வழி யதனால்
என்னுட் புகுந்தனை யெனினே முன்னைத்
திரிமலந் தீர்த்த தேசிக நின்னோ(டு)
ஒருவுத லின்றி யுடந்தையே யாகும்
பெருநிலை யாகல் வேண்டும்

என்றும்,

போற்றிப் பஃறொடை

பேராளன்:

தந்தபொரு ளேதென்னிற்
றான்வேறு நான்வேறாய்
வந்து புணரா வழக்காக்கி
முந்தி யென்றன்

உள்ளமென்று நீங்கா தொளித்திருந்து
தோன்றி நிற்குங்
கள்ளமின்று காட்டுங் கழல்போற்றி
வள்ளன்மையாற்
றன்னைத் தெரிவித்துத் தன்றாளி
னுட் கிடந்த
என்னைத் தெரிவித்த எல்லையின்கண்

என்றும்,

திருவருட்பயன் :

எங்கு மெவையும் எரியுறுநீர் போலேகந்
தங்குமவன் றானே தனி

என்றும்,

துகளறு போதம் :

உன்னறிவுக் குள்ளே யுணர்வா யொழியாத
தன்னறிவு தானுனக்குத் தாசகமாய்ப்—பின்னமற
வொன்றா வொழியாம லுள்ளடங்கி யுள்ளபடி
நின்றா லதுவாவை நீ

என்றும்,

சங்கற்பநிராகரணம்.
சித்தாந்தம்.

பதிபசு பாச முதிரறி வுகளுடன்
ஆறா முன்னர்க் கூறாப் பின்னர்
இருபொரு ளீத்துமற் றொருநால் வகையும்
ஈனமில் ஞாதுரு ஞான ஞேயமென் (று)
இசைய மூன்றாய்ப் பசுபதி யென்றவற் (று)
இரண்டா யிரண்டும் ஒன்றின் ஒன்றாகத்
திரண்டாம்பயனெனும் திருவரு டௌியிற்

சென்றுசென் றணுவாய்த் தேய்ந்து
[தேய்ந்தொன் றாம்
என்றிறை யியற்கை யியம்புத றகுமே

என்றும்,

ஞானபூசை

இற் புகுந்து பதம்விளக்கி

என்றும் பாட்டில்,

சிற்பிரமாந் தற்பரத்துள் அழுந்தி
நீங்குந் தீங்கலத்தூங்கு

என்றும்,

தேவாரம்.

விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போன்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட் டுணர்வு கயிற்றினான்
முறுக வாங்கிக் கடையமுன் னிற்குமே

இதில்,

விறகிற்றீயினன் பாலிற் படுநெய்போல்

என்றும்,

திருவாசகம்

கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டு மறாமலர்க் கொன்றையான்
நள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளும்
எள்ளும் எண்ணெயும் போனின்ற வெந்தையே

என்றும்,

திருவண்டப்பகுதி

பூவி னாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை

என்றும்,

அரைசே பொன்னம்பலத் தாடும் அமுதே

என்னும் பாட்டில்

கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் அடியேன்பாற்
பிரைசேர் பாலின் நெய்போலப்
பேசாதிருந்தால் ஏசாரோ

என்றும்,

(வருவனகொண்டு
சித்தாந்த நிச்சயம் தெளியப்படுதல்கண்டுகொள்க)

வேலே துணை

சருவதாரி வருடம் மார்கழி மாதம் 15உ சோமவாரமும் கார்த்திகை நட்சத்திரமும் துவாதசியும் பெற்ற சுப தினத்தில் சித்தாந்த நிச்சயம் ஆகிய சாத்திரம் உரை முத்தும் (முற்றும்) வயித்தியநாதன் கையெழுத்தாக எழுதி நிறைவேறினது.

வயித்தியநாத சுவாமி துணை

சிவசகாயம்

சித்தாந்த நிச்சயவுரை முற்றிற்று.

உ

# சித்தாந்த நிச்சயச் செய்யுள்

## முதற்குறிப்பகராதி

---


| | எழுத்து வரிசை | | செய்யுள் எண் |
|---|---|---|---|
| | **அகரம்** | | |
| 1 | அளவைப் பொருள் | .... | 13 |
| | அன்னிய தேசம் | .... | 19 |
| | அன்றியு மந்த | .... | 22 |
| | அந்த மலசத்தி | .... | 25 |
| | அந்தநன் னேத்திரம் | .... | 36 |
| | அக்கினி வெம்மை | .... | 39 |
| | அன்றியு மானம் | .... | 42 |
| | அன்றொரு காலத் | .... | 43 |
| | அன்றியுஞ் சத்திய | .... | 47 |
| 10 | அந்தச் சிவசத்தி | .... | 54 |
| | அன்றியு மீசன் | .... | 59 |
| | அன்றரன் பாச | .... | 59 (அ) |
| | அந்த மறிவையயும் | ... | 71 |
| | அவ்விருள் சீக்க | .... | 77 (ஆ) |
| | அன்றி யரன் செய் | ... | 78 |
| | அன்றியும் பாசம் | .... | 84 |
| | அன்றியு மந்திரம் | .... | 89 |
| | அன்றியுங் கன்ம | .... | 92 |
| | அன்றிநற் கன்ம | .... | 92 (அ) |
| 20 | அந்தப் பிரவஞ்சத் | .... | 93 |
| | அன்றியு மானந்த | .... | 100 |
| | அன்றியுஞ் சித்தி | .... | 101 |

அருளுரு வாகிய .... 102 (உ)
அன்னியர் வந்து .... 106
அன்றியுங் கண்டு ... 109
அன்றிங் குயிர்க்குண .... 117
அந்தச் சுகதுக்க .... 116
அன்றி யரன் சம .... 120
அன்றியு மாருயிர் .... 121
30 அறிவிக்க வறித .... 122
அரனாவி ஞானம் ... 128 (ஆ)
அணுப்பால் விளங்கின்ப ... 111 (அ)
அன்றிங் குயிர்க்குண .... 111

ஆகாரம்

ஆகம வேத .... 4
ஆணவந் தன்னை .... 6
ஆணவ நீங்குவ .... 18
ஆதித்தன் றன்கிர .... 32
ஆணவம் பாகம் .... 33
.. .. .... 34
40 ஆருஞ்சிவ சத்தி .... 48
ஆணவ சத்தியை .... 55
ஆணவஞ் சேரில் .... 57
ஆகம முத்தியில் .... 76
ஆதித்தன் ரன்கிரண .... 82
ஆகமந் தானும் .... 98
ஆனந்த மென்பது .... 99 (அ)
ஆருயிர்க்குள்ள நல் .... 103
ஆருயிர்க்குள்ள சுகா .... 103 (அ)
ஆடவரானந்தம் .... 107
50 ஆறாப் பரம்பார்த் .... 128
ஆனந்தமென்பது ஞான .... 99

இகரம்

இந்த விரோதத் .... 38
இன்றளவும் நல் .... 45

இவ்வண்ணம் செம்பில் ... 65
இவ்வா றிசைத்திடின் .... 66
இருடனை நீக்கி .... 67
இன்புருவாகி ... 104
இன்புருவான .... 104(அ)
இருளறு சீவன்முத் .... 117

ஈகாரம்

60 ஈசனும் புற்கலன் .... 53
ஈசனை யின்ப .... 123

உகாரம்

உன்னும் பிருதுவி .... 9
உரைத்த விசேடத் .... 46
உன்னும் வியாதியின் .... 86
உன்னிய வாகமம் ... 80
உன்னுரு சிவத்துவ .... 91
உன்னுஞ் .. .... 91 (அ)
உன்னும் பிரவஞ்ச .... 96
உயிர்காணுஞ் சிவா .... 124

ஊகாரம்

70 ஊனார் பிரவஞ்ச .... 95

எகாரம்

என்ன நாம் பாவங்கள் .... 87

ஐகாரம்

ஐம்மல நீக்குவன் .... 77

ஒகாரம்

ஒருமைதருஞ் சிவ .... 5
ஒருமைய தாகும் ... 5 (அ)
ஒன்றிடுஞ் சத்தென்று ... 26

ஒன்றுநற் சத்தென்று .... 27
ஒன்றுநற் சாத்தற்கு .... 44
ஒழியாத துன்பத் .... 90

ககரம்

கண்ணிற் படலம் .... 7
80 கண்ட கடத்தின் .... 21
கடத்தை வனையும் .... 35
கரணம் பொறியுடல் .... 102 (இ)

கா

காரண யோக்கியம் .... 74

குகரம்

குணத்தின் வடிவ .... 20

கே

கேட்டவருக்கு .... 88
கேவல ஞானம் .... 102 (ஆ)

சகரம்

சத்திக்கு நாசம் .... 15
சத்திக்கு நாசமலத் .... 19
சந்திரனுக்கிணை .... 77
90 சருக்கரை தான்சடம் ... 107
சருக்கரை தன்னை .... 109 (அ)
சருக்கரை யற்ற ... 110
சருக்கரை யற்றபொழுதில் .... 110 (ஆ)

சா

சாருஞ் சிவசத்தி .... 49

சிகரம்

சித்தாந்தம் யாதென்று—காப்பு
சின்மயன் போன்முத்தர் .... 96

சிவத்துமென்ற .... 102
சிற்றறி வென்றி .... 102 (ஈ)
சிவனுக்குயிர்சம .... 120 (அ)

சு

சுத்தியைக் கண்டிது .... 3
சுருதி குருபரன் .... 12

செ

செம்பிற் களிம்பை ... 60
,, ,, .... 61
,, ,, .... 60 (அ)
செம்றிடுஞ் சித்தி .... 102 (அ)

சை

சைவத்தில் எல்லா ... 24

சொ

சொன்ன வழித்த .... 40
சொன்ன வசனங்கள் ... 82
சொன்ன நற்சித்தியின் .... 125

தகரம்

110 தஞ்ச மதாய் .... 51
தருதுக்க மின்ப .... 119 (அ)

ந


நல்லசர்கள் ... 1
நன்று பிறந்த ... 70
நன்று வளைந்த .... 72


நா


நாதன் பரம்பரன் .... 11
நாத முதற்சொல் .... 85


நி


நிம்ப முதற்பொருள் .... 112
நிம்ப முதற்பொருடன்னால் ... 113
நித்தனுக் காருயிர் .... 118 (அ)


பகரம்


120 படலவுவமையை .... 8
பன்னு குருவின் .... 16
பன்னு கடத்தின் ... 22
பன்னும் விளக்கிற் .... 37
பன்னும் விளக்கிற்பகர் .... 75
படைப்பதுங் காப்பதும் .... 77
பன்னிய வாசகமம் .... 79
பன்னு முயிரின் .... 129


பா


பாச நிவிர்த்தி .... 83
பாருறு நீருமந் .... 125


பூ


130 பூணு மவற்றை .... 56

மகரம்


| | | |
|---|---|---|
| மன்று மஞ்ஞானம் | .... | 10 |
| மறைதந்த வம்மான் | .... | 14 |
| மன்னுங் கலைமுதல் | ... | 41 |
| மலபரி பாகம் | ... | 52 |
| மலத்தை யிருளென்றும் | .... | 62 |
| மன்னிய பாசம் | .... | 81 |
| மன்னவனாலும் | .... | 86 (அ) |
| மன்னும் பிரவஞ்ச | ... | 94 |
| மயக்காம் விடய | — | 113 |


மு


| | | |
|---|---|---|
| 140 முத்தியி லீசன் | ... | 17 |
| முன்பு விளக்கொன்று | .... | 63 |
| முத்தருந் தானுணர் | .... | 96 |
| முத்தியி லின்பமுண் | .... | 97 |
| முத்தருக்குஞ் சுக | .... | 115 |
| முத்தரு மின்பதுன் | .... | 115 (ஆ) |
| முத்தியி லீசன்சம | .... | 118 |
| முத்தன் சிவானந்த | ... | 119 |


மெ


| | | |
|---|---|---|
| மெய்கண்ட தேவன் | .... | 2 |


வகரம்


| | | |
|---|---|---|
| வஞ்ச மலங்கெடு | .... | 30 |
| 150 வஞ்சமலங் கெடுமாகை | ... | 31 |
| வந்த நல்யானை | ... | 73 |
| வனையுங் கழலரன் | .... | 125 (அ) |
| வருபிரபஞ்ச | ... | 93 (அ) |

வி

விளக்கொன்று வந்திருள் .... 64
விளக்கை மறைத்த .... 68 (அ)
விளக்கினின் மாய்ந்த .... 69
விளக்கும் பரன்றொழில் ... 77 (அ)
விடையத்தை மேவி .... 117

வெ

வெஞ்சக மாகும் .... 28
160 வெஞ்சகமாகுஞ் சிவ .... 29
வெஞ்சகம் போன பின் .... 50
வெஞ்சகமாகுஞ் சிவசத்தி .... 51

செய்யுள் முதல் குறிப்பு அகராதி முற்றிற்று

# சித்தாந்த நிச்சயம்
## அருஞ்சொல்—விளக்கவுரை

---

### காப்பு-காவல்

*சித்தாந்தம்:-* சித்தம் + அந்தம் வேதாந்தத்தின் முடிந்த முடிபாகிய ஆகம முடிபினை எடுத்துரைப்பது. முடிந்ததன் முடிபு என்பது போந்த பொருள்.

முத்தன்-விடுபட்டலன் (வினையின் நீங்கி விளங்கியவன் அநாதிமலமுத்தன் என்பதன் பொருளே பொருளாம். ஐம்முகம்—ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம் சத்தியோசாதம் என்பன.

### நூல்:

1 நல்லார்கள்—சிலஞான முற்றவர்கள், பொதுவுஞ் சிறப்பும் ஆகிய வேத ஆகமங்களை நல்லாசிரியர்பால் முறையுறக்கற்ற நெறியினர். மெய்கண்டநாதன் புறச்சந்தான குரவருள் முதலாமவர். திருவெண்காட் டீசரருளால் திரு அவதாரம் ஆனவர். சத்தியஞான தரிசனிகள் - என்பதன் பொருளே மெய்கண்டநாதன் என்பதாகும்.

2 மருள்-மயக்கம். விபரீதவுணர்ச்சியை மயக்கமெனல் மரபு பொல்லாத பிள்ளை -திருநாரையூரில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளிய சுயம்பு மூர்த்தியாகிய விநாயகப்பெருமானின் திருப்பெயராகும். நம்பியாண்டார்நம்பிக் கருளியதுபோல் இம்மெய்கண்டாருக்கும் அருளினவர்.

3 சுத்தி -(கிளிஞ்சல்) - சிப்பியின் ஓடு. தொருப்பவர்— திரட்டுபவர், முத்தி— (விடுபட்டநிலை) மோட்சம் [வீடு] அவன் இன்பம் —சிவானந்த சுகம்.

4 ஆகமம் — நூல் ஈண்டு இறைவனாலருளப்பட்ட மூலாகமங்கள் இருபத்தெட்டும் உபாகமங்களுமாம் இவை சிறப்பு நூல்களாம். சரியையாதி நான்கு பாதங்களையும் முப்பொருளியல்களையும் திப்பிய மாகச் செப்புவன. வேதம் — பொது நூல்கள் இருக்கு முதலிய நான் மறையும் உபவேதங்களும் ஆம். புராணம்— மந்வந்தர முதலிய பழைய வர லாறுகளை யுணர்த்துவது. ஊகம் — நல்லுணர்வு (ஆய்வு) பரமுத்தி நிரதிசயவின்பம் (அந்தமில் இன்பத்து அழிவில் வீடு(பரி-உ) மேலான சிவ சாயுச்சியமாகிய பரமுத்தி யென்பர். போகம் — நுகர்வு சிவசமமுத்தி சிவத்திற்கொப்பானவீடு.

5 பிரான் — பெருமையுடையவன், பித்தர் அறியாமை யைப் பெரிதும் உற்றவர். தருமையில் நாவுக்கரச சம்பந்தன்—தருமபுரத்தில் எழுந்தருளிய பரமா சாரியருள் ஒருவராவர். முதற்குரவர் தம்பெயரினை வழிவழிவரு (பரம்பரையாக வரும்) குரவர்தம் பெயரோடு இணைத்துவழங்கல்மரபு(சம்பிரதாயம்) அருள் உருவம்—கருணைவடிவு.

(அ)பருமை யொழிதலாவது—தூலநிலைநீங்கிச் சூக்கும நிலை வருமெனல் கருத்து. தூலம்—பருமை, சூக் குமம்— நுட்பம். தருமை அழகிய சிற்றம்பலகுரு— இந்நூலாசிரியன் குரவராவர். இவர் பெரிய சித்த ராகிப் பற்பல அற்புதங்களை யருளியதோடு அமை யாது வந்தியாகிய மலடிக்கும் புத்திரப்பேறு அரு ளிய புண்ணியராவர்.

6 ஆணவம்—மூலமலம். (உயிரோடு ஒன்றியிருப்பது) அபிபவம் — கீழ்ப்படுதல். (அவமானப்படல்) தாணு —சிவபெருமான் (பற்றுக்கோடாயுள்ளவன்) அரன் அருள் பெற்றவர் -சீவன் முத்தராயுள்ளவர்.

7 கண்ணிற்படலம்-கண்ணின் ஒளியினை மறையுமாறு செய்யும்நோய். படலம்-மறைப்பு. அண்ணி— நெருங்கி அவலம் — யாதுசெய்வன் என்று. ஆற்றல் நச்சயிடும்—விரும்பியிடும் —(நச்சல் — விரும்பல்) மலம்தவிர்த்தல்—மலநோய்நீக்கல்.

8 பன்னியது—எடுத்துக் கூறினது. புறவொளியை மறைப்பது படலம். பாறும் சிதறச்செய்யும்.

9 உன்னும் பிருதுவி—கருதப்பட்ட (பஞ்சபூதங்களுள் ஒன்றாகிய) பிருதுவிதத்துவம் [மண்] பொருள் பெயர்—இருதிணைப் பொருட்பெயரும் இயங்கியல் நிலையியல் பொருட்களும் சொல்குரு—உபதேசம் புரிந்தருளும் அறிவு ஆசிரியர். எஞ்ஞானம்— எந்த அறிவும் (எவ்வகைப்பட்ட அறிவுகளும்)

10 முன்னவன்—முதல்வன் (பரமேசுவரன்) மலநீங்கிய முத்தர்—சீ வன் மு த் த ர் (சாமுசித்தர் ஆவர்) அன்னசிவன் — உயிர்களுக்கு மயர்வற வருளிய சிவபெருமான்.

11 நாதன்—ஒலி வடிவானவன் (தலைவன்) நம்பன்— பேசப்பெரிதும் இனியபெருமான், நாரிபங்கன்— உமையொரு கூறன். புயங்கப்புனிதநடம்— ஒருவகைக் கூத்து. புயங்கம்—பாம்பு (அரவம்) பனவர் — முனிவரர் தேறார்—தெளியாதவர் பாம்பு போற்புடையில் வளைந்து, வளைந்து ஆடல் புயங்க நடனமாம்,

12 சுருதி எழுதப் பெறாததாய் சுரோத்திர இந்திரியத்தாற் கேட்கப்பெறுவது. இருக்கு யசுர் சாமம் அதர்வணமும் (இவை முதன்மறை) (உப வேதங்களுமாம்).

13 ஒழுக்கம்—நன்னெறி கடைப்பிடித்து நடத்தல். சீலம் -அஃது மேன்மேலும் வளரப் பற்றியொழுகுதல். கால் கமலம்—திருவடித்தாமரை. பருணிதர்—(உண்மை நூல்) புலவர்.

14 மறைப்பு—பாசவிருள். சக்தி—ஆற்றல். உள்ஒளி—ஞானப்பிரகாசம் (அகவொளி) கறைதந்த பாசம்—இருளாகிய அறியாமையைக் கொடுத்த கட்டு (அழுக்கு). அறிஞர்கள்—சிவஞானிகள்.

15 தருமம் (தன்மம்)—குணம் (இயல்பு). தருமி—குணத்தையுணர்த்துபவன். நாசம்—அழிவு. அத்தன்—எல்லாவுலகுக்கும் தந்தையாயவன்.

16 குருவின் வசனம்—குருஉபதேசமொழி (மகாமநு என்பர்) நாளும் மறக்கரிது—எப்பொழுதும் மறத்தல் கூடாது,

17 முத்தியது ஆவது — மும்மலப்பிணியகன்று எப்பொருளையும் உணர்வது. அத்தம்—அருநெறி. அணவல்—மேல் நோக்கிச் செய்தல், ஆய்தல்—ஆராய்தல்.

18 நண்ணுவது—நெருங்கியிருப்பது. தாணுவின்சத்தி-சிவசத்தி. தடைபட்டிருப்பது-உள்ளபொருளையடையாதவாறு இடையீடுபட்டிருப்பது. பேணல்—விரும்பல்.

19 புற்கலன்—சீவன் (உயிர்) வியாபகம்-நிறைவு. நித்தமலம் — எப்பொழுதுமுள்ள கட்டு. மோசம்—வஞ்சனை.

(அ) விரோதம்—மாறுபாடு. சிந்திடும்—சிதறல்உறும் சாரும்—வந்தடையும்.

20 குணி-குணத்தையுடையது, குறிப்புஅரிது-ஆராய்தல் கூடாது.

21 கறுப்பு—ஆணவமலம். அருணம்—செவப்பு சிந்தாரம்) விண்டு—பிளந்து, மேதினி—பூமி

22 ஆவாரகசத்தி—ஆன்மாவிற்கு அநாதியே உண்டு என்றுரைக்கப்படும் எல்லாவற்றையும் அறியும் எல்லாவற்றினையும் இயற்றும் வடிவுடைய சிவத்தன்மையினை மறைக்கும் ஒரு ஆணவமல சத்தியாம் அணையும்—வந்துசேரும்.

23 துன்றியிடும்—நெருங்கியிடும், அகற்றல்—நீக்கல் விசாரித்தல் ஆய்தல், இயம்புவம் கூறுவோம்

24 அநாதி முதல் இல்லாதது (ஆதியற்றது) சைவம் சிவத்தொடர்புடையது (அன்புமயமானது) ஆகமம்-நாற்பாதத்தினையும் முப்பொருளினையுமுணர்த்துவது சற்காரியம் - உள்ள பொருளினின்று தோன்றும் காரியம் (ஆக்கப்பாடு) பொன்றும் — அழியும், மொய்வைத்த—நெருங்கவைத்த

25 நந்தல்—அழிதல் (கெடுதல்) மலசத்தி—மூலமலத்தின் ஆற்றல், சத்து உள்பொருள், அசத்து—இல்பொருள் (பரிபாடை)சசக்கொம்பு-முயல்கோடு (என்றுமிலாப்பொருள்) முயற்கோடு ஆகாயப்பூ பவளக்கோட்டு நீலயானை இவைபோன்றவை என்றும் எவ்விடத்தும் இல்லாப்பொருள்.

26 ஒன்றிடல்-நெருங்கியிருத்தல், பொன்றிடல், அழிதல், நித்தியம் — என்றுமுள்ளது இவண்— இவ்விடம் (இந்தவுலகு) மோட்சநற்காரிகை முத்தியினைப்பற்றிச் சூத்திரப்பொருளை ஆரியத்திற் பொருந்த விரித்துரைப்பது நயந்து-விரும்பி

27 பலசத்தி-பலவாகியசத்தி (பலமுடையசத்தி) சம்பு-சிவபெருமான், அறைதல்—கூறல், நன்று—நன்மை. நண்ணிடில்-நெருங்கில், மொழிவோம்—கூறுவோம். (தனித்தன்மைப் பன்மை)

28 தஞ்சமது அடைக்கலம் (பற்றுக்கோடு) வெஞ்சம்—குறிப்பு. எஞ்சல்இலாஉயிர்—அநாதியாக உள்ள (அழியாத) ஆன்மாக்கள் துஞ்சல்—இறத்தல் விஞ்சைநற்சைவர்—நல்ல கல்வியினைக் கற்ற சைவர்கள், வெஞ்சகம்—(வியஞ்சகம்) விளக்குங் கருவி

29 வெஞ்சகம்—குறிப்பு. சன்னிதி—திருமுன். வேத்தி—வியத்தி என்றசொல் திரிபாக கோடல்தகும் வெளிப்படை என்பது பொருள் அறியத்தக்கது. ஆம் மேவியிருக்கை—பொருந்தியிருக்கை. மாற்றம்—மொழி.

30 விஞ்சை—வித்தை கல்வி வேண்டும்—விரும்பும் அஞ்சி—நடுங்கி.

31 மறித்து-தடுத்து-மறைப்பு புலப்படாமைசெய்வது அழிவின்மை—நாசமின்மை.

32 ஆதித்தன்—சூரியன்: கிரணம்—ஒளி துணிதல்—தெளிதல், துணை—ஆதரவு.

33 பாகம் பக்குவப்படல்—(பதமாதல்) பொருட்டு—காரணம் கலாதிகள்—கலைகள்· பிரதிட்டை, நிவிர்த்தி முதலியனவாம், மலத்தினைப்போக்கல் மலவலிநீக்கல். பெத்தம்—பாசத்தோடுகட்டுபட்டு நிற்றல்: சகாயம்—துணை. சத்தியம்—மெய்

34 உயிர்நிமித்தம்—உயிரின்காரணம், பேணி விரும்பி

35 கடம்—குடம், மடக்கு அகல், மன்னும் இருள் நிலைபெற்ற இருள். அடர்த்தல்-கொல்லல் (இல்லாமற் செய்தல்) அறைகுதி-கூறுவாய்.

36 இருளின் பந்தம்-இருளின்கட்டு, பரிந்து விரும்பி ஒருகால் ஒருதடவை. சாற்றின்—கூறின்.

37 துன்னுவது நெருங்குவது. தோற்றம் புலப்படல். திட்டாந்தம்—உதாரணம் (எடுத்துக்காட்டு)

38 விரோதம்—பகை. சாலநன்று—மிகவும் நல்லது

39 அவுடதம் மருந்து. பொக்கம்—பொய், அகலாமல் —நீங்காமல் வியன்—மேலானது தொக்குநர்—திரண்டவர்.

40 சொன்ன அவிழ்தம் — கூறப்பட்டமருந்து. ஓர்ந்து கொள்ளல்—உணர்ந்துகொள்ளல்.

41 மின்னியிருத்தல் ஒளிவிட்டிருக்கை. மன்னும்—நிலைபெறும் மதிஇலது—அறிவற்றது.

42 மானம் –(குற்றம்) பெருமை, உலகம் சான்றோர் உயர்ந்தோர்.

43 அபிபவம்—அவமானம். புடைத்து—அடித்து. இடர்—துன்பம்.

44 பொன்றுவன்-கொல்லுவன் (அழிப்போன்) பிழைத்தல்—தப்பல், எய்திடும்—அடையும்.

45 பொன்றுதலற்ற—அழிவில்லாத, புகல்சிவன்—கூறப்பட்டசிவன்.

46 ஒண்பொருள்—ஒளிமயமான பொருள், வரைத்து-எல்லைப்படுத்தி, நிரைத்தமலம் —வரிசைப்பட்ட

பாசம், நின்மலன்—அழுக்கற்ற வடிவுடையன் (நாயன்) புரைத்ததொழில் குற்றமுறுசெயல்

47 அநுக்கிரகம்-அருள்(கருணை) நவிலல்—உரைத்தல் (மொழிகுதல்)

48 ஆருஞ்சிவசத்தி—நிறைந்த சிவசத்தி. தேரும்படி—தெளியுந்தன்மை. பரமதம்—அந்நிய சமயம் வெஞ்சகம்—தெளிவு. சிறந்து மேம்பட்டு.

49-50 துஞ்சல்—அழிவு, சத்தியச்சோதி—உண்மை ஒளி

51 தஞ்சமது (பகுதிப்பொருள்விகுதி) தஞ்சம் பற்றுக்கோடு. விரித்து—நன்குவிவரமாக விரிவுரை செய்து.

52 விசுத்தம் தூய்மையுடைமை, இலகிய விளங்குகின்ற.

53 ஈசன் பதி. புற்கலன் பசு.(ஆன்மா) இசைந்து—ஒன்றுபட்டு. இருள்மலம்-மறைத்தலைப் புரியும் பாசம், அபிபவம் கீழ்படுத்துதல் (மேலெழாத வாறு செய்வது) ஈசன் துணை சிவசகாயம் (சிவ சத்தியுமாம்) பிரிப்பது நீக்குவது, பண்ணினன்—ஆக்கினன்.

54 எந்தை சிவபிரானாகிய பிதா, புரிந்தது இயற்றியது, சாற்றுதல் கூறுதல்.

55 அகற்றுழி நீங்கினவிடத்து, தீராத—நீங்காத. கண்டது—செய்தது

56 போக்கிபது—செலுத்தியது சருவகிருத்தியம் எல்லாச் செயல்களும்.

57 பிஞ்ஞகன்—பிஞ்ஞகக் கூத்துடையவன் (சிவபெருமான்) காணும்—செய்யப்பெறும்.

58 பந்தமிலாப்பரன்-அநாதிமலமுத்தன் இயல்பாகவே பாசங்களினின்று விடுபட்டவன்) பரை-பராசக்தி, அந்தம் இல் ஆனந்தம்—மோட்சம் (வீடு)

59 ஒன்றும் பொருந்தும். ஓங்கு உயிர் கீழ்நோக்காத மேனோக்குகின்ற உயிர் (ஞான நிலை யெய்தும் உயிர்)

(அ) துன்றுமலம்—நெருங்கிய பாசம்

60 இரதகுளிகை—இரசவேதி, சிதைத்து—கெடுத்து இம்பர்—இவ்விடம். தடுத்தது—தடைப்படுத்தியது. வம்பது—புதுமை.

(அ) உம்பர்கள்—தேவர்கள். விரோதம்—மாறுபாடு.

61 பம்பும் பரவும், பரிசு—தன்மை

62 காளிதம் களிம்பு, துலக்கும் விளக்கும், மலைக்கும் மாறுபடும், குளிகை—இரசவேதி (மாற்றும் பொருள்)

63 உள்பொருள்—என்றுமுளது. விளக்கம்—நன்கு தெளிதல். உரிக்குவர்—விலக்குவர். நல்மலம்—பரிபாகமுற்ற பாசம் (பக்குவப்பட்டது)

64 துளக்கல்—அசைத்தல், ஆணவத்துன்பம்—ஆணவமலத்தால் உண்டாம் வருத்தம். அஃதாவது உயிர்த்தன்மை (இயல்பு) புலப்படாவாறு தானேயாய் முனைந்து மறைத்து நிற்பது.

65 இயம்பிய-கூறிய. இறைவன்—எல்லாவுயிர்களிடத்துஞ் சென்று தங்கியதலைவன் [முதல்வன்] என்றிடின்—என்றுகூறுவையாயின், இசைத்தல்—சொல்லல், நாடின்—ஆராய்ந்து தெளிந்தால், இதுவும்—என்றது காரண நிகழ்ச்சியை

66 செப்பல்—மொழிதல், செவ்வானசத்தி—நேரிய ஆற்றலுடையசத்தி, ஒவ்வாது—பொருந்தாது, தவறு—பிழை.

67 தெருளல்—தெளிதல், மருளுடையோர் தெளியாதவர் (மயக்க முற்றவர்) அறைதல்—(நேர் நின்று தெளிந்ததெனக்) கூறுதல்

68 விளக்கம்—தீபச்சோதி, விதியல—முறை அல்ல, காண்—முன்னிலை யசைச்சொல், சிவன்—நலமாம் இன்பந்தருபவன், அறி-முன்னிலையேவல், அறிவாய்.

69 மாய்தல் அழிதல், களக்கம்—கலங்கல், (அசைவுடைமை) மாயை விரிந்து நிற்பது, (மறைப்பது) கார் கருமை (இருள்) சூது-வஞ்சம் (மயக்குவது) அஞ்ஞானம் அறியாமை,

70 நற்குயவன் கடத்துக்குக் காரணம் நிமித்தகாரணமாவன் (ஈண்டு முதற் காரணமன்றென்பது) துன்றுகடம்—பொருந்தியகுடம்.

71 கரி-கருமையுடையது (கரத்தையுடையது யானை)

72 மறி—மான் (செம்மறியுமாம்) அனவத்தை துன்பம் அற்றது, யோக்கியம்—தகுதி (தன்மை) காரியம்-செயல், தந்திடும்—புகுத்திடும்.

73 வழங்குவை—மொழிகுவாய், கந்துஅடுமா-கட்டுத்தறியை முறிக்கும் களிறு, சாதித்தல்—மறுக்கொணாதவாறு உறுதியுரைத்தல்.

74 குலாலன் குயவன் (சக்கிரி) ஆர் இருள் நிறைந்த இருள், பார் பூமி, நிகழ்தல்—உண்டாதல், பகர்தல்—கூறல்.

75 பன்னல்—கூறல், மன்னும்—நிலைபெறும், மறுக்கும்—தடுக்கும், ஆதித்தன்—சூரியன், துணிந்து இயம்பல் உறுதிப்படுத்திக் கூறல்.

76 ஆகம முத்தி-சித்தாந்த முத்தி, என்கை—என்றுரைத்தல், நாயிறு—ஞாயிறு என்பதன் திரிபு, (சூரியன்) பாகநல் முத்தர் இருவினையொப்பும் மலபரிபாகவும் உற்ற சத்திநிபாதத்து உத்தமர்கள், பண்பு—தன்மை.

77 சுந்தரம்—அழகு துலங்கிடும் விளங்கிடும், இறை-ஆண்டவன் (மக்கட் சட்டகம் தாங்கிவந்த ஆசிரியன்.)

(அ) அராகம் அவா (அடங்காமை) போந்து—வந்து, அனந்த விதம்-எண்ணில்லாதவகை மோகம் மதம் மாற்சரியம் குரோதம், உலோபம் கோபம் (இவை பகைவர்க்கம்) (இவறல், மானம் உவகை செருக்கு சினம் சிறுமை என்பனவாம்)

(ஆ) சிக்க—விலக்க, அமலன் தூய்மையானவன், செவ்விது நேர்மையானது திறன் வகை, அவ்வியம்-அழுக்காறு, வெவ்விய சூடான, தீவணன்—அக்கினி நிறமுடைய இறைவன், கிருத்தியம்—தொழில்.

(இ) ஐம்மலம் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி, ஐந்தொழில் படைப்பு, காப்பு, அழிப்பு, மறைப்பு, அருளல், புரிதல் செய்தல் ஆவது, மேன்மேல்வளர்தல், நடம் (நடனம்) கூத்து, ஆன்றவர் நற்குண நிறைந்தவர்.

(ஈ) பாரித்தல் உண்டாக்கல் (தோற்று வித்தல்) பரிசரித்தல்—காத்தல், தூய்மைச்சுகம்—மோட்சம், அடைப்பது—ஒருங்கிருக்க வைப்பது.

(உ) வினையறல்-மேலும் மேலும் இறப்புபிறப்பு உண்டு பண்ணும் நல்வினை தீவினைகள் ஒழிதல்

78 இருள்மலம்—மறைக்கும் பாசங்கள், பொன்ற அழிவுற, மயங்கினை—விளக்கமுற்றிடாது திரிவுபட்டாய், நன்று நல்லது.

79 துணித்தல் விட்டுவிடச் செய்தல் மன்னியது—நிலைத்தது, அன்னியம்—வேற்றுமை.

80 உன்னல் கருதல், அண்ணல்—பெருமான், மாற்றுக—போக்குக, ஆல—அசைநிலை.

81 முதிர்வு—நிறைவு, பின்னம் வேறுபாடு (சிதைவு) சின்மயன் ஞானவடிவினன், பெற்றிமை—தன்மை (இயல்பு).

82 அடர்த்தல் போக்குதல், சோதி—ஒளி, நித்தியன்—என்றுமுள்ளவன்(அழிவில்லாதவன்,)

(அ) முத்தர்—மல நீக்கமுற்றவர் (விடுபட்டவர்) மதித்தனம்—நன்மதிப்புச் செய்தோம் (வரையறுத்தோம்) இறைதனது ஆனந்தம்-சிவானந்தமுத்தி

83 காசினியோர்—உலகிலுள்ளவர், புருடார்த்தம்—மக்கட்கு உறுதியென உயர்ந்தோரான் எடுக்கப்பட்ட அறம், பொருள், இன்பம், வீடு என்பன. நிவர்த்தி-பிராயச்சித்தம், துறத்தல் (தன்னிடத்து அடைந்த பக்குவர்க்குச் சங்கற்பங்களை விடுவித்துத்திருப்பல்)

84 நாடுதல்—ஆராய்தல், நல்லோர்கள்—சீவன்முத்தர்கள். சென்றடையாத சிவானந்தம்—தானேயெய்வந்த பேரின்பசுகம், தெளிதல்—துணிதல்.

85 நாதம்—ஒலி (நாததத்துவம்) நயந்து அறிதல்—கேட்கவேண்டுமெனும் பெருவிருப்புடன் அறிதல் சிவத்துவம்—சிவத்தன்மை, கோது—குற்றம், பிரபஞ்சம்—உலகியல்

86 மாதுக்கம்—பிறப்பு இறப்புக்கள் இடையீடின்றி வருந்துன்பம், மன்னவன்—அரசன், பிராகிருதன்—ஆற்றலும் அறிவும் காதலுமில்லாதவன், பதைத்துஉழல்வன்—நடுக்கமுற்றுவருந்துவன்.

(அ) மறம்புரிய—கொடுஞ் செயல் செய்ய. நிரயம் நரகம் இன்னல்—துன்பம். எக்காலும்—எப்பொழுதும், இரங்குதல்—மனமினைதல்.

87 துலைத்தல்(தொலைத்தல்) போக்கல், அன்னவர்—அத்தன்மையர். மயங்குவர்—கலங்குவர், வெம்பாதகம்-கொடியதுரோகம், ஆய்தல்-ஆராய்தல்

88 களைந்திடல்—நீக்கல், வாட்ட—வருத்த. வீட்டி—கெடுத்து. நன்று-நன்மை, தானேயறிந்திடல்—சிவந்தானேயாய் அறிவது. கிருபை—அருள், கூட்டம்—குழு.

89 மந்திரம்-நினைப்பவனைக் காத்தலைப்புரிவது, அருந்தும்—நுகரும், அரன்பதம்—சிவபதம், (பதம்—நிலை) அடைத்தல—புகுத்தல்.

90 பிரபஞ்சம்—உலகத்துயிர்கள் பழி பழிக்கப்படுவது (நிந்தை) பரன்—மேலானவன் எழுகோடிமந்திரம்-நம, சுவாகா, பட் முதலியவற்றை ஈற்றிலுடைய மகாமநுக்கள், வழுவாது தவிராது மறத்தல்—நினைவற்றிருத்தல்.

91 இன்புருவம்—இன்பவடிவம், பரித்தல்—தாங்கல் பழுது—பயனிலது, (பழுது-பயமின்றே என்பது தொல்காப்பியம்) உனது உரை—சிவத்துமில்லாத—சீவத்துவமுடைய நின்னுடையமொழி,

(அ) உவகை—மகிழ்ச்சி அரன்-பாவங்களை யொழித்து மங்கலம் கொடுப்பவன் சொரூபம் வடிவம், வழங்கல் கூறுதல், இன்று இல்லை.

92 அநுபவம் நுகர்வு, சுகாதி—ஆனந்தாதீதம் (நலமுடையது) பெத்தர் பாசபந்தமுடையவர், முத்தர்—பாசபந்தமற்றவர்.

(அ) துன்றுவர்—நெருங்குவர், ஒன்றுதல், பொருந்துதல், உற்றிலை அடைந்தாயில்லை.

93 முந்தும்-முற்படும், பந்தமிலாப் பரன் வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முதல்வன் சத்தாய் - உள்ளதாய். பார்த்தல்—கண்டறிதல்.

(அ) இருவினையற்ற உயிர்ஒப்பன் இருவினை ஒப்பு வாய்ந்தவன், இசைத்தல்—கூறல் கருதரு காரணம் எண்ணற்கு முடியாத காரணம், தாணு-பற்றுக் கோடாயுள்ள பரன்.

94 ஞானாமிர்தம் அறிவாகிய அமிழ்து பிறப்பறுப்பது. மன்னியதோடம்—கூறிய குற்றம், பகர்ந்தது—கூறியது.

95 ஊனார் பிரபஞ்சம்-உடலோடு கூடிய உயிர்களையுடைய உலகம், ஆனாதகாரியம் நீங்காத செயல், ஞானாமிர்தம்-ஒருவகை ஞானநூல், (வாகீசமுனிவரால் ஆக்கப்பெற்றது) மான் ஆர் கரன்—மான் ஏந்திய திருக்கையினையுடைய சிவபெருமான்.

96 அத்தன்-தலைவன் (உலகபிதாவானவன்)பிராத்தி-மனசினாலே நினைத்த பொருளெல்லாம் முன்னே வந்திருப்பது, இட்டம்—விருப்பம்

(அ) அன்னவகை—அத்தன்மையான வகை, வேறு சுகம்—தனித்தசுகம், முன் குற்றங்கள் மனத்

தாலும் வாக்காலும், காயத்தாலும் வருங்குற்றங்கள், யாவும்—அனைத்தும் (முழுதும்)

(ஆ) சின்மயன்—அறிவுவடிவானவன், உலகு இன்பம்—சிற்றின்பம்

97 மூதறிஞர் பழுத்தபேரறிவுற்றவர், சித்தி-அட்டமா சித்திகள் கேவலம்—தனிமை என் (எவன்) யாது இயல்பு—தன்மை

98 அநுதினம் — நாள்தோறும், பாகம் — பக்குவம், தாகம்—வேட்கை, யூகம்—ஆராய்வு (உக்தி) சாற்றியது—மொழிந்தது.

99 ஞானக்கிரியை—அறிவுச்செயல், அகல்வது-நீங்குவது. ஊனம்—குறைவு, ஈனம்—இழிவு(தாழ்வு) மானம்—குற்றம்.

100 சுகவாசி — நலமுற்றிருப்பவன் வியாகரணம்— இயல்நூல், இவ்வணம்-என்பது இவணம் என்றாயது. விரோதம்—மாறுபாடு

101 சித்தி-சிவஞான சித்தியார்எனும் நூல், சாத்திரம்- உயிர்கட்கு நலத்தைக் கொடுத்தலாலும், பிறப்பு இறப்புக்களில் துயக்குறாது எடுக்கையாலும் இப்பெயர் உற்றது) சாதலைத் திரப்படுத்தி நிலைபேறுறலைக் கிளத்தலின் இப்பெயர் பெற்றதுபோலும்

102 தவம்—நோன்பு(மனம் பொறி வழி போகாமல் நிற்றற்பொருட்டு விரதங்களான் உண்டிசுருக்கலும் கோடைக்காலத்தில் வெய்யில் நிலை நிற்றலும் மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றால் தம்முயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்துப் பிற உயிர்களைப் பாதுகாப்பது. (மனத்திற்கும் பொறிக்கும் ஏகாக்கிரம் வருவிப்பது.)

(அ) நசித்தல் அழிதல் 'நன்றிசெய் முத்தி—பிறவா நெறிசெய்யும் பேரின்பம். சிவத்துவம்—சிவமாந் தன்மைப் பெருவாழ்வுர நன்னூல்—ஞானநெறி யினையே உணர்த்தும் (அறிவுறுத்தும்) சாத்திரப் பெருநூல்,, சிவாநுபவம்-சிவத்தோடு ஒன்றித்து நுகர்வது என்று இசைத்தல் — வற்புறுத்திக் கூறுவது.

(ஆ) கேவல ஞானம்—மோட்சந்தரும் அறிவு, (கைவல்லிய ஞானமென்பர்) கிளக்கும்—விதந்துரைக்கும் யோகிகள்-ஒன்றித்து நின்றவர், கேடு இல்பரமாவலன்-எவ்வாற்றாலும் அழியப் பெறாதவன் முழுமுதற்கடவுள் என்பதாம். வயங்குதல்-விளங்கள் இறைஞானம்—சிவஞானம் இயல்—இலக்கணம் இயம்ப அரிது—கூறமுடியாது

(இ) தருண உயிர்-பக்குவமுற்ற ஆன்மா. அருமறைகள் அறிதற்கரிய வேதங்கள். அருண உதயம்-சூரியோதயம் ஏழைகள் — அறிவுக்குறைந்தவர். இரணமொழி—பொன்போன்ற சொல்.

(ஈ) சிறுபோகம்—சிற்றின்பம், துய்த்திடல்—நுகர்தல் (அநுபவித்தல்) முற்றுஅறிவு—பேரறிவு, கழல் திருவடி, பிறவிப்பெருந்துயர்.... பிறவிப்பெரும் துன்பம், (பிறவிப் பெருங்கடல் என்பது திருக்குறள்), பெற்று ஒன்று உயிர்த்தான்—இடபம் எழுதியகொடியையுயர்த்தினோன் (சிவபெருமான் பரபோகம்-சிவானந்த வாழ்வு, பெற்றம் என அம்சாரியை பெற்றுவரும்.

(உ) எல்லாம்வல்ல இறைவனை அருளுருவான சிவன் எனவும், கருணைகருவினன் எனவும், ஒளி பொருந்திய மழுவாளி எனவும், பாசமொழித்து பசுக்களைப் பதித்துவமடையச் செய்பவன் எனவும் கூறப்பெற்றுள்ளது. தெருள்—தெளிவு

103 ஆர்உயிர்-மக்கட்பிறப்புற்று அதற்கேற்ற வகையில் அறியாமை முதலியன நீங்கப்பெற்று மேனிலை யெய்தமுதலும் ஆன்மா, நல் ஆனந்தம்—சிவப் பேறு. இன்றுளன—இல்லையென்று இயம்ப.

(அ) சுகானந்தம்-பேரின்பவாழ்வாம் இன்பம். பேர்உயிர்-பெரிய ஆன்மா. மகாத்மாவெனும் வடமொழிப் பொருளையுடையது. பெற்றிருக்கை—அடைந்தி ருப்பது. நீ—என்றது வினவலுறுதலைப்புரியும் மாணவகனை. இது முன்னிலை யொருமைப்பெயர்

104 கண்டு—கற்கண்டு (சர்க்கரைக் கட்டியாம்) இசைந் தோர்—அயிலுதலைச் செய்தவர். துன்பு அறுமுத் தர் — பாசவலிகெடுத்தவர் (உலகியலறிவுமுற்ற விடுபட்டவர்) அன்னியர்—ஏனையவர். தொகுப் பது-திரட்டுவது, இன்பம்-பேரின்ப சுகம் பேறு-பெறுவது.

105 நாடி—விரும்பி யாய்ந்து நல்கல்—கொடுத்தல்.

106 உளர்ஓ—இல்லை. ஓகாரம் எதிர்மறைப்பொருட்டு. முன்னவன்—இறைவன் உயிர்—பாசமற்ற தூய ஆத்மா. இன்பரூபம்—சுகவடிவம். அன்னியர் தானும்—அன்னியரும், தான் அசைநிலைப் பொருளது.

107 சடம்—அறியாமையுடையது, முருக்கு — முள் முருக்க மலர்—செவப்பாயிருக்கும், இதழ்வாய்—உதடு, (உருவப் பொருட்டு) (இதழ் போலும் அதரம்) வாயர்—இளமங்கையர், ஆடவர்-காளைப் பருவத்தினர், முயங்கல்—கூடல், பெருக்கம் இல் இன்பம் சிற்றின்ப சுகம், பெற்றி—தன்மை, சுருக்கம் இல் முத்தர்—பேரின்ப சுகத்திற்கான பெற்றியர், துய்ப்பர்—நுகர்வர்.

108 விளக்கிய—தெளிவுபடுத்தின, ஆய்இழை-ஆராயப் பட்ட அணிகலன்களையுடைய நங்கை, ஆணும் பெண்ணும் கூடி யநுபவிக்கப் பெறுவதே சுகம் சிற்றின்ப வாயிலான் பேரின்பத்திற்கு வகை வகுக்கப் பெறுகின்றது நோக்கல் வேண்டும் ஈண்டுச் சிவனும் சீவனும் கூடிச் சுகித்தலைப் பேரின்ப மெனப் பெறுகின்றது. இஃதொரு பெற்றித்தாய் அழிவிலதாய் என்று முளதாயிருப் பது, நீதி—முறை

109 இப்பாட்டு கற்கண்டு சுவைத்தாருக்கன்றி கண்டு இன்பு அறியாது, (ஆகவே சுவையுடையது) துன்றிய—நெருங்கிய, குணம்—தன்மை (பண்பு) சேயிழை—அணிகலன்களை யணிந்த பருவப் பெண், (அன்மொழித்தொகைப்பெயர்)

(அ) செருக்கும்—இறுமாக்கும், உயிர்தனில்—உயிர் இடத்து, அடுக்கும்—சாரச் செய்யும், மாதரும்—காதல் புரியும் பருவப் பெண்ணும், பெருக்கும் சுகம்—பேரின்ப நலம்.

110 சர்க்கரை எனில் இனிக்காது துய்ப்பின் இனிக்கும் அத்தன்மையைப் போல என்பார் சுகமறும் தன் மையைப் போல் என்றார். விருப்புறாது—இச்சை யடையாது உருத்தெழல்—கோபித்தெழுதல், தருக்குதல்—முனைத்தல், விடையம் (விடயம்) இந்திரியங்களால் அறியப் படும் பொருள், சாற் றுவார்...கூறுவர்.

(அ) ஒண்தொடி—ஒள்ளியவளையல் அணிந்த பருவப் பெண், (அன்மொழித்தொகை) உருத்து நெஞ்சு அழன்று, குருத்து—பெரும் கோபம் கொண்டு, கொள்கை—தன்மை (கோடல் தன்மை) அருக் கும்—ஒடுங்கும், அறைதல்—மொழிவது,

111 காயம்... (சரீரம்) உடம்பு, நன்று விளங்கிய... விளங்குமாறு தெளிவித்த, நன்று அல...நன்மையில ஆம், விசாரித்தல்—ஆராய்தல், நாசம்—அழிவு.

(அ) அணுப்பால்-உயிர்களிடத்து, மண்ணிற் சாருடல்... மக்கள் உடம்பு, எண்ணில்-கருதினால், கணிப்பு—அறுதியிட்டு எண்ணல் (கணிப்பு—கணித்தல்)

112 நிம்பம்—வேம்பு, நீடுயிர்—நெடிது வாழ் உயிர்கள், நய்பில்—விரும்பில், இம்பர்—இவ்விடம், கொல்—ஐயப்பொருளில் வந்தது, உயிர்க்குணம்—உயிர்த்தன்மை.

113 வம்பு—புதுமை, பரமுத்தி—சிவசாயுச்சியம், வேத்தி—வெளிப்படல், ஓர்ந்துகொள்—உணர்ந்திடுவாய், ஓர்தல்—உணர்தல்.

114 வாய்த்திருக்கை—கிடைத்திருத்தல். தவறு—பிழை, தோன்றல்—உண்டாதல், நயப்பு—விருப்பம், சுக துக்கம்—இன்ப துன்பம், உண்டாம்—உளதாகும்.

115 பெத்தன்—உலகியலோடுற்றவன், முத்தன்—உலகியல் முற்றவிட்டவன், பேதம்—வேற்றுமை. நித்தியம்—என்றுமுளது, வசனம்—வேத வாக்கியம், நிலைமை—நிலைத்தன்மை,

(அ) பிறைமவுலி அத்தன்-மூன்றாம் பிறைச்சந்திரனை முடியிலுடையவன் (சந்திரசேகரன்) இசைத்த வசனம்—ஆகம வசனம் (திருவாய் மலர்ந்தருளிய வாக்கியம்)

116 சேடப்பொருள் — அடிமைப்பட்டுக்கிடக்கும் பொருள் (மிச்சப்பொருள்), மகிழ்ந்து—களிப்புற்று விடயம், அதன் குணம் — இந்திரியங்களின் தன்மை.

117 தடை—தடங்கல், இடையின்றிப்புல்கல்—யாற்றொழுக்குப்போல இடையறவுபடுதல் இல்லாதபடி சிவயோகத்தமர்ந்திருத்தல், இறை இன்பம்—சிவமாந்தன்மைப் பெருவாழ்வு தள்ளல்—நீக்கல், உறா—அடையா.

118 சமம்—ஒப்பு, அத்தனைப்போல—சிவனைப்போல, நிகழ்த்தியது — கூறியது, சித்தன் — அறிவு மயமானவன், செப்பல்-மொழிதல்.

(அ) இன்ப துன்பம் உயிர்க்குணமேயன்றி இறை தன் குணமன்றாம், இன்பமும் துன்பமும் இல்லானே என்பதும் உள்ளானே என்பதும் கருதத்தக்க தாம். மிகையறல்—குற்றம் நீங்கல்; இரண்டும் இன்ப துன்பமாகிய இரண்டும், தகஉற்றவர்—பொருந்தப் பெற்றவர்' அரன்தாள்-சிவன்சேவடி வேறுஇலை—தனியே கிடையாது.

(ஆ) உத்தமம்—மேலானது, முத்தன் விடுதலை பெற்றவன், சிவாகமம்—ஈசானம் ஆதி முகங்களால் கூறப்பட்ட இருபத்தெட்டுக் காமிகாதியாகமங்களாம்.

119 அருந்தி—நுகர்ந்து, பிறிவிலன் (பிரிவிலன்)... நீக்கமற்றவன், (நீக்கமற நிற்பவன்) சுத்தன்... தூயன், முத்தியின் தன்மை—முத்தி (மோட்ச) இலக்கணம், மொழிந்த சொல் பயனிலவென்பது கருத்து.

120 அரன்சமம் - சிவசமவாதம், (புரிதல் கூடாது) என்பது கருத்து, என்றுமலம் விட்டிருப்பன்... அநாதிமல முத்தன் என்னுஞ் சொல்லுக்குப் பொருள் அதுவேயாம். இசைத்தது இயம்பினது, ஞானம் அன்று...அறிவுடைமை ஆகாது.

(அ) சிவன்சமம் எனில், நான்கு கைகளும் காளகண்டமும் முக்கண்ணும் உடைமை வேண்டும், அவ்வணமில்லாத போழ்தின் எங்ஙனம் உரைத்தல் ஒன்றும் கூடாது என்பதாம், முற்றுவமை-(பூர்ணவுவமை) நிறையுவமை, பவன்—சிவன், உற்பத்தி யுண்டுபண்ணுபவன்) ஒருபொருள்—அபேதமானது, பகர்தல்—மொழிதல்.

121 கிரியை—செயல், (வினை) ஆவரித்தல்—மறைத்தல், பரிபாகம் — ஏற்றபக்குவம், தூயஅரன் நின்மலசிவன், பொன்றுதலைச் செய்யும் அழிதலைப் புரியும், அறைகின்ற கூறுகின்ற.

122 இப்பாட்டானது, உயிரியல் ஒருவகையானுரைக்கின்றது, அறிவிப்பவன் — ஆண்டவன், அறிவிக்க அறிபவை — உயிர்கள், (தானேயறியும் ஆற்றலற்றவை) அழிவின்றி நிற்றல் நித்தியப் பொருளாயிருத்தல், (என்றுமறியாதவை உயிர்கள்) பதிபசுபாசம் என்பவை அநாதி நித்தியம் என்பது, சித்தாந்த வழக்கு (மரபு) குறி—நாமம் (பெயர்) நெறியுற்ற சித்தியார்—சிவஞானபோதவழிநூலாய்த் திகழ்வது, (தருமபுரத்துக் குரு மரபு சிவஞானசித்தி நெறிகாட்டுவதாம் எனக் கூறுவதுண்டு), சித்து—அறிவு சத்து—உள்ளது, (அறிவுப் பொருள் உண்மைப் பொருள்) பேசுமினே என்பது பேசுமின்னே, என்பது விரித்தல் விகாரம், ஏகாரம் ஈற்றசை உயிர்—உயிர்ப்பது (உணர்வுடையது).

123 இன்ப சுரும்பு—இன்பமலை, அவ்வண்ணம்-அத்தன்மை, தேசு—ஒளி, (ஞானஒளி, இவண் செப்பியது—இங்கு உரைத்தது, நாசம் இலா அரன் அநாதி நித்தியன் என்னும் பொருளது.

124 இப்பாடல், எண்சீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம் (ஏனையவை) முன்னுள்ளவை யெல்லாம் கட்டளைக் கலித்துறைச் செய்யுளாம், உயிர் காணும் ஆன்மா அறியும். உரித்து...உரிமை யுடையது, பரம் பார்த்திருக்கும் சிவஞானிகள் சீவபோதமற்று சிவமாய்த் திகழ்வர் ஆகலின் தங்களைப் பாரார் என்றனர், பரவுதல்... தோத்தரித்தல், சுவாநு பூதிகம் — தன்முயற்சியால் பெற்றுக் கொண்ட அறிவு, தனக்குப் பின்புண்டாம் ஐசுவரியம் சிவஞானம்—பதிஞானம், கலைகளையும் அவற்றிற்குக் காரணமாயிருக்கின்ற மாயையும் நீங்கிச் சிவனுடைய பராசத்திபதிய அதனாலே. ஆணவ முதலிய மலங்கள் நீங்கி ஞானதிருட்டியினாலே சிவனையும் சக்தியையும் தன்னையும் அனைத்தையும் ஆன்மாவிலே காண்பது, மயல்—மல மயக்கம், மலரடிக்கீழ் இருத்தல் — திருவடி நிழலில் ஒன்றியிருத்தல், மாறாத மாறுபாடுறாத மருவி—ஒன்றி (பொருந்தி)

125 நல்சித்தி சிவஞான சித்தியார் எனு நூல், துணிந்தறிதல்—தெளிந்துணர்தல், முன்னவன் ஆனந்தம்—சிவானந்தம், பின்னம்—பேதம். சிவானந்த முத்தி—பேராவியற்கை யெனப் பேசப்பெறும் பரமுத்தி

(அ) வனையும் அணிசெய்யும், கழல்–வீரக்கழல் புனையும் மேற்கொளும், சுதந்திரம் தன்வசம், இனையும்–இத்தன்மையும் (வருந்தும்) நனையும் தேனால் நனைந்த (முழுகின) நயம்—நன்மை.

126 இப்பாடல்—நீரும் நீரும் சேர்ந்தாற்போல சிவனும் சீவனும் ஒன்றுபடக் கூடியிருப்பது போற்றத்தக்கது, அரன் கழல் கூடல் சிவன

சேவடி சேர்தல், ஆரும் தொழுபதம் — எத்தே வரும் ஏத்தும் இணையடிகள், தேரும்—தெளியும் சித்திக்கும்—உண்டாகும்.

127 இருள் அறுதல்—மாயையாம் படல இருள் நீங்கப் பெறல், சிவமே கண்டிருத்தல் — சிவயோகத் தமர்ந்து காண்பது, பிரிவு இல்—வேறுபடாத, (நீங்கல் அற்ற) கரிசு குற்றம், கருதுபவர் எண்ணுவர்.

128 ஆறாப்பரம்—தணியப் பெறாத பரம்பொருள் என்றது சிவத்தை, பதார்த்தம்—பொருள், கீறு— பிரிவு (கூற்று) மலநீங்கலாவது, மலவாதனையற் றிருத்தல், வயிந்தவம்—சுத்தமாயாபுவனம், ஆவி- உயிர், தேறாக் களக்கம்—தெளியாத கலக்கம் தேர்ந்தனம்—தெளிவினையுற்றோம்.

(அ) அரன் ஆவி—சிவனும் சீவனும், மூடிய—மறைத் தலைப் புரிந்த, பரிபாகம்—ஏற்ற பக்குவம், அதை நீக்கிட—மல நோயை விலக்கிட, பிரிவு அரும் ஆனந்தம்—ஒற்றித்த பரமசுகம், மென்குணம்— மெல்லிய தன்மை.

(ஆ) அண்ணல்—பரமேசுரன், சொரூபி—வடிவுடையவன் ஆரணம்—வேதங்கள், உயிர்தன்னை பக்குவ முற்ற ஆன்மாக்களை, புண்ணிய முத்தர் என்றது, பாசபுண்ணியம் பசுபுண்ணியம் விட்டுப் பதியாகிய சிவபுண்ணியம் செய்யும் சீவன் முத்தர்களை, முக் கண்ணன்—சோமன் சூரியன் அக்கினியாகிய முச் சுடர்களையும் கண்ணாகவுடைய இறைவன், ஆய் தல்-முப்பொருளின் இயலினை ஆராய்தல், கண்டு கொள்ளலாவது — துணிந்து பற்றிக் கொள்வது.

129 உன்னும்—கருதுதலைச் செய்யும். சிவன் தனது ஆனந்தம்—சிவத்துவ, மெய்தியிருக்கும் இன்பம், உவந்து சிவமாம் களிப்பெய்தி, பின்னம் இல்லாமல் இருத்தல் அபேதமாயிருப்ப,து (ஒன்றுபட்டிருப்பது), ஆகமம் பேசுதலாவது—சிவாகமங்கள் ஐயம் திரிபு அறியாமை எனும் முக்குற்றங்களும் அற முப்பொருள் இயலினைத் தெரிவித்துரைப்பது, முத்தி—பரமுத்தி, சாயுச்சியப் பேறு ஆம்—ஆகும் என்பது ஆம் எனவந்தது, என்றும் என்றுரைக்கும்.

அருஞ்சொல் விளக்கவுரை முற்றும்